விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 08 ஞாயிற்றுக்கிழமை (21.04.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 123

## கட்டுப்பாட்டை இழந்த மோ.சைக்கிள் முச்சக்கரவண்டியுடன் மோதி விபத்து
### இளைஞன் பலி; உரும்பிராயில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)
மோட்டார் சைக்கிள் ஒன்றும் முச்சக்கரவண்டி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த நிலையில் மற்றொருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவி 16

## ஜெனிவா தீர்மானம்; அரசியல் தீர்வு குறித்து
### தமிழரசுக்கட்சி மாநாட்டுக்கு பின் முக்கிய முடிவு - மாவை

(வவுனியா)
தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு பின்னர் அரசியல் தீர்வு மற்றும் ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாமை உள்ளிட்ட விடயங்களுக்கு தமிழரசுக் கட்சி முக்கிய முடிவு எடுக்கும் என தமிழரசுக் கட்சித் தலைவரும், 15

## புலிகளின் பாடல்களை இசைத்த கலைஞர்கள்
### பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் விசாரணைக்காக அழைப்பு

(யாழ்ப்பாணம்)
வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலய மகோற்சவப் பெருவிழாவில் தமிழீழ விடு 16

# முடிந்தால் மீண்டும் அமெரிக்காவுக்குள் வந்து காட்டுங்கள்!
## கோத்தபாயவுக்கு பகிரங்க சவால்விட்ட ஐ.நா முன்னாள் அதிகாரி யஸ்மின் சுகா



(வாஷிங்டன்) முடிந்தால் அமெரிக்காவுக்குள் மீண்டும் ஒருமுறை வந்து காட்டுமாறு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஐக்கிய நாடுகளின் முன்னாள் அதிகாரி யஸ்மின் சுகா பகிரங்க சவால் விடுத்துள்ளார். (15-ம் பக்கம்...)

## கடந்த பத்து நாட்களில் நாட்டில் 700 விபத்துக்கள்
### 81 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)
கடந்த பத்து நாட்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 81 பேர் உயிரிழந்திருப்பதாக போக்குவரத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் 15

## 113 வயது மூதாட்டி யாழில் காலமானார்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் 113 வயதில் மூதாட்டி ஒருவர் நேற்று முன்தினம் காலமாகியுள்ளார்.
காங்கேசன் துறை தையிட்டியைச் சேர்ந்த சின்னத்துரை சிவபாக்கியம் என்ற மூதாட்டியே உயிரிழந்துள்ளார். 16

அன்பு வாசகர்களே...

வலம்புரி புருசோத்தமனுக்கு கம்பவாரிதி எழுதும் அரமடல் நாளை முதல் உங்கள் வலம்புரியில் வாசிக்கத் தவறாதீர்கள்...!

### விடுதலைப் போரில் பங்கேற்பதற்காக
## இளைஞர் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது
### மாவை சேனாதிராசா தெரிவிப்பு



(வவுனியா)
எமது விடுதலைப் போரில் பங்கேற்பதற்காக இளைஞர் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதி 15

## யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளராக
### வைத்தியர் சத்தியமூர்த்தி நியமனம்



(யாழ்ப்பாணம்)
யாழ்மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்தியர் சத்தியமூர்த்தி நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.
கடந்த வருடம் யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றிய வைத்தியர் நந்தகுமரன் இடமாற்றம் 15

## ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை

(முல்லைத்தீவு)
வட்டுவாகல் கடற்படையினர் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைவாக ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் முல்லைத்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
கடந்த 7 ஆம் திகதி வட்டுவாகல் கோத்தபாய கடற்படை 16

## போர்க்குற்றச்சாட்டிலிருந்து மகிந்த, கோத்தாவை 10 வருடமாக கூட்டமைப்பே காப்பாற்றுகின்றது
### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)
பொறுப்புக்கூறல் விடயத்தில் தமிழ் மக்களிற்கு இன்று பிரதான தடையாக இருப்பது தமிழ்த் தேசிய கூட்டமைப்புத்தான். கடந்த 10 வருடமாக பொறுப்புக்கூறல் விடயத்தில் மகிந்த, கோத்தபாய ராஜபக்ஷ போன்ற போர்க்குற்றவாளிகளை காப்பாற்றியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான். பாதிக்கப்பட்ட மக்களிற்கு எப்படியான நீதி தேவையென கோரும் உரிமையுள்ள நிலையில், தமது எஜமான்களான வல்லரசுகளின் விருப்பப்படி பாதிக் 15

### வைத்தியசாலையில்
## அனைவரையும் பதிவு செய்வதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை

(வவுனியா)
அனைத்து நபர்களையும் அருகிலுள்ள வைத்தியசாலைகளில் பதிவு செய்வதற்கான புதிய திட்டமொன்றை சுகாதார அமைச்சு நடைமுறைப்படுத்தவுள்ளது. இந்த வேலைத்திட்டம் எதிர் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



அமரர் திருமதி
**சின்னத்துரை சிவபாக்கியம்**

பிறப்பு : 06.06.1906
இறப்பு : 19.04.2019

அவர்கள் நேற்று 19.04.2019 வெள்ளிக்கிழமை தனது 113 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கலாவல்லி சனசமூக நிலையம்
தையிட்டி கிழக்கு
கிராம முன்னேற்றச் சங்கம்
தையிட்டி கிழக்கு

(8337)

## பிரதேச வைத்தியசாலை, வரணி
## நோயாளர் நலன்புரிச்சங்கம்
## வருடாந்த பொதுக்கூட்டம் - 2019

காலம் : 28.04.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி
இடம் : வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு

1. அங்கத்தவர்கள் மட்டும் கூட்டத்தில் பங்கேற்க முடியும்
2. பிரேரணைகள் 23.04.2019 ற்கு முன்னர் செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.
3. புதிதாக அங்கத்தவராக சேர விரும்புபவர்கள் அங்கத்துவப்படிவத்தை நிரப்பி செயலாளரிடம் ஒப்படைக்கவேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (I) | ஆயுட்சந்தா | - | 1000.00 | ரூபாய் |
| (II) | ஆண்டுச்சந்தா | - | 200.00 | ரூபாய் |

குறிப்பு :- ஆண்டு சந்தா அங்கத்தவர்கள் அனைவரும் 2019ஆம் ஆண்டிற்கான சந்தா பணத்தை பெருளாளரிடம் செலுத்தி அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

செயலாளர் (C-6180) பொருளாளர் – 077 2178734

சிவமயம்

## இரண்டாம் ஆண்டு நினைவில் எம் குலவிளக்கு

கடந்த 13.05.2017 அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர் சைவசித்தாந்த முதுகலைமாணி (M.A), ஆன்மீகச் சொற்பொழிவாளர், புராணபடன ஓதுவார், இந்து நாகரிக இந்துசமய பாட ஆசிரியர்

# நித்தியானந்தன் தசீதரன்

(நித்தியதசீதரன், என்.ரி.தரன்)
(கௌரவ செயலாளர் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்)





அகத்தின் அழகு முகத்தில் தெரியும் பண்ணிய பயிரில்
புண்ணியம் தெரியும் என்பார்கள்
நித்தியானந்தப் பெருவாழ்வில் நித்திய தசீதரனாகி
சைவப்புலவனாகி சைவ நெறியில் ஆசானாகி
சைவ சித்தாந்த தெளிவில் பண்டிதனாகி
சைவசமயாசார சொற்பொழிவாளனாகி
பல்வேறு ஆலயங்களில் பொற்கிளியும் பட்டமும்வாங்கி
வந்து பறந்தனயோ
குடும்பம் ஓர் கோயிலாக விளங்கிய நீ ஆத்மாவின்
தரிசனம் ஆனாயோ
கலங்கரை விளக்காய் பிரகாசித்த நீ மக்களின்
செல்வமாகி மழலைச் செல்வங்கள் மிளிரும்
நேரம் மறந்தாயோ
தெய்வீக மணம் கமழும் உனது பேச்சாற்றல்
எங்கே... திருநீற்றொளி வீசும் உனது அழகிய
முகம் எங்கே வந்தனையும் வல்வினையும்
நீக்கியருளும் உருத்திராட்சம் எங்கே
உனது மார்பில் துலங்கும் சிந்தாமணி எங்கே
முத்தமிழால் வாரி இறைத்த உனது நாவன்மை எங்கே
பசுந்தமிழால் இறைவனைப் பேசி வர்ணித்தாயே
உன் புகழை எத்தமிழால் பாடமுடியும் வர்ணிக்க முடியும்
ஆனதோர் உன்புகழை பேசவும் முடியவில்லை
வர்ணிக்கவும் வார்த்தையில்லை
எங்கள் குடும்பத் தெய்வமே உமையிழந்து ஆண்டு
இரண்டு ஆனது என்பதுவும் ஏற்கவும் முடியவில்லை
எம்முடனே திரும்பி வந்திட மாட்டாயா ஏங்குகின்றோம்
எங்கள் தலைவா சிவப்பரம்பொருளே.........

இங்ஙனம் : குடும்பத்தினர்
பன்னாலை, தெல்லிப்பழை.

(C-6181)

## யாழ்ப்பாணக் கல்லூரி தயாரித்து வழங்கும் சடங்கு நிலை ஆற்றுகை (Pass)

JAFFNA COLLEGE · CEYLON · 1823 · 1872 · JESUS LIGHT CHRIST OF THE LIFE



சிலுவையில் சிதறுண்ட நாயகன்

(C-6182)

பஜனையையும் திருப்பாடுகளின் காட்சியையும் கண்டு களிக்க

காலம் : 21.04.2019
நேரம் : மாலை 5.30
இடம் : யாழ்ப்பாணக்கல்லூரி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## மரண அறிவித்தல்

## கிட்டிணன் இராசரத்தினம்



(8528)

பலாலியை பிறப்பிடமாகவும் நல்லூரரை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணன் இராசரத்தினம் 19.04.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கிட்டிணன் - சீதேவி தம்பதிகளின் அன்பு மகனும், தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், ரகுநாதன் (கனடா), ஜெயநாதன் (நாதன் காட்வெயார்), யோகநாதன் (லண்டன்), கமலநாதன், நிமலநாதன், அனுஷா (லண்டன்), அனுதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிஷாந்தினி (கனடா), சுபாஜினி, சர்மினி (லண்டன்), மதுரா (ஆசிரியர்), றஜீவா ஆகியோரின் மாமனாரும், டதுஷா, அக்ஷயா, இஷானிக்கா, ஜினோசன், கிஷாணா, றஜிஸ்னா, டிசாரா, டிலுக்ஷன், மோனிக்கா, தரனீஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பின்னர் அறியத்தரப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

219, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 0212225884, நிமல் : 0779773264 தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் இருப்பை உறுதிப்படுத்து!

## மட்டக்களப்பில் மாபெரும் கண்டனப் பேரணி







(ஏறாவூர்)

'தமிழர்களின் இருப்பை உறுதிப்படுத்துவதற்கான பயணம்' எனும் தொனிப்பொருளில் முற்போக்கு தமிழர் அமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் நேற்று மாபெரும் கண்டன பேரணி இடம்பெற்றது.

இந்தப் பேரணி நேற்று சனிக்கிழமை காலை வாவிக்கரை பூங்காவிலிருந்து ஆரம்பமானது.

அத்தோடு இப்பேரணி அரசடி சந்தியினூடாக மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தை சென்றடைந்து அங்கு விழிப்புணர்வு தெளிவூட்டலும் இடம்பெற்றது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரம் உயர்த்த வேண்டும், நில வளத்தை சூறையாடும் கதிரவெளி இல்மனைட் கனியவள அகழ்வு மற்றும் கல்குடா எரிசாராயம் தொழிற்சாலையை நிறுத்துமாறும் கோரிக்கை விடுத்தே இந்த பேரணி இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு எதிர்ப்பு வாசகங்கள் கொண்ட பதாகைகளையும் பேரணியில் கலந்து கொண்டவர்கள் ஏந்தியிருந்ததுடன் எதிர்ப்பு கோசங்களையும் எழுப்பினர்.

இந்த கண்டன பேரணியில் தமிழர் முற்போக்கு அமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.வியாழேந்திரன் உட்பட மாநகரசபை, பிரதேசசபை உறுப்பினர்கள், இளைஞர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ)

## பட்டப்பகலில் வீட்டில் திருட்டு

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டையில் பட்டப் பகலில் வீட்டில் எவரும் இல்லாத வேளை 5 பவுண் தங்க நகையும் 50 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டை கூழாவடிக்கு அண்மையில் ஒழுங்கையிலுள்ள வீடொன்றிலேயே நேற்று சனிக்கிழமை காலை 9 மணிக்கும் நண் பகல் 12 மணிக்கும் இடையே இந்தத் திருட்டு இடம் பெற்றுள்ளது.

வீட்டில் வசிப்பவர்கள் வெளியில் சென்றிருந்த வேளை வீட்டுக்குள் உள்நுழைந்த திருடர்கள், அலுமாரியை சல்லடை போட்டுத்தேடி அதில் வைக்கப்பட்டிருந்த 5 பவுண் தங்க நகைகள் மற்றும் 50 ஆயிரம் ரூபா பணத்தைத் திருடிக் கொண்டு தப்பித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (இ)

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி. சிவநேசரத்தினம் குணரட்ணம்

(இளைப்பாறிய பிரதி அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி)

பிறப்பு 1943.11.01 இறப்பு 2019.04.16

எமது நண்பன் குணரத்தினம் பார்த்தீபன் அவர்களது தாயார் திருமதி.சிவநேசரத்தினம் குணரட்ணம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மீளாத்துயரடைந்தோம். பார்த்தீபன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எமது அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

நட்பென்ற உணர்வினைக்க,
நண்பனவன் நலன் சிறக்க,
எண்ணமுடன் செயல்புரியும்,
நண்பரென இணைந்திருப்போம்,
நட்பதில் நாளும் கலந்திருப்போம்,
கலங்கவிடோம் கரங்கொடுப்போம்!

(5832)

**யாழ்.இந்து 94 A/L நண்பர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஸ்ரேயாஸ், தவான் அரைச்சதம்

# கோட்லாவில் டில்லி கோலாகலம்


அரைச்சதமடித்த டில்லியின் அணித் தலைவர் ஸ்ரேயாஸ்

பஞ்சாப் அணிக்கு எதிரான ஐ.பி.எல்., தொடரின் லீக் போட்டியில் ஷிகர் தவான், அணித் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர் அரைச்சதம் கடந்து கைகொடுக்க டில்லி அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்தியாவில், பிரிமியர் கிரிக்கெட் தொடருக்கான 12வது சீசன் நடக்கிறது. டில்லியில் உள்ள பெரேஷா கொட்லா மைதானத் தில் நடந்த லீக் போட்டியில் டில்லி, பஞ்சாப் அணிகள் மோதின.

டில்லி அணியில் கொலின் மன்ரோ, கிறிஸ் மோரிஸ், கீமோ போல் நீக்கப்பட்டு கொலின் இங்ராம், ஷெர்பேன் ரூதர்போர்ட், சந்தீப் லமிச்சானே சேர்க்கப்பட்டனர். பஞ்சாப் அணியில் நிக்கோலஸ் பூரன், முஜீப் உர் ரஹ்மான், அர்ஷ தீப் சிங் ஆகியோருக்கு பதிலாக சாம் கர்ரான், ஹர்பிரீத் பிரார், ஹார்டஸ் வில்ஜோயன் இடம் பிடித்தனர்.

நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி அணியின் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர், களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**ராகுல் ஏமாற்றம்**

பஞ்சாப் அணிக்கு லோகேஷ் ராகுல், கிறிஸ் கெய்ல் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. லமிச்சானே வீசிய 2வது ஓவரில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த ராகுல் (12) நிலைக்கவில்லை. இஷாந்த் சர்மா வீசிய 3வது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி விளாசிய கெய்ல், லமிச்சானே வீசிய 4வது ஓவரில் 4 பவுண்டரி அடித்தார். ரபாடா 'வேகத்தில்' மயாங்க் அகர்வால் (2) வெளியேறினார். அக்சர் படேல் 'சுழலில்' டேவிட் மில்லர் (7) சிக்கினார்.

**கெய்ல் விளாசல்**

அமித் மிஸ்ரா வீசிய 9வது ஓவரில் 2 சிக்சர் பறக்கவிட்ட கெய்ல், பிரிமியர் அரங்கில் தனது 28வது அரைசதமடித்தார். லமிச்சானே வீசிய 13வது ஓவரின் முதல் பந்தில் சிக்சர் அடித்த கெய்ல் (69), 2வது பந்தில் அவுட்டானார். இந்த ஓவரின் கடைசி பந்தில் சாம் கர்ரான் 'டக்-அவுட்' ஆனார். தலா ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த மன்தீப் சிங் (30), அக்சர் படேலிடம் சரணடைந்தார். அடுத்து வந்த ஹர்பிரீத் பிரார், அக்சர் படேல், இஷாந்த் பந்தில் தலா ஒரு பவுண்டரி விளாசி னார். ரபாடா வீசிய 20வது ஓவரின் முதல் பந்தில் அணித் தலைவர் அஷ்வின் (16) அவுட்டானார். கடைசி பந்தை ஹர்பிரீத் சிக்சருக்கு அனுப் பினார்.

பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்கள் எடுத்தது. ஹர்பிரீத் (20), வில்ஜோயன் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் டில்லி அணி சார்பில் லமிச்சானே 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

**தவான் அரைசதம்**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய டில்லி அணிக்கு பிரித்வி ஷா (13) கைகொடுக்கவில்லை. வில்ஜோயன் வீசிய 4வது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி அடித்த ஷிகர் தவான், ஹர்பிரீத் பிரார் பந்தில் ஒரு சிக்சர் விளாசினார். அடுத்து வந்த அணித் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர், ஹர்பிரீத் வீசிய 5வது ஓவரில் 2 பவுண்டரி அடித்தார். அபாரமாக ஆடிய தவான் அரைசதமடித்தார். இரண்டாவது விக்கெட்டுக்காக 92 ஓட்டங்கள் சேர்த்தபோது வில்ஜோயன் பந்தில் தவான் (56) ஆட்டமிழந்தார்.

**ஸ்ரேயாஸ் நம்பிக்கை**

ரிஷாப் பன்ட் (6) நிலைக்கவில்லை. வில்ஜோயன் வீசிய 18வது ஓவரில் 3 பவுண்டரி அடித்தார் கொலின் இங்ராம். பொறுப்பாக ஆடிய ஸ்ரேயாஸ், தன்பங்கிற்கு அரைசதமடித் தார். மொஹமட் ஷமி 'வேகத்தில்' இங்ராம் (19) போல் டானார். அக்சர் படேல் (1) 'ரன்-அவுட்' ஆனார். கடைசி ஓவரில் 6 ஓட்டங்கள் தேவைப்பட்டது. சாம் கர்ரான் வீசிய 20வது ஓவரின் முதல் 3 பந்துகளில் 4 ஓட்டங்கள் கிடைத்தது. நான் காவது பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய ஸ்ரேயாஸ் வெற்றியை உறுதி செய்தார்.

டில்லி அணி 19.4 ஓவர்களில், 5 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஸ்ரேயாஸ் (58), ரூதர்போர்ட் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.




## ரசிகர்கள் 'கல்வரம்' 'வீரர்கள் சோகம்'





ஆறாவது உலக கிண்ணத் தொடரை இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் இணைந்து நடத்தின.

இத்தொடரின் போது கொழும்பு, மத்திய வங்கியில் நடந்த குண்டுவெடிப்பில் 91 பேர் கொல்லப்பட்டனர். இதனால் அவுஸ்திரேலியா, மே.தீவுகள் அணிகள் அங்கு சென்று விளை யாட மறுக்க, இலங்கை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இத்தொடரில் முதல் 15 ஓவர் களத்தடுப்பு கட்டுப்பாட்டை பயன்படுத்தி, இலங்கை அணி யின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் ஜெயசூர்ய, களுவிதாரன ஓட்டமழை பொழிந்து அணி யின் வெற்றிக்கு உதவினர்.

**ரசிகர்கள் கலவரம்**

பெங்களூரில் நடந்த காலிறுதியில் சித்து 93 ஓட்டங்கள் விளாச இந்திய அணி (287/8), பாகிஸ்தானை (248/9) வீழ்த்தி, அரையிறுதிக்கு முன்னேறியது. கொல்கத்தா, ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த இப் போட்டியில் இந்தியா, இலங்கை மோதின.

இலங்கை அணியின் (251/8) இலக்கை துரத்திய இந்திய அணி ஒரு கட்டத்தில் 98/1 என வலுவாக இருந்தது. பின் திடீரென சரிவு ஏற்பட்டது. அடுத்து 22 ஓட்டங்களை எடுப்பதற்குள் 7 விக்கெட்டுகளை இழந்து 120/8 என ஆனது.

> **தெரியுமா**
>
> **கபில் '175'**
>
> கடந்த 1983, உலக கிண்ணத் தொட ரின் முதல் லீக் போட்டியில் சிம்பாப்வேக்கு எதிராக இந்தியா (17/5 ஓட்டங்கள்) தடுமாறியது. அணித் தலைவர் கபில் தேவ் 175 ஓட்டங்கள் (138 பந்து, 6 சிக்சர், 16 பவுண்டரி) விளாசி வெற்றி பெற்றுக் கொடுத்தார்.
>
> போட்டி நடந்த தினம் பி.பி.சி., சனல் ஊழியர்கள் 'ஸ்டிரைக்' செய்ததால், கபில் தேவ் ஆட்டம் வீடியோவில் பதிவு செய்யப் படவில்லை. இதனால் இவரது ஆட்டத்தை மீண்டும் காணும் வாய்ப்பு யாருக்கும் கிடைக்கவில்லை.

இதனால் அதிர்ச்சி அடைந்த ஒரு லட்சத் துக்கும் அதிகமான ரசிகர்கள் ரகளையில் ஈடுபட்டனர். போட்டி நிறுத்தப்பட்டது. இலங்கை வென்றதாக அறிவிக்கப்பட, இந்திய வீரர்கள் சோகத்தில் மூழ்கினர்.

லாகூரில் நடந்த இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 241/7 ஓட்டங்களை எடுத்தது. பின் அரவிந்த் டி சில்வா (107) சதம் அடிக்க இலங்கை அணி 46.2 ஓவரில் 245 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, முதன் முறையாக உலக சம்பியன் ஆனது.

## ஸ்மித் விளாசல்

## ராஜஸ்தான் வெற்றி

### வீழ்ந்தது மும்பை


ஸ்ரீவ் ஸ்மித்

ஐ.பி.எல்., தொடரில் மூன்றாவது வெற்றி பெற்றது ராஜஸ்தான். நேற்று நடந்த லீக் போட்டியில் மும்பை அணியை 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. ஸ்மித் அரைச்சதம் அடித்து கைகொடுத்தார்.

ஐ.பி.எல்., தொடரின் 12வது சீசன் தற் போது நடக்கிறது. நேற்று ஜெய்ப்பூரில் நடந்த லீக் போட்டியில் மும்பை, ராஜஸ்தான் அணி கள் பலப்பரீட்சை நடத்தின. நீண்ட இடை வெளிக்குப் பின் அணித் தலைவராக கள மிறங்கிய ஸ்மித், நாணயச்சுழற்சியில் வென்று களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**குயின்ரன் அபாரம்**

மும்பை அணிக்கு குயின்ரன் டி கொக், அணித் தலைவர் ரோகித் சர்மா ஜோடி சுமா ரான ஆரம்பம் கொடுத்தது. ஸ்ரேயாஸ் கோபால் பந்தில் பவுண்டரி அடித்த ரோகித் (5), அடுத்த பந்தில் அவரிடமே 'பிடி' கொடுத் தார். மறுபக்கம் ஓட்டமழை பொழிந்த குயின்ரன் 34வது பந்தில் அரைசதம் எட்டினார். இத்தொடரில் இவர் அடித்த 3வது அரைசதம் இது.

சூர்யகுமார் 34 ஓட்டங்கள் எடுக்க, கோபால் சுழலில் குயின்ரன் (65) சிக்கி னார். பொலார்ட் (10) ஏமாற்றினார். வந்த வேகத்தில் பவுண்டரி, சிக்சர் அடித்த ஹர்திக் பாண்ட்யா (23), ஆர்ச்சர் பந்தில் ஆட்டமிழந்தார்.

20 ஓவர்களில் மும்பை அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங் களை எடுத்தது. கட்டிங் (13), குர்னால் பாண்ட்யா (2) ஆட்டமிழக்காமல் இருந் தனர்.

**கைவிட்ட ரகானே**

ராஜஸ்தான் அணிக்கு ரகானே (12), சஞ்சு சாம்சன் ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. ராகுல் சகார் வீசிய போட்டி யின் 8ஆவது ஓவரில் சாம்சன் (35), ஸ்ரோ க்ஸ் (0) என இருவரையும் வெளியேற்றினார்.

ஸ்மித்துடன் இணைந்த 17 வயது ரியான் பராக்(43), வேகமாக ஓட்டங்கள் குவிக்க ராஜஸ்தான் அணி வெற்றியை எளிதாக [illegible]

> **மீண்டும் அணித் தலைவர்**
>
> ராஜஸ்தான் அணியின் அணித் தலைவ ராக இருந்தவர் ஸ்ரீவ் ஸ்மித். பந்தை சேதப் படுத்திய விவகாரத்தில் சிக்கி ஒரு ஆண்டு தடையை சந்திக்க, கடந்த சீசனில் ரகானே அணித் தலைவர் ஆனார். 14 போட்டியில் 7ல் வென்று (7 தோல்வி) ராஜஸ்தானை 'பிளே ஆப்' சுற்றுக்கு கொண்டு சென்றார்.
>
> இந்த சீசனில் ரகானே தலைமையில் 8ல் 2 வெற்றி மட்டும் பெற்றது ராஜஸ்தான். இந் நிலையில் நேற்று திடீரென ரகானே நீக்கப் பட்டு, கடந்த 2015க்குப் பின் ஸ்மித் மீண்டும் தலைவராக நியமிக்கப்பட்டார்.
>
> வரும் வாரத்தில் உலக கிண்ணத் தொட ருக்கு தயாரரக ஸ்ரோக்ஸ், பட்லர் இங்கிலாந்து திரும்புகின்றனர். வரும் மே 1க்குப் பின் ஸ்மித்தும் கிளம்பி விடுவார் என்பதால் அடுத்த ரகானே மீண்டும் அணித் தலைவராலாம்.

ஸ்மித், இத்தொடரில் இரண்டாவது அரைச்சதம் எட்டினார். ராஜஸ் தான் அணி 19.1 ஓவர்களில் 5 விக்கெட் டுக்களை இழந்து 162 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

ஸ்மித்(59), பின்னி(7) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



காரைநகர் இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கிராஞ்சி பிருந்தாவனத்தை வசிப்பிடமாகவும் கொண்டவரும் எமது இல்லக் குழந்தைகளின் வளர்ச்சிக்காக தொண்டாற்றியவரும் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினரும் சங்கத்தின் ஆரம்பகால அங்கத்தவரும் ஓய்வுபெற்ற ஆசிரியரும் காந்தீயத் தொண்டருமான

**திருமதி சரசுவதி தம்பிப்பிள்ளை அம்மா**

(சி-6176)

அவர்கள் 17.04.2019 புதன்கிழமையன்று சிவபதமடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறையருளினை இறைஞ்சுகின்றோம்.

**தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக் குழந்தைகள், மகாதேவா சுவாமிகள், சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

# தேவை

பொதிப்போக்குவரத்து சேவை அலுவலகத்திற்கு உதவியாளரும், லிகிதர்களும் ஆண்/பெண் தேவை.

**யோகா ரான்ஸ்போர்ட், இல.2 திருவள்ளுவர்சாலை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். TP:- 077 756 0682**

(சி-6182)

# மதுரத்தின் கண்ணீர் அஞ்சலிகள்



எமது நிறுவனத்தின் சிரேஷ்ட ஆசிரியர்

அமரர் **நாகச்சந்திரன் சிவச்சந்திரன்**

சுந்தரத் திருமுகமும் சந்தனத்திலகமும்
ஈருருளிப் பயணத்தால் இறுகிய உடல்வாகும்
எல்லோரும் வியக்கும் எளிமை வாழ்க்கையும்
காலம் தவறாத கடமை உணர்வும்-கண்டு
காலன் சினம் கொண்டானோ-சிவா
காசினியில் உனை நீண்டநாள் விடவில்லை
வணிக சாகரம் வற்றி வறண்டது-இன்று
வாடும் உறவுகளுக்கு கூற வார்த்தையில்லை
வையகம் வாழும் வரை நீங்கா உன் நினைவுகள்..

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைச் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம்:- 21.10.1973
மறைவு:-17.04.2019

மதுரம் இன்ஸ்ரிரியூட்
டச்சு வீதி, கோப்பாய் தெற்கு.

(சி-6172)

கல்விச் சமூகம்.

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

## நிலைத்து நிற்கும் நீங்காத நினைவுடன்

## 3 எமது குல தெய்வத்தின் ஆம் ஆண்டு நினைவலைகள்




**அமரர் கமலாதேவி புவனேஸ்வரன்**

சிரார்த்த திதி: அபரபக்க துதியை-21.04.2019

மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து
மண்ணில் நாம் மாண்புடன் வாழ வழி
காட்டியாக இருந்த எமது குல தெய்வம்
அமரத்துவம் அடைந்து
மூன்று ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள்
எம் சந்ததி உள்ளவரை
நிலைத்து விடும் அம்மா!

(சி-6184)

இல. 867, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி.

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# இராசி பலன்

**மீனம்:** தடைப்பட்ட காரியங்களில் மாலைநேரம் முன்னேற்றம் காண்பீர்கள், எதையும் பலமுறை யோசித்து செய்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.

**மேடம்:** காலை நேரம் நடை பெற விருந்த காரியமொன்று மாலை நேரம் தடைப்படலாம், உஷ்ண சம்பந்தமான ரோக பய முண்டு, பயணத்தால் அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**இடபம்:** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், கரைந்த சேமிப்பை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்:** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பெரியமனிதர் கள் அனுகூலமாக நடந்து கொள்வர், புண்ணியகாரியங்களில் ஆர்வம் கூடும்.

**கும்பம்:** எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், ஆரோக்கியத்தில் முன்னேற்ற முண்டு, கௌரவமான நாள்.

**கடகம்:** புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், பிள்ளைகளின் நலனில் கூடிய அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:** உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், உதிரிவருமானம் வந்து சேரலாம்.

**சிம்மம்:** நண்பர்கள் சொல்லும் ஆலோசனைகள்உங்களுக்கு நல்லதாகத் தெரியும், குடும் பத்தில் சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறியுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், தொழில் ரீதியாக பயணங்கள் இடம் பெறலாம்.

**விருச்சிகம்:** வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரலாம், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் முன்னேற்றம் தரும், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** நண்பர்கள் பக்க பலமாக இருப்பர், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**கன்னி:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆதரவு தருபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சி கைகூடும்

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| சுக், புத | சூரி | செவ் | ராகு |
| | | | |
| | | | |
| சனி, குரு, கேது | | சந் | |

சந்திராஷ்டமம்
அச்சுவினி, பரணி-

**21.04.2019**

சித்திரை 08, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
துதியை பிற்பகல் 2.59 மணிவரை
விசாகம் முன்னிரவு 7.22 மணிவரை
சுபநேரம் 9.01-10.31 மணிவரை
இராகுகாலம் 4.31-6.01 மணிவரை
உயிர்த்த ஞாயிறு

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம் - குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் பெரிய வெள்ளி ஆராதனைகள் நேற்று முன்தினம் மாலை வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றன. (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# புடைவையகத்திற்குள் புகுந்த ஹயஸ்

## பரு.நகரில் நேற்றுக்காலை சம்பவம்



(கரணவாய்)

வேகக் கட்டுப்பாட்டையிழந்த ஹயஸ்ஒன்றுபுடைவையகத்திற்குள் புகுந்து விபத்துக்குள்ளான போதிலும்எவருக்கும்உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை. நேற்றுச் சனிக்கிழமை காலை 9 மணியளவில்பருத்தித்துறை நகரில் இச்சம்பவம் இடம்பெற்றது. வீதியால் பயணித்த ஹயஸ் திடீரென அருகில் இருந்த புடைவையகத்திற்குள் புகுந்து விபத்துக்குள்ளானது.

புடைவை நிலையத்தில் ஆட்கள் இருந்த போதிலும் வீதியால் பலர் பயணித்த போதிலும் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. அங்கு நிறுத்தப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டி ஒன்று சேதமடைந்துள்ளது. இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-60)

# கைதடியில் மக்கள் பங்களிப்புடன் மின்குமிழ்கள் பொருத்த வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

மக்கள் பங்களிப்புடனான மின்குமிழ்களை பொருத்த தவிசாளர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் செ.ஜயபாலன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் செ.ஜயபாலன் மக்கள் பங்களிப்புடன் தெரு விளக்குகளைப் பொருத்தும் திட்டமொன்றை ஆரம்பித்து கைதடியில் நடைமுறைப்படுத்தி வருகிறார். அந்தவகையில் தற்போது கைதடி தென்கிழக்கு பகுதியில் வசிக்கும் மக்கள் தமது பங்களிப்பில் 15 தானியங்கி மின்குமிழ்களை பிரதேசசபை உறுப்பினரிடம் கையளித்துள்ளனர்.

எனவே குறித்த மின்குமிழ்களை சட்டரீதியாக பிரதேசசபை ஊடாக மக்கள் தெரிவு செய்த இடங்களில் பொருத்த தவிசாளர் ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார். (5-30)

# செயற்பட்டு மகிழ்வோம் இன்று

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஸ்ரீ பழநி சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம், ஸ்ரீ பழநி அறநெறிப் பாடசாலை மற்றும் தென்னகத்தாரகை விளையாட்டுக் கழகம் ஆகியன இணைந்து சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி டச் வீதி தென்னகத்தாரகை விளையாட்டு மைதானத்தில் ஏற்பாடு செய்துள்ளன. (இ-30)

# 4 மாதங்களின் பின்னர் தென்மராட்சியில் மழை

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் சுமார் நான்கு மாத காலங்களின் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை சித்திரை பௌர்ணமி தினத்தன்று மதியம் மழை பொழிந்துள்ளது. கடந்த கார்த்திகை மாத பருவ மழைக்குப் பின்னர் தற்போது மழை பெய்துள்ளமை விவசாயிகள் உட்பட பலரையும் மகிழ்வித்துள்ளது.

மாதக்கணக்கில் மழை இன்மையால் தென்மராட்சி கிணறுகளில் நீர் மட்டம் வெகுவாகக் குறைவடைந்ததுடன் பொதுமக்கள் மற்றும் அரச திணைக்களங்களில் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பாரிய சவால்களை எதிர்கொண்டிருந்தனர்.

அத்துடன் அறுவடையின் பின்னர் வயல் நிலங்களில் விதைக்கப்பட்ட சிறு தானியங்களும் மழை இன்மையால் கருகும் நிலையில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# கலச அபிஷேகமும் ஹோமப் பெருவிழாவும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி தனங்கிளப்பு மணற்காடு அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில் 108 கலச அபிசேஷகமும் ஸ்கந்த ஹோமப் பெருவிழாவும் நாளை மறுதினம் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல் நடைபெறவுள்ளன. (5)

# கொக்குவில் நூலகத்தில் உலக புத்தக தின விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் , கோண்டாவில் பொது நூலகங்கள் இணைந்து நடத்தும் "உலக புத்தக தினம்" நாளை மறுதினம் 23 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொக்குவில் பொது நூலக மண்டபத்தில் நல்லூர் பிரதேச சபைத்தவிசாளர் தா.தியாக மூர்த்தி தலைமையில் நடை பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி.மு.சுலோசனா, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் தி.ச.கல்பனா, யாழ்ப்பாணம் British Council நூலக மற்றும் தகவல் அலுவலகர் இ.பவதாரணி ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# வடக்கு-கிழக்குப் பகுதிகளில் 4 ஆயிரத்து 750 வீடுகள் விரைவில் முடிவுறுத்தப்படும்



(யாழ்ப்பாணம்)

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பிக்கப்பட்ட 10 ஆயிரம் கல் வீடுகளை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டு முதல் காலாண்டில் வாக்குப் பணக்கணக்கு ஒதுக்கீட்டின் கீழ் (Vote on Account) 4,750 வீடுகள் நிர்மாணிப்பதற்கான நிதி மாவட்ட செயலகங்களுக்கு ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் தைப் பொங்கலுடன் ஆரம்பிக்கப்பட்டு பயனாளிகளால் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

ஒரு வீட்டுக்கான செலவு ஒரு மில்லியன் ரூபாவாகும். மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களால் முன்னேற்ற மைல்கல்களின் அடிப்படையில் நிதி பயனாளிகளுக்கு விடுவிக்கப்படுவதுடன் தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் நேரடிக்கண்காணிப்பின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது. முதற்கட்டமான 4750 வீடுகளில் 2200 வீடுகள் சுவர் மற்றும் கூரை மட்டத்திற்கு முடிவுறுத்தப்பட்டுள்ளன. மிகுதி 2550 வீடுகள் அத்திபாரம் முடிவுறுத்தப்பட்டு ஜன்னல் மட்டத்தினை நோக்கிச் செல்கின்றன. இவ்வீடுகள் அனைத்தும் மே மாத இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படுமென தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இரண்டாம் கட்டமான மிகுதி 5250 வீடுகளுக்கான நிதி ஏற்கனவே தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மொத்தமாக ரூபாய் 10 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமான 4750 வீடுகளில் யாழ்.மாவட்டத்தில் 1500 வீடுகளும் (புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் உள்ளடங்கலாக), கிளிநொச்சியில் 670 வீடுகளும் முல்லைத்தீவில் 630 வீடுகளும் வவுனியாவில் 450 வீடுகளும் மட்டக்களப்பில் 625 வீடுகளும் திருகோணமலையில் 400 வீடுகளும் மன்னாரில் 350 வீடுகளும் அம்பாறையில் 125 வீடுகளும் ஒதுக்கப்பட்டுள்ளதோடு இவை மே மாத இறுதியில் முடிவுறுத்தப்படும் என அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

10 ஆயிரம் வீடுகளும் ஒகஸ்ட் மாத இறுதிக்குள் முடிவுறுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பயனாளிகள் தெரிவு தொடர்பாக பயனாளிகளை தெரிவு செய்வதற்கான முன்னுரிமைப்படுத்தல் பிரமாணங்களில் நலன்புரி நிலையங்களிலும் உறவினர்களுடன் வாழும் உள்ளக இடம்பெயர்ந்த குடும்பங்கள் மற்றும் தாயகம் திரும்பும் அகதிகள் கருத்தில் கொள்ளப்படுவதுடன் பெண் தலைமைத்துவ குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகளைக்கொண்ட குடும்பங்கள், காணாமல்போனவர்களை கொண்ட குடும்பங்கள், சமூகமயமாக்கப்பட்ட முன்னாள் போராளிகள் குடும்பங்கள், வருமானம் குறைந்த குடிசைகளில் வாழும் குடும்பங்கள், கண்ணிவெடியால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், வயோதிபர்கள், இளம் சிறார்களைக் கொண்ட குடும்பங்கள் என்பவை முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பயனாளிகள் தெரிவு தொடர்பாக ஏதாவது முறைப்பாடுகள் இருப்பின் அவற்றை தீர்ப்பதற்காக தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் அரச காணிகள் அரிதாகவுள்ளமையால் தனியார் காணிகளை ஒரு குடும்பத்திற்கு 20 பேர்ச்சஸ் என்ற அடிப்படையில் நலன்புரி நிலையங்களிலுள்ள காணியற்ற 381 குடும்பங்களுக்கு காணிகளைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இம் முன்னெடுப்புக்கள் நல்லிணக்கத்தின் ஒரு மைல்கல்லாக காணப்படுவதாக சிவில் சமூக அமைப்புக்கள், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் கல்விமான்கள் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் முன்னேற்றத்திற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் தடை

## சிறீதரன் எம்.பி.சுட்டிக்காட்டு



(முல்லைத்தீவு)

வடக்கு-கிழக்கில் தமிழர்களுக்கான உறுதியான பொருளாதாரக் கட்டமைப்பு ஏற்படுத்தி விடக்கூடாது என்பதில், தென்னிலங்கை அரசியல்வாதிகள் உறுதியாக இருக்கிறார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு-கிழக்கில் நிரந்தரமாக அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டங்கள் யுத்தம் முடிவடைந்து 10 வருடங்கள் கடந்த நிலையிலும் தற்போதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

வடக்கு-கிழக்கில் முன்னர் காணப்பட்ட நிறுவனங்கள் தற்போது இல்லை. தென்னிலங்கையிலிருந்தே இங்கு மரக்கறி உட்பட அனைத்து பொருட்களும் வருகின்றன. எனவே உறுதியான பொருளாதாரக் கட்டமைப்பு ஏற்படுத்திவிடக்கூடாது என்பதில், தென்னிலங்கை அரசியல்வாதிகள் உறுதியாக இருக்கிறார்களென அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியம் தனது இருப்பையும் அடையாளத்தையும் தக்கவைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## 2 இலட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி

(கொழும்பு)

அடுத்த தேர்தலில் வாக்களிக்க இரண்டு இலட்சம் புதிய வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளதாக இலங்கை தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு நடைபெறும் தேர்தல்களுக்கு 2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் அட்டைகளே பயன்படுத்தப்படும். 2 இலட்சம் பேர் புதிதாக வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இதற்கு அமைய வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடியே 57 இலட்சத்தில் இருந்து ஒரு கோடியே 59 இலட்சமாக அதிகரித்துள்ளது. 1980 இலக்கம் 44 என்ற சட்டத்திற்கு அமைய வருடந்தோறும் வாக்காளர் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

18 வயதை பூர்த்தி செய்த அனைவரும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இதனடிப்படையில், 2019 ஜூன் முதலாம் திகதியுடன் 18 வயது பூர்த்தியானவர்கள், இம்முறை தேர்தலில் வாக்களிக்க முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (இ)

## 35 இலட்சம் ரூபா பணத்துடன் இருவர் பொலிஸாரால் கைது

### 29 ஆம் திகதி வரை மறியல்

(வீதியவத்தை)

வீதியவத்தை பகுதியில் 35 இலட்சத்துக்கும் அதிகமான பணத்தை ஆட்டோவில் எடுத்துச் சென்ற இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த சம்பவம் கடந்த 18 ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது.

பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சுமார் 35 இலட்சம் ரூபாவிற்கும் அதிகளவான பணத்தை ஆட்டோவில் எடுத்துக் கொண்டு சென்ற இருவரை வீதியவத்தை பகுதியில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் இருவரும் பணம் கிடைத்த விதம் தொடர்பில் சரியான விளக்கம் கொடுக்காததுடன், அவர்களின் கருத்துக்களில் முரண்பாடுகள் காணப்பட்டமையால் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் அத்தனகல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவு பிறபித்துள்ளார். (இ-7)


### மணமக்கள் தேவை

1984 கிறிஸ்தவம் கனடா, 1984 இந்து கனடா, 1993 அவுஸ்திரேலியா மணமகள்மாருக்கு பல்கலைக்கழக மணமகன்மார் தேவை. இலங்கையிலுள்ள மணமக்களுக்கு இலங்கையிலுள்ள மணமக்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
00 947 6725 0144, 00 4916 2746 2526, 077 853 3483, 077 535 3289. (8512)

### கடை வேலைக்கு ஆள்தேவை

யாழ்.மானிப்பாய் வீதியில் யாழ். நகரை அண்மித்த பகுதியில் தொலைத்தொடர்பு நிலைய கடை ஒன்றிற்கு தட்டெழுத்து தெரிந்த ஆள் வேலைக்கு தேவை.

தொடர்புகளுக்கு: 077 795 4004
Ncsbox@hotmail.com (8580)

### A/L படிக்க முடியவில்லையா?

கவலை வேண்டாம்.
விற்பனைத்துறையில் ஆர்வம் உள்ளவரா?
எம்முடன் இணைந்திடுங்கள்.
விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.
இல.303,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (C-6165)

### யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டம்

நீங்கள் க.பொ.த. (சா/தர) பரீட்சையில் சித்தியடைந்தமை அல்லது சித்தியடையாமை பற்றி கருத்திற்கொள்ளாது க.பொ.த. (உ/தர) பிரிவில் பயின்று NVQ தர சான்றிதழை பெறுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

எமது கல்லூரியில் மேற்படி திட்டத்தின் கீழ் தொழில்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நீங்கள் 2017 ஆம் ஆண்டு அல்லது 2018 ஆம் ஆண்டு க.பொ.த. (சா/தர) பரீட்சைக்குத் தோற்றியிருப்பின் 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் தொழிற்கல்வியினைத் தொடர்வதற்காக, அனுமதி விண்ணப்பப்படிவம் எமது கல்லூரியில் 22.04.2019 அன்று முதல் பாடசாலை நேரத்தில் வழங்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்துடன் க.பொ.த. (சா/தர) பெறுபேற்று சான்றிதழ், பாடசாலை விடுகைப்பத்திரம் என்பன 29.04.2019 இற்கு முன் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மட்டுப்படுத்திய அனுமதியே வழங்கப்படவுள்ளதால் முன்னுரிமை அடிப்படையிலேயே மாணவர்கள் கல்லூரியில் இக்கற்கைநெறிக்கு உள்வாங்கப்படுவர்.

அதிபர்
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
யாழ்ப்பாணம். (C-6177)

### கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா:30 ½<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BA, London<br>எதிர்பார்ப்பு:PRஉள்ளபெண்<br>தொ.இ: B/2044 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:ரோகிணி 4<br>கி.பா: 21<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L,சொந்ததொழில்<br>*கணவர் காணாமல் போய்விட்டார்<br>தொ.இ: G/4121 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 24<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L,சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு<br>தொ.இ: B/2048 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 12 ½<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4141 |
| பிறப்பு: 1968 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 4<br>கி.பா: 23 ½<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:A/L, Dubai<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/2053 | பிறப்பு: 1987 கிறிஸ்தவம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BFAபட்டதாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரசஉயர் தொழில்/வெளிநாடு<br>தொ.இ: G/4143 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்:மகம் 1<br>கி.பா: 56 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L,பங்குதாரர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/2054 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை 2<br>கி.பா: 23 சூரி செவ் 10 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: அரசதனியார் சொந்ததொழில்<br>தொ.இ: G/4144 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் விழித்துக் கொண்டோம் தனித்துவிட்டார் மைத்திரி

# ஐ.தே.க. அரசை இனி வீழ்த்த முடியாது

## அமைச்சர் கிரியெல்ல திட்டவட்டம்



(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரி, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த கூட்டணி ஒன்றிணைந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை வீழ்த்த சதி செய்தபோதே கட்சியாக நாம் விழித்துக்கொண்டோம். இனியும் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தை வீழ்த்த முடியாது என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று தனித்துவிட்டார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் நகர்வுகள் குறித்தும் மீண்டும் கூட்டணி அரசாங்கம் அமைக்கும் வாய்ப்புக்கள் உள்ளதா? என வினவிய போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டணி அரசாங்கம் அமைக்கும் நோக்கம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இல்லை, நாம் கூட்டணி அரசாங்கத்தை குழப்பவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே கூட்டணி அரசாங்கத்தைக் கலைத்தார்.


ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சிக்கு துரோகம் செய்வார் என்பதை சிறிதும் நாம் நினைத்துப்பார்க்கவில்லை. எனினும் தனது இருப்பை தக்க வைத்துக் கொள்ள ஜனாதிபதி மீண்டும் ராஜபக்ஷவுடன் கைகோர்த்தார்.

ஆனால் இன்று அவரது நிலைமை மிகவும் மோசமானதாக அமைந்துள்ளது. அவருக்கே அவரது அணியில் இடமில்லாத நிலைமையை ராஜபக்ஷவினர் உருவாக்கிவிட்டனர். இப்போது அவர் ஜனாதிபதி தேர்தலை நடத்தினால் எந்த அணியின் ஆதரவில் அவர் போட்டியிடுவார் என்ற கேள்வி அவர்களுக்குள்ளேயே எழுந்துள்ளது.

ஜனாதிபதி செய்த தவறை அவரே நிவர்த்தி செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அவர் விரைவில் கையாள வேண்டும். ஜனாதிபதியின் வாக்குறுதிகளை நாம் இனியும் நம்பத் தயாரில்லை. ஆரம்பத்தில் அவர் கொடுத்த வாக்குறுதிகள் எவற்றையும் நிறைவேற்றவில்லை. அன்று கூறியது ஒன்று இன்று அவர் செய்வது வேறொன்றாக உள்ளது. அவர் மீது எமக்குத் தனிப்பட்ட கோபங்கள் எதுவும் இல்லை. ஆனால் வாக்குறுதிகளை நாம் நம்பவில்லை.

ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் இணைந்து இந்த ஆட்சியை வீழ்த்த சூழ்ச்சி செய்த போதே நாம் கட்சியாக கைகோர்த்து வெற்றி பெற்றோம். அதேபோல் எதிர்வரும் தேர்தல்களில் நாம் வெற்றி பெறுவோம். தோல்விகளைக் கண்டு அஞ்சிய கட்சியல்ல நாம். இன்று நாம் வெற்றிகரமாக ஆட்சியை கொண்டு செல்கின்றோம். எம்மை இப்போது வீழ்த்த முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# குரங்கைக் கட்டுப்படுத்த ரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு



(யாழ்ப்பாணம்)

வடமாகாண விவசாய அமைச்சால் பயிர்செய்கையில் குரங்குப் பிரச்சினையைக் கட்டுப்படுத்த சுமார் 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள விவசாயப் பகுதிகளில் குரங்குத் தொல்லையைக் கட்டுப்படுத்த தெரிவு செய்யப்பட்ட 10 பேருக்கு (airgun) துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளன.

இப் பகுதிகளில் உள்ள மாம்பழச் செய்கையாளர்கள்,தென்னைச் செய்கையாளர்கள் குரங்குகளின் அட்டகாசத்தால் தமது உற்பத்திப் பொருட்களிலிருந்து உரிய பயனைப் பெற முடியாதுள்ளது.

எனவே இந் நிலையிலிருந்து பயனாளிகளுக்கு நிவாரணம் வழங்கும் முகமாக வடமாகாண விவசாய அமைச்சால் குறித்த நிதி ஒதுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# 119 அவசர அழைப்பு பொலிஸ் மீது பொலிஸ் அத்தியட்சகர் தாக்குதல்!

(கொழும்பு)

119 பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் தாக்குதலுக்கு இலக்காகி கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் கட்டளை தகவல் பிரிவின் பணிப்பாளரால் தான் தாக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 12.30 மணியளவில் மிரிஹானயிலுள்ள பொலிஸ்மா அதிபர் கட்டளை தகவல் பிரிவின் அலுவலகத்தில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அத்தோடு தன் மீதான குற்றச்சாட்டை மறுப்பதாக பொலிஸ் அத்தியட்சகர் அமித் குணரத்ன தெரிவித்துள்ளார்.

தான் அவ்வாறு யார் மீதும் தாக்குதல் நடத்தவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் பொலிஸ் அத்தியட்சகர் அமித் குணரத்ன தகாத வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்துவது சம்பந்தமாக கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்யப்பட்ட காணொலி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. (இ)

# சிற்றுண்டிச்சாலை திறப்பு




(சாவகச்சேரி)

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் சித்திரை பௌர்ணமி தினத்தன்று (நேற்றுமுன்தினம்) காலை உணவகம் (சிற்றுண்டிச்சாலை) திறந்து வைக்கப்பட்டது.

குறித்த உணவகத்தில் சிற்றுண்டி வகைகள் மற்றும் தேநீர் வகைகள் அனைத்தும் நுகர்வோரின் நன்மை கருதி பத்து ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றன.

ஏ-9வீதியில், சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க கட்டடத்தில் சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் கலந்து கொண்டு உணவகத்தை திறந்து வைத்தார். உணவகம் திறக்கப்பட்டு முதல் நாளிலேயே அதிகளவானோர் உணவகத்தை நாடிச் சென்றனர். (இ-[illegible])

## சனசமூக நிலைய பரிசளிப்பும் கலை நிகழ்வுகளும் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் அரசடி வீதி ஜனசக்தி சனசமூக நிலையத்தின் பரிசளிப்பும் கலை நிகழ்வும் இன்று 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிலையத் தலைவர் அ.யுகசுதன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக சமூக சேவையாளர், சமூகஜோதி மற்றும் தியாகி அறக்கொடை நிலைய முகாமையாளர் வா.தியாகேந்திரன், சமூகஜோதி கிருபா லேணர்ஸ் முகாமையாளர் அ.கிருபாகரன், யாழ்.மாநகர சபை உறுப்பினர்களான எஸ்.சுபாதீஸ் [illegible] கலந்து கொள்வர். (இ-5)

# டெங்கு தடுப்புப் பிரசாரத்தை முன்னெடுக்க வலியுறுத்தல்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலுள்ள பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக மீண்டும் தொடங்க முன்னர், டெங்கு தடுப்புப் பிரசாரத்தை முன்னெடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

அனைத்து அரசாங்க மற்றும் தனியார் பாடசாலைகளானவை, முதலாம் தவணை முடிவடைந்து இரண்டாம் தவணைக்காக நாளை திறக்கப்படவுள்ளன.

இந்நிலையிலேயே, டெங்கு தடுப்பு பிரசாரத்தை முன்னெடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு, கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தல் கல்வி அமைச்சால் மாகாண கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

டெங்கு நோயிலிருந்து மாணவர்களைப் பாதுகாக்கும் நோக்கில், இதற்கு முன்னரும் பல தடவைகள் டெங்கு தடுப்பு பிரசார நடவடிக்கைகள், கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த ஆண்டு இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் உறுதி



# மகிந்த களமிறங்கினாலும் எமக்கு அச்சம் இல்லை



## கோத்தாவைக் காட்டி பயமுறுத்துவோருக்கு பொன்சேகா சாட்டையடி

(கொழும்பு)

கோத்தா பயத்தைக் காட்டி ஏனைய கட்சிகளை அடக்கவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முயற்சித்து வருகின்றது. கோத்தபாய ராஜபக்ஷ அல்ல மகிந்த ராஜபக்ஷவே மீண்டும் களமிறங்கினாலும் எமக்கு அச்சம் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். கடந்த ஆட்சியில் செய்த குற்றங்களில் சிக்கி வெகுவிரைவில் ராஜபக்ஷவினர் சிறைக்குச் செல்ல நேரிடும் எனவும் அவர் எச்சரித்தார்.

அரசியல் நிலைமைகள் மற்றும் கோத்தபாய ராஜபக்ஷவை அடையாளப்படுத்தி முன்னெடுக்கப்படும் அரசியல் நகர்வுகள் குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த ஆண்டு இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஜனாதிபதித் தேர்தலை தள்ளிப்போட ஒரு சிலர் முயற்சிகளை எடுத்தாலும் கூட ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டுக்குள் இடம்பெறும்.

அதேபோல் இப்போது ஜனாதிபதித்தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷவின் பெயரை முன்வைத்து கோத்தா பயத்தைக் காட்டி ஏனைய கட்சிகளை அச்சுறுத்தலாம் என பொதுஜன பெரமுனவினர் நினைத்துள்ளனர்.

அதனால் தான் அவர்கள் செல்லும் இடமெல்லாம் கோத்தபாய பெயரைக் கூறி வருகின்றனர். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கோ முன்னணிக்கோ கோத்தா பயம் இல்லை. கோத்தபாய ராஜபக்ஷ அல்ல மகிந்த ராஜபக்ஷவே மீண்டும் களமிறங்கினாலும் கூட அதைக்கண்டு நாம் அஞ்சப்போவதில்லை. எமது தலைவர்கள் தேர்தலுக்குத் தயாராகியுள்ளனர். நாம் கூட்டணியாகத் தேர்தலை சந்திக்க தயாராகிவிட்டோம். எந்தச் சவாலையும் சந்திக்க நாம் தயார்.

வெகுவிரைவில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள். செய்த குற்றங்களுக்காக ராஜபக்ஷ குடும்பத்தின் பலர் சிறைக்குச் செல்ல நேரிடும். குற்றவாளிகளைக் காப்பாற்றும் நோக்கம் எமக்கு இல்லை. எனினும் சட்ட தாமதங்கள் உள்ளன எனத் தெரிவித்தார். (இ)

## பேரினவாத கட்சிகள் தமிழருக்கு எக்காலத்திலும் நன்மைகளை செய்யப்போவதில்லை-கோடீஸ்வரன்



(நாவிதன்வெளி)

பேரினவாதக் கட்சிகள் தமிழருக்கு எக்காலத்திலும் நன்மைகளை செய்யப்போவதில்லையென தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாவிதன்வெளி வீரச்சோலை கிராமத்தின் சித்திவிநாயகர் ஆலயத்தின் சுற்றுமதிலுக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்த நாட்டிலே ஆட்சியை தீர்மானிக்கின்ற, மாற்றுகின்ற, நிலை நிறுத்துகின்ற சக்தியாக விளங்குகின்றது.

அந்த வகையிலே இந்த ஆட்சி தமிழ் மக்களுக்கு விரோதமாகச் செயற்படுமாயின் ஆட்சியை மாற்றியமைக்கின்ற அல்லது ஆட்சியை வீழ்த்துகின்ற சகல முயற்சிகளையும் கூட்டமைப்பு மேற்கொள்ளும்.

தமிழர்களின் தீர்வு விடையங்களை அரசு புறக்கணிக்குமானால் அல்லது செயற்படுத்த மறுக்குமானால் நிச்சயமாக இந்த ஆட்சியாளர்களை வீட்டிற்கு அனுப்புவதில் முழுமூச்சாக செயற்படும் என்பதைக் கூற விரும்புகிறேன். எங்களது பிரதேசம், மாவட்டத்தின் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட வேண்டும்.

வடக்கு-கிழக்கில் மூன்றாவது தமிழர்கள் கூடிய மாவட்டமாக அம்பாறை இருந்தாலும் அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் மூன்றாவது இனமாக இருக்கின்றோம்.

இதனை அடிப்படையாகக் கொண்டு நாங்கள் பலதரப்பட்ட பிரதேசங்களில் வாழுகின்ற தமிழ் மக்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்றால் நாங்கள் ஒன்றித்து பயணிக்க வேண்டும்.

தமிழ் மக்களின் உரிமை சார்ந்த விடயமாக இருந்தாலும், அபிவிருத்தி விடயமாக இருந்தாலும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு குரல்கொடுத்து சேர்ந்து பயணிக்கின்றது.

ஏனைய பேரினவாதக் கட்சிகள் என்றும் தமிழர்களின் நலன் சார்ந்து குரல்கொடுத்ததே கிடையாது.

ஏனைய பேரினவாதக் கட்சிக்கு பின்னால் போய் செயற்படுகின்ற பொழுது எங்களது உரிமை சார்ந்த விடயங்கள் புறக்கணிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் காணப்படும்.

ஆகவே இதனை அடிப்படையாகக் கொண்டு நாங்கள் தாய்க் கட்சியை பலப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-7)

'மத விடுதலை எங்கே?'

## கிறிஸ்தவ தேவாலயம் மீதான தாக்குதலை கண்டித்து போராட்டம்



(கொள்ளுப்பிட்டி)

அநுராதபுரத்திலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்தின் மீது கடந்த 14 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள மெதடிஸ்த தேவாலயத்தின் முன்பாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 3 மணிவரை அமைதி எதிர்ப்புப் போராட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அநுராதபுரத்திலுள்ள கிறிஸ்தவ தேவாலயமொன்றின் மீது சிலரால் கற்கள் மற்றும் நெருப்புப் பந்தங்களை வீசித் தாக்குதல் நடத்தப்பட்டதுடன், தேவாலயத்திற்குள் ஆராதனைகளில் ஈடுபட்டிருந்தவர்கள் வெளியேறாதவாறு கதவு தாழிடப்பட்டது. இவ் விவகாரம் தொடர்பில் பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையிலேயே கிறிஸ்தவர்களுக்கு முக்கிய தினமான பெரிய வெள்ளியை முன்னிட்டு மத சுதந்திரத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று முன்தினம் இந்த அமைதிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் "மத விடுதலை எங்கே?, மத விடுதலையைப் பெற்றுத்தாருங்கள், சிறந்த அரசியல் கலாசாரத்தின் மூலமாக மத விடுதலையைப் பெற்றுத்தாருங்கள்" உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர். (இ)



## உணவு ஒவ்வாமையால் 37 பேர் வைத்தியசாலையில்




(மஸ்கெலியா)

மஸ்கெலியா லக்ஷபான தோட்டத்தின் லக்ஷபான பிரிவில் நேற்று முன்தினம் நண்பகல் நிகழ்வொன்றில் வழங்கப்பட்ட உணவு ஒவ்வாமை காரணமாக நேற்று முன்தினம் இரவு மூன்று குழந்தைகள் உட்பட 37 பேர் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த நிகழ்வில் உணவை உட்கொண்டவர்களில் சிலருக்கு வாந்தி, வயிற்று வலியுடன் வயிற்றுப்போக்கு ஏற்பட்டதால் மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி லியத்தப்பிட்டிய தெரிவித்தார். (இ)

## மதுபானம் விற்பனை; உணவகத்திற்குச் சீல்


(நவகமுவ)

பௌர்ணமி தினத்தில் மதுபானத்தை விற்பனை செய்த நவகமுவ பகுதியிலுள்ள கலால்வரி உரிமம் பெற்றிருந்த உணவகத்திற்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. போலி கொள்வனவாளரைப் பயன்படுத்தி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கலால்வரி திணைக்களத்தின் அதிகாரிகளால் இந்தச் சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது அங்கிருந்த பணியாளர் ஒருவரை கைதுசெய்துள்ளனர். உணவகத்தின் முன் பக்கத்தை மூடி, பின்பகுதி வழியாக இவ்வாறு மதுபானம் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக கலால்வரி திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் இன, மத இணக்கப்பாட்டை ஏற்படுத்தி நிலையான சமாதானத்தை உருவாக்க வேண்டும்



ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா உலகம் முழுவதிலும் கொண்டாடப்படும் இவ்வேளை இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். உயிர்த்த இயேசு உங்கள் அனைவரையும் என்றும் பாதுகாத்து எல்லாத் தேவைகளிலும் உங்களை நிறைவு செய்து என்றும் பாதுகாத்து வழி நடத்துவாராக.

ஆண்டவர் இயேசு பாடுகள் மரணம் என்ற துன்பமான அனுபவத்தைக் கடந்து உயிர்ப்பு என்ற இன்பமான அனுபவத்தின் உள் சென்றார். இதன் வழி நாமும் எமது அன்றாட வாழ்வின் துன்ப அனுபவங்களின் வழியேதான் இன்ப அனுபவங்களின் உட்செல்ல வேண்டும் என்ற பாடத்தை கற்றுத் தருகிறார்.

கத்தோலிக்க மக்களின் முக்கிய திருவிழாவான உயிர்ப்பு விழாவைக் கொண்டாடும் காலத்தில் எமது சகோதரர்கள் தமிழ் - சிங்கள புத்தாண்டை கொண்டாடுவது வழமையாக உள்ளது. அண்மையில் 2019ஆம் ஆண்டிற்குரிய தமிழ் - சிங்கள புத்தாண்டு கொண்டாடப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கும் எமது இனிய புத்தாண்டு விழா வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். புதிய ஆண்டில் உங்கள் உள்ளத்து எண்ணங்கள் அனைத்தும் நிறைவு பெற இறையாசீர் வேண்டுகிறோம்.

இலங்கை வாழ் இனங்களுக்கிடையிலும் மதங்களுக்கிடையிலும் நல்லெண்ணத்தையும் புரிந்துணர்வையும் இணக்கப்பாட்டையும் ஏற்படுத்த வேண்டும் என உழைத்து வரும் வேளை மாந்தை திருக்கேதீஸ்வரம் பகுதியில் வெளிப்பட்ட மதமுரண்பாடுகள் எம் அனைவரையும் ஆழ்ந்த கவலைக்கு உள்ளாக்கியிருக்கிறது. தவக்கால சுற்றுமடலில் இது தொடர்பாக தெரிவித்த கருத்தை இங்கு மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம். தமிழ் மக்களாகிய நாங்கள் கடந்த காலத்திலே மிகுந்த புரிந்துணர்வோடும் இணக்கப்பாட்டோடும் வாழ்ந்து வந்திருக்கிறோம்.

இத்தகைய உறவுநிலை தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் என்பதே எமது பெருவிருப்பமாகும். முரண்பாடுகள் தொடர்பாக உண்மைச் சம்பவங்களும் அவற்றுக்கான காரணங்களும் அடையாளம் காணப்பட்டு விரைவாக ஒரு சுமூகநிலை ஏற்பட வேண்டும். சம்பந்தப்பட்ட தரப்புக்கள் திறந்த மனதோடு உரையாடி இணக்கமாக ஒரு தீர்வை எட்ட வேண்டும். சமய எல்லைகளைச் கடந்து எல்லோரும் இறைவனின் பிள்ளைகள் - மனிதர்கள் என்ற மானுடம் தழுவிய சகோதரத்துவத்தின் அவசியத்தை வலியுறுத்துவோம்.

சிக்கலான கால கட்டத்தினூடாக தமிழ் மக்கள் பயணிக்க வேண்டிய தேவை எம் கண்முன்னே உருவாகிறது என்றே எண்ணத் தோன்றுகிறது. ஜெனிவா தொடர்பான முடிவுகள் தமிழ் மக்களுக்கு நீதியான முடிவுகளை தரவில்லை என்பது வேதனையானது. உரிய காரணமின்றி காலத்தை கடத்துவது ஏற்கக்கூடியதல்ல. காலம் கடந்த நீதி உரிய விளைவைத்தராது. இது நம்பிக்கை இழப்பையே ஏற்படுத்தும்.

தேர்தல்கள் விரைவில் நடைபெற திட்டங்கள் உள்ளன என்பது தெளிவாகிறது. தமிழ் மக்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையாக செயற்படமாட்டார்கள் என்ற மாயை இங்கு தகர்த்தெறியப்பட வேண்டும் என விரும்புகிறோம். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவரும் நிரூபிக்க வேண்டும். அதன்வழி கடந்த 30 ஆண்டுகால வேதனை மிக்க போர் அனுபவங்கள் - பறிக்கப்பட்ட உயிர்களுக்கான சம்பாவனையை தமிழ் மக்கள் பெற வேண்டும். தமிழ் அரசியல் வாதிகளும் ஒற்றுமையுடனும் இராஜதந்திரத்துடனும் ஒட்டு மொத்த தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்தை மட்டும் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும் என தமிழ் மக்கள் பெயரால் வேண்டுகோள் விடுக்கிறோம். அரசியல் என்பது பல இராஜதந்திர நடவடிக்கைகளையும் தனிப்பட்ட நலன், கட்சி நலன் எனப் பல விடயங்களை தன்னகத்தே கொண்டது.

ஆனால் தமிழ் அரசியல் தலைவர்கள் இவை அனைத்தையும் கடந்து இலங்கை வாழ் தமிழ் மக்களின் எதிர்காலத்தை மட்டுமே கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டுமென அன்பு அழைப்பு விடுக்கிறோம்.

இலங்கை நாட்டில் இனங்களுக்கிடையிலும் மதங்களுக்கிடையிலும் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி நீடித்த நிலையான சமாதானத்தை ஏற்படுத்த இனியும் காலம் தாழ்த்த முடியாது. இதனை அரசியல் வாதிகளை காட்டிலும் மதத் தலைவர்களாலேயே முடியும் என எண்ணுகிறோம். தமிழ்-சிங்கள இனங்களை இணைக்கும் பாலமாக கத்தோலிக்க மதம் உள்ளது. இந்தப்பாலம் இனிவருங் காலங்களில் இன்னும் பலமாக்கப்பட்டு உறுதியாக செயற்பட்டு நாட்டில் நீடித்த சமாதானத்தை நிலைநிறுத்த முழுமையாகப் பாடுபட வேண்டும்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அண்மையில் தென் சூடான் நாட்டு தலைவர்களிடம் போரை முடிவுக்குக் கொண்டு வருமாறு தாழ்பணிந்து வேண்டி தன் மனிதாபிமானத்தை உலகறியச் செய்து உலக மக்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளார். இன மோதல் - பிரிவினை - பழிவாங்கல் என்பவற்றைக் கடந்து அன்பு - ஒற்றுமை - சமாதானம் இணைந்த வாழ்வு என்ற நிலையை நாம் எல்லோரும் அடைய அனைவர்க்கும் இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவித்து சமாதானத்தில் வாழ வாழ்த்துகிறோம்.

**மேதகு கலாநிதி**
**யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை**
**யாழ்.ஆயர்.**

# "அடிபணியும் எண்ணங்கள் எம்மைவிட்டு அகலட்டும்"



**இயேசுவின் உயிர்ப்பலி உலகிற்கு உன்னதமானது.**

**இலட்சிய வாழ்விற்கு உறுதுணையானது.**

உலகிற்கு ஓர் உன்னதமான நல் நாள் உயிர்த்த ஞாயிறு உன்னதமான ஞாயிறு என்பர். இலட்சிய வாழ்வில் துன்பங்கள் கட்டாயம் இருக்கும். ஆனால் அந்த துன்பங்கள் இலட்சியத்தை சிதைக்க இயலாது.

இறுதியில் இலட்சியம் மட்டுமே வெல்லும் என்பதை தான் இயேசுவின் உயிர்ப்பு நிரூபித்துக்காட்டுகிறது. இதை நாம் மனதில் கொள்வோமாக,

அர்ப்பணிப்பும், தியாக சிந்தனையும் எம் மத்தியில் ஏற்பட்டால் வரும் இடர் அனைத்தையும் எதிர்கொள்ள முடியும். சுயநலத்திற்காகவும், அற்ப சலுகைக்காகவும், அடிபணியும் எண்ணங்கள் எம்மை விட்டு அகல வேண்டும். இதுவே உயிர்த்த ஞாயிறு எமக்கு எடுத்தியம்பும் உன்னத செய்தியாகும்.

இதன் தத்துவத்தை மொழி, சாதி, மத பேதமின்றி ஒவ்வொருவரும் கடைப்பிடித்தால் உலகில் சமாதானம் நிலைபெறும் என்பதில் ஐயமில்லை என்பதை இந்த உயிர்த்த ஞாயிறில் அனைவர்க்கும் எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

தியாக சிந்தனையுடன், கூடிய அர்ப்பணிப்பே எம்மவரின் வாழ்வை மிளிர வைக்கும் என்பதை இந்த உன்னதமான நாளில் நினைவுபடுத்த விரும்புகின்றேன். எங்கும் சாந்தி! சமாதானம்! நிலவட்டும். இதுவே எனது பிரார்த்தனையாகும்.

**இம்மானுவல் ஆனல்ட்**
**யாழ்.மாநகர முதல்வர்.**


# 30வது ஆண்டு நிறைவும் நூல் வெளியீடும் இன்று

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி அறிவொளி மன்றத்தின் அறநெறிப் பாடசாலை நடத்தும் 30 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் நூல் வெளியீடும் இன்று 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மன்றத் தலைவர் ஆ.நடராசா (ஜே.பி) தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் சி.பவளகுமார், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.மகிந்தினி விஜயகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# புதையல் அகழ்வு; அறுவர் கைது



(ஹொரவப்பொத்தானை)

ஹொரவப்பொத்தானை, துடுவெவ கபுகொல்லேவ பிரதேசத்தில் புதையல் தோண்டிய 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹொரவப்பொத்தானை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.


சந்தேகநபர்கள், துடுவெவ, பொலநறுவை மற்றும் தம்புளை பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 40 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 100 | 150 |
| தக்காளி | 120 | 100 | 110 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 120 | 110 | 120 |
| கோவா | 80 | 60 | 80 | 80 |
| கரட் | 120 | 100 | 75 | 200 |
| பூசணி | 50 | 20 | 30 | 40 |
| புடோல் | 80 | 70 | 70 | 80 |
| வாழைக்காய் | 50 | 40 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 70 | — | 180 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 30 | — | 40 | 100 |
| பயற்றங்காய் | 200 | 220 | 200 | 160 |
| லீக்ஸ் | 150 | 160 | 90 | 200 |
| பீற்றூட் | 120 | — | 60 | 120 |
| கறிமிளகாய் | 180 | 100 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 250 | 200 |
| போஞ்சி | 140 | 240 | 200 | 200 |
| கத்தரிதும்புள்ள | 50 | — | 45 | 50 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 180 | 300 | 270 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 160 | 140 | 100 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 80 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | — | — | 100 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட அதிரடிப்படை, பொலிஸ் பாதுகாப்புடன் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி மாநாடு



இலங்கை தமிழரசுக் கட்சியின் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த இளைஞர் அணி மாநாடும், நிர்வாகத் தெரிவும் வவுனியாவில் நடைபெற்றது. வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று தமிழரசுக் கட்சியின் செயலாளர் துரைராஜசிங்கம் தலைமையில் இந்த மாநாடு நடைபெற்றது. தமிழரசுக் கட்சியின் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய இந்த மாநாட்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டிருந்தனர். இதில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சாள்ஸ் நிர்மலநாதன், எஸ்.சிவமோகன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, அ.துரைரத்தினசிங்கம், ஈ.சரவணபவன் ஆகியோர் கலந்து கொண்டனர். விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸாரின் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் இந்த இளைஞர் அணி மாநாடு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (இ)

# கோரிக்கை விடுக்கப்பட்டால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டி

## சபாநாயகர் கருஜெயசூரிய தெரிவிப்பு



(கண்டி)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுமாறு பொதுவான கோரிக்கை விடுத்தால், அது குறித்து ஆராய்ந்து பார்க்க முடியும் என சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

காலம் தனக்கு வழங்கும் எந்தப் பொறுப்பாக இருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கண்டியில் செய்தியாளர்களிடம் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த ஆண்டு மாகாணசபைத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் ஆகிய இரண்டு தேர்தல்களும் நடத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் மட்டுமல்லாது மாகாணசபைத் தேர்தலும் கட்டாயம் நடத்தப்பட வேண்டும். பதவிக்காலம் முடிந்துள்ள மாகாண சபைகளின் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படும் என எதிர்பார்க்கின்றேன்.

நான் இதுவரை எந்தப் பதவியையும் கோரி பெற்றுக்கொண்டதில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மேயராகவும் கட்சியின் தவிசாளராகவும் பிரதித் தலைவராகவும் வெளிநாட்டுத் தூதுவராகவும் அமைச்சராகவும் பதவிகளை வகித்துள்ளேன்.

தற்போது சபாநாயகராகவும் பதவி வகிக்கின்றேன். இந்தப் பதவிகள் நான் கேட்டு பெற்றுக் கொண்ட பதவிகள் அல்ல. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு என்னிடம் கோரப்படவில்லை. நாட்டின் ஜனநாயகத்திற்காக அப்படியான கோரிக்கை விடுக்கப்படுமா? என்பதை எதிர் காலத்தில் பார்க்கலாம்.

பதவிகளுக்காக நான் போட்டி போடப் போவதில்லை. நான் போட்டியிட வேண்டும் என்று பொதுவான கோரிக்கை விடுக்கப்பட்டால், அதனை ஆராயலாம் எனவும் கரு ஜெயசூரிய மேலும் தெரிவித்தார். (இ)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு பூநாரி மரத்தடி அருள் தரும் அன்னை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 06.05.2019 வரை இரவு 7.30 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவு இடம பெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் இடம் பெறும் இச்சொற்பொழிவில் 23 ஆம் திகதி இளம்சைவப்புலவர் சிவநெறிச்செம்மல் ச.நவநீதன் விடயம் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்", 24 ஆம் திகதி சைவப்புலவர் சிவநெறிச்செம்மல் ச.முகுந்தன் விடயம் "திருமுறையும் வாழ்வும்", 25 ஆம் திகதி சைவப்புலவர் சிவநெறிச் செம்மல் பொன்.சந்திரவேல் விடயம் "அம்பி கையை சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்", 26 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் ஆன்மீகத்திலகம் க.கைலநாதன் விடயம் "கேட்டவரம் அருள்வாள் அம்பிகை", 27 ஆம் திகதி சைவப்புலவர் சிவநெறிச் செம்மல் கந்த சத்திய தாசன் விடயம் "அபிராமி என்னும் அரு மருந்து", 28 ஆம் திகதி சைவ சின்மயர் சிவநெறிச்செம்மல் காசி ராஜா விடயம் "மனசை உருக வைக்கும் திருவாசகம்", 29 ஆம் திகதி சிவநெறிச்செம் மல் சைவ ப்புலவர் ச.முகுந்தன் விடயம் "சமயமும் வாழ்வும்", 30 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் சைவ சின்மயர் நித்தியபாபுதரன் விடயம் "அம்பிகையின் திருவருட்சக்தி", மேமாதம் முதலாம் திகதி இளம் சைவப்புலவர் சிவநெறிச் செம்மல் ச.நவநீதன் விடயம் "மேன்மை கொள் சைவ நீதி", 2 ஆம் திகதி சைவப் புலவர் சிவநெறிச்செம்மல் கா.கமலநாதன் விடயம் "பாரதி கண்ட சக்தி", 3 ஆம் திகதி இளம் சைவப்புலவர் ஆன்மீகத்திலகம் க.கைலநாதன் விடயம் "மீனாட்சி திருக் கல்யாணம்", 4 ஆம் திகதி சைவப்புலவர் சிவநெறிச்செம்மல் கா.கமலநாதன் விடயம் "சுமங் கலி சுதந்தரி", 5 ஆம் திகதி சைவப் புலவர் சிவநெறிச்செம்மல் பொன். சந்திரவேல் விடயம் "ஈழத்தில் சக்தி வழிபாட்டின் சிறப்புக்கள்", 6 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் சைவசின்மயர் நித்தியபாபுதரன் விடயம் "மும்மல நீக்கம்" என்ற தலைப்புக்களில் சொற்பொழிவுகள் இடம் பெறவுள்ளன. (இ)

# புத்தாண்டு விளையாட்டு விழா

(கொடிகாமம்)

கைதடி சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி நடத்தும் புத்தாண்டு விளையாட்டு விழா சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிக் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவி நாகரத்தினம் தாரணி தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இவ் விழாவில் முதன்மை விருந்தினராக சீபன் பாஸ்கர் லேணர்ஸ் அதிபர் கு.டசீபன். சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் இ.உதயகுமார், தென்மராட்சி பிரதேச செயலக தலைமைப்பீட முகாமையாளர் இ.அன்ரனி, தென்மராட்சி பிரதேச செயலக கருத்திட்ட முகாமையாளர் சி.ஜெயந்தன், ஜே/293 கைதடி கிராம உத்தியோகத்தர் என்.தர்மினி மற்றும் சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர் வே.மோகனதாஸ் ஆகியோர் கலந்து [illegible] வர். (இ-14)

# சின்மயா மிஷனின் ஞான வேள்வி 'உன்னை அறிந்தால் உலகில் வாழலாம்'

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயா மிஷன் ஏற்பாட்டில் நடத்தப்படும் ஞானவேள்வி (யக்ஞம்) எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணிவரை நல்லூர்கந்தசுவாமி ஆலயமேற்கு வீதியில் அமைந்துள்ள நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் சின்மயா [illegible] சுவாமி ஞானதீதானந்த சரஸ்வதி ஆதிசங்கரரின் ''பஜ கோவிந்தம்'' எனும் நூலை அடிப்படையாகக் கொண்டு ''உன்னை அறிந்தால் உலகில் வாழலாம்'' என்னும் தலைப்பில் ஞானவேள்வி நடத்தவுள்ளார்.

அதேவேளை எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை காலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை நல்லூர் செட்டித்தெரு சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் ''அம்ருத பிந்து உபநிஷத்'' விளக்கவுரை வகுப்பு நடைபெறவுள்ளது. (5)

# மருத்துவ முகாம்

தமிழ்த்தாய் மன்றம் DASCO அமைப்புடன் இணைந்து நடத்தும் 8 ஆவது இலவச மருத்துவ முகாம் இன்று 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெறும். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரச்சினை தேசிய ஒருமைப்பாட்டுக்கு சவாலாகியுள்ளது!

## அமைச்சர் மனோ கணேசன் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

கல்முனை வடக்கு உப-பிரதேச செயலகம், சாய்ந்தமருது பிரதேச செயலகம், கல்முனை தெற்கு பிரதேச செயலகம் ஆகிய பிரதேச செயலகங்களை உள்ளடக்கியதுதான் கல்முனை மாநகரசபையாக இருக்கின்றது. இதில் சாய்ந்தமருது, கல்முனை தெற்கு ஆகியவற்றில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக இருக்கும் போது, கல்முனை வடக்கு உப-பிரதேச செயலகத்தில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள்.

இந்நிலையில் சாய்ந்தமருது பள்ளிவாசல் தலைவர்கள், தமது பிரதேச செயலக பிரதேசத்தை, கல்முனை மாநகரசபைக்கு முற்றிலும் வெளியே பிரித்தெடுத்து முழுமையான நகரசபையாக்க கோரி போராடுகிறார்கள். இந்நிலையில் கல்முனை வடக்கு தமிழ் சமூக தலைவர்கள் தமது உப பிரதேச செயலகத்தை, முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்தக்கோரி போராடுகிறார்கள். ஒரே இனத்தை சேர்ந்த முஸ்லிம் மக்கள், தனி நகர சபைக்காக போராடும் போது, சகோதர இனத்தை சார்ந்த தமிழ் மக்கள், தமது உப பிரதேச செயலகம், முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர வேண்டும் என போராடுவதில் என்ன தவறு இருக்கின்றது என இந்த கல்முனை வடக்கு தமிழர்களின் போராட்டத்தை எதிர்க்கும் அரசியல்வாதிகள் நாட்டுக்கும், அரசாங்கத்துக்கும் தர்க்கரீதியாக எடுத்துக் கூற வேண்டும்.

இந்தப் பிரச்சினையால் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் இன நல்லுறவு சீர்கெடுவதை இனியும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது என தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை நாடு திரும்பிய அமைச்சர் மனோ கணேசன் கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இது தொடர்பில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் தரப்பினர் என்னை சந்தித்து உரையாடியுள்ளனர். இதையடுத்து இப்பிரச்சினை தொடர்பில், துறைசார் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவுடனும் நான் தேசிய ஒருமைப்பாட்டு துறைசார் அமைச்சர் என்ற முறையில் கலந்தாலோசித்துள்ளேன். இதை இனியும் தொடர்ந்து நீடிக்க விடுவது நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டுக்கு குந்தகமாக அமைந்து விடும் எனவும், புத்தாண்டு விடுமுறையையடுத்து இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் நாம் தீர்மானித்துள்ளோம்.

இன, மத அடிப்படைகளில் கல்வி வலய, பிரதேச செயலக, உள்ளூராட்சி மன்ற எல்லைகளை நிர்ணயிப்பது தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும் இன்று வடக்கு- கிழக்கு மாகாணங்களின் பல்வேறு மாவட்டங்களில் இவை நடைமுறையில் இருக்கின்றன.

எனவே கல்முனை வடக்கு தமிழ் மக்கள் தொடர்பில் மாத்திரம், இதில் தவறு காண்பது முறையல்ல. அத்துடன் ஏற்கனவே இயங்கி வரும் உப-பிரதேச செயலகத்தையே முழு பிரதேச செயலகமாக தரமுயர்த்தும்படியே கோரிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

எனவே கல்முனை உபபிரதேச செயலகம், முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர வேண்டும் என்ற கோரிக்கையில் என்ன தவறு இருக்கின்றது என இந்த கல்முனை வடக்கு தமிழர்களின் போராட்டத்தை எதிர்க்கும் அரசியல்வாதிகள் நாட்டுக்கு இதுவரையில் தர்க்க ரீதியாக எடுத்துக் கூறத் தவறியுள்ளார்கள் என நான் நினைக்கிறேன்.

உண்மையிலேயே கடந்த பல பத்தாண்டு காலங்களாக எரிந்து வரும் இந்த பிரச்சினை தொடர்பில், நடந்து முடிந்த மாகாணசபை ஆட்சிக்காலத்தின் போது, கிழக்கு மாகாணத்தில் கூட்டாக ஆட்சி நடத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு-ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட்டாட்சி நிர்வாகம் தலையிட்டு சுமுகமான ஒரு தீர்வைக் கண்டிருக்க வேண்டும். அது நடைபெறவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது ஆகும்.

இன்று தமிழ் பேசும் இனத்தவர் மத்தியில் கிழக்கில் இந்தப் பிரச்சினை மெல்ல, மெல்ல பூதாகரமாகி கொண்டு வருகிறது. கண்ணிருந்தும், காதிருந்தும், அறிவிருந்தும், இதை பார்க்காமல், கேட்காமல், ஆராயாமல் பொறுப்பற்று நாம் இனியும் இருக்க முடியாது. மேலும் இனங்களிடையே சச்சரவு புள்ளிகளை அடையாளம் கண்டு நிவர்த்திக்கும், தேசிய ஒருமைப்பாட்டையும், ஏனைய பொறுப்புகளுக்கு மத்தியில், ஒரு பொறுப்பாக வரித்துக்கொண்டுள்ள துறைசார் அமைச்சரான எனக்கு இந்த பிரச்சினை பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# இரணைமடுக் குளத்திற்குள் நேற்று ஒரு இலட்சம் மீன் குஞ்சுகள் விடுவிப்பு





(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்திற்குள் தேசிய நீர் வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபையால் மீனவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு ஒரு இலட்சம் மீன் குஞ்சுகள் குளத்தில் விடப்பட்டன.

கடந்த மூன்று வருடங்களாக இரணைமடுக் குளத்தின் அபிவிருத்தி காரணமாக குளத்தின் நீர் முற்றாக வெளியேற்றப் பட்டதால் குளத்தை நம்பி வாழும் நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் கடந்த ஆண்டு குளத்தின் அபிவிருத்திகள் நிறைவடைந்த பின்னர் பருவ மழையும் போதியளவு பெய்தமையால் நன்னீர் மீன்பிடி தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு தேசிய நீர் வாழ் உயிரின வளர்ப்பு அதிகாரசபையினரும் கிளிநொச்சி இராணுவத்தினரும் இணைந்து சுமார் ஒரு இலட்சம் மீன் குஞ்சுகளை இரணைமடுத் குளத்தில் நேற்று விட்டனர்.

இதில் கிளிநொச்சி மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ரவிப்பிரிய, தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபையின் தலைவர் நுவான் பிரசாத் மதவன் ஆராச்சி மீன்பிடி தொழிலாளர்களும் கலந்து கொண்டனர். (இ-281)

# மன்னார் ஆயரிடம் ஆசி பெற்ற அமைச்சர் ஜோன் அமரதுங்க





பெரிய வார வாழிபாடுகள் மன்னார் மடுத் திருத்தலத்தில் இடம்பெற்று வருகின்ற நிலையில் அமைச்சர் ஜோன் அமரதுங்க மடு திருத்தலத்தில் தங்கியிருந்து பெரிய வார வழிபர்ட்டில் ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில் அமைச்சர் ஜோன் அமரதுங்க மற்றும் அவரது பாரியார் ஆகியோர் நேற்றுச் சனிக்கிழமை காலை மன்னார் ஆயர் இல்லத்திற்கு திடீர் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவல் பெனாண்டோ ஆண்டகையைச் சந்தித்து ஆசி பெற்றனர்.

இதன் போது மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளாரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-285)

# வவுனியாவில் இருபதுக்கும் மேற்பட்ட சாரதிகள் மீது வழக்குத் தாக்கல்!

(வவுனியா)

வவுனியா போக்குவரத்து பொலிஸார் நேற்றுக் காலை முதல் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது 20 க்கும் மேற்பட்ட சாரதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரியின் தலைமையில் வவுனியா நகரசபை வீதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது சுமார் இரு மணிநேரத்தில் மாத்திரம் இருபதுக்கு அதிகமான சாரதிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்குதல் செய்யப்பட்டுள்ளதுடன் பத்துக்கு மேற்பட்ட சாரதிகளுக்கு எதிராக தண்டப்பணமும் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த சோதனை நடவடிக்கையில் தலைக்கவசம் சீராக அணியாமை, சாரதி அனுமதிப் பத்திரம் இன்மை, அதிக சத்தம்



போன்ற பல்வேறு குற்றங்களுக்காகவே சாரதிகளுக்கு தண்டம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் இமைக்கும் நொடியில் எதுவும் நடக்கும்.
- வைரமுத்து

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# யாரோடு யார் சேருவார் தேர்தல் வருகின்றபோது

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவித்தல் எந்த நேரமும் வரக்கூடிய வாய்ப்பு உள்ளதாக அரசியல் அவதானிகள் ஊகம் வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் யார் போட்டியிடுவார்கள் என்பதில் கூட இன்னமும் எந்தக் கட்சியும் தீர்மானிக்க முடியாத அளவிலேயே இலங்கை அரசியல் உள்ளது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுச் சின்னத்தில் கோத்தபாய ராஜபக்ஷவைக் களமிறக்கலாம் என்று மகிந்த தரப்பு நம்பியிருந்தாலும் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷவை நிறுத்த முடியாமல் போனால் மொட்டுச் சின்னத்தில் யாரை போட்டியிட விடுவது என்ற கேள்வி எழும்.

இந்தக் கேள்விக்கான பதில் பலவாறாக உள்ளது. இவை மகிந்த ராஜபக்ஷ தரப்பின் நிலைப்பாடாக இருக்க,

ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்ன? என்றால், அங்கும் ஒரு தீர்க்கமான முடிவு இல்லை என்றே கூற வேண்டும்.

அதாவது அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் என்பது சஜித் பிரேமதாசவின் பரிபூரண நம்பிக்கை.

பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து எடுத்து அதனை சஜித் பிரேமதாசவிடம் ஒப்படைக்க ஜனாதிபதி மைத்திரி விரும்பியபோதிலும் அதனை ஏற்க சஜித் பிரேமதாச மறுத்துவிட்டார்.

இவ்வாறான மறுப்பின் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் களங்கம் ஏற்படுத்தி விடக்கூடாது என்ற நோக்கம் சஜித் பிரேமதாசவிடம் இருந்தாலும் மிகமுக்கியமான காரணம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராகத் தானே போட்டியிட முடியும் என்ற நம்பிக்கைதான்.

அதாவது ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருக்கும்போது ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படும். எனவே ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிடக்கூடிய வாய்ப்பு இல்லை என்பதால், அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் தான் தான் என்ற நம்பிக்கை சஜித் பிரேமதாசவிடம் உறுதியாக இருந்தது.

இந்நிலையில் இப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவாகவே இருப்பார் என்பது வெளிப்படத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில் சஜித் பிரேமதாச எடுக்கக் கூடிய முடிவு என்னவாக இருக்கும் என்பதைக் காலம்தான் தீர்மானிக்கும்.

சிலவேளைகளில் தற்போதைய ஜனாதிபதி மைத்திரியும் சஜித் பிரேமதாசவும் கூட்டுச் சேர்ந்து ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாச போட்டியிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அரசியலைப் பொறுத்தவரை எல்லாம் இப்படியாகத்தான் இருக்குமென்று அறுதியிட் டுக் கூற முடியாதென்பதால், யாரோடு யார் சேருவார் என்பதைக் காலம் கனிந்து தானா கத் தெரிவிக்கும்.

# இராணுவ ரீதியான குண இயல்புகளை ஜனாதிபதியாக வந்ததும் மாற்றிக் கொள்வேன்

## கோத்தபாய தெரிவித்ததாக வாசுதேவ தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் ஜனாதிபதியாக தான் பதவிக்கு வந்தால், தனக்குள் இருக்கும் இராணுவ ரீதியான குண இயல்புகளை மாற்றிக் கொள்வேன் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தையின்போது குறிப்பிட்டதாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைமையிலான புதிய இடதுசாரி முன்னணியின் பிரதிநிதிகள் கடந்த 16ஆம் திகதி கோத்தபாய ராஜபக்ஷவை சந்தித்து விசேட யோசனைகளை கோத்தபாயவிடம் கையளித்திருந்தனர்.

கோத்தபாய ராஜபக்ஷ தனது இராணுவ நிர்வாக குண இயல்புகளை மாற்றிக் கொள்வாரா என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர்கள் அவரிடம் முதலில் கேட்டுள்ளனர்.

இதற்கு பதிலளித்துள்ள கோத்தபாய, தான் பல ஆண்டுகள் இராணுவத்தில் சேவையாற்றியதால், தனக்குள் இராணுவத்தின் குண இயல்புகள் இருந்தாலும் நாட்டின் ஜனாதிபதியாக பதவிக்கு வந்தால், அதனை மாற்றிக் கொள்வேன் எனக் கூறியுள்ளார்.

இதனை தவிர நாட்டின் தேசிய சுதந்திரக் கொள்கையை பாதுகாப்பது, நலன்புரி தொடர்பான அரச இலவச கொள்கையை வலுப்படுத்துவது, ஜனநாயகத்திற்கான பொதுமக்களின் பங்களிப்பு, கிராமப்புற வறுமையை ஒழிப்பது மற்றும் நாட்டின் ஐக்கியத்தை உருவாக்குவது உள்ளிட்ட யோசனைகளை புதிய இடதுசாரி முன்னணியினர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் முன்வைத்துள்ளனர். (ம-3)

# தமிழரசுக் கட்சியின் இளைஞரணி மாநாடு

## தலைவராக கிழக்கு இளைஞன் தெரிவு

இலங்கை தமிழரசுக் கட்சியின் வடக்கு கிழக்கு பகுதியினை சேர்ந்த இளைஞர் அணி மாநாடும் நிர்வாகத் தெரிவும் வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது, இளைஞரணியின் தலைவராக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை சேயோன் தெரிவு செய்யப்பட்டதோடு செயலாளராக யாழ்ப்பாணத்தை சேர்ந்த சுப்பிரமணியம் சுரேன் தெரிவு செய்யப்பட்டார்.

அத்துடன் பொருளாளராக வவுனியாவைச் சேர்ந்த சிவலோகநாதன் சிவதர்சன் தெரிவானார்.

இம்மாநாட்டில் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், எஸ்.சிவமோகன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, துரைரத்தினசிங்கம், ஈ.சரவணபவன் மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் துரைராஜாசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-3)

# தலைகீழாக ஏற்றப்பட்ட தமிழரசுக் கட்சியின் கொடி

இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞரணி நிர்வாகத்தெரிவு மற்றும் மாநாடு நேற்று வவுனியாவில் இடம்பெற்றபோது தமிழரசுக் கட்சியின் கொடி தலைகீழாக ஏற்றப்பட்டமையினால் சிறு குழப்பம் ஏற்பட்டது.

இளைஞரணி நிர்வாகத் தெரிவு இடம்பெறுவதற்கு முன்னர் கட்சியின் கொடி ஏற்றுவதற்காக அனைவரும் நிகழ்வு இடம்பெற்ற வவுனியா நகரசபையின் மண்டபத்திற்கு முன்பாக கூடியிருந்த நிலையில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவால் கட்சியின் கொடி ஏற்றப்பட்டது.

ஏற்றப்பட்டுக் கொண்டிருந்த கட்சியின் கொடி தலைகீழாக காணப்பட்டமையை கட்சியின் செயலாளர் துரை ராஜசிங்கத்தால் கண்டுபிடிக்கப்பட்டு மீண்டும் கொடி இறக்கப்பட்டது.

இதனையடுத்து அங்கிருந்த இளைஞர்கள் சிலர் அவ்விடத்திற்கு வந்துகொடியை சீர் செய்து கொடுத்திருந்த நிலையில் மீண்டும் கொடி ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகியிருந்தன. (ம-3)

# மின்னல் தாக்கியதில் இளைஞன் உயிரிழப்பு

## அநுராதபுரத்தில் சம்பவம்

அநுராதபுரம் - ரம்பேவ, கோனேவ பகுதியில் மின்னல் தாக்கி 19 வயதான இளைஞர் உயிரிழந்துள்ளார்.

வீட்டின் சமையலறையில் இருந்தபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மின்னல் தாக்கியதில் ஏற்பட்ட அதிர்ச்சியினால் மற்றுமொருவர் அநுராதபுரம் பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-3)

# யாழ்.மாவட்ட பாடசாலை அதிபர்களுடன் கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலை அதிபர்களை கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் சந்தித்து கலந்துரையாடுகின்ற நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதன் பிரகாரம் நாளை 22ஆம் திகதி காலை 8 மணிக்கு தீவக வலய பாடசாலை அதிபர்களுடனான சந்திப்பு வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் இடம்பெறும்.

அன்றைய தினம் காலை 10 மணிக்கு யாழ்ப்பாண கல்வி வலய பாடசாலை அதிபர்களுடனான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியிலும் பி.ப ஒரு மணிக்கு வலிகாமம் கல்வி வலய பாடசாலை அதிபர்களுடனான கலந்துரையாடலும் இடம்பெறும்.

நாளை மறுதினம்23 ஆம் திகதி காலை 9 மணிக்கு தென்மராட்சி கல்வி வலய பாடசாலை அதிபர்களுடனான கலந்துரையாடலும்அன்றைய தினம்மு.ப 11.30 மணிக்குவடமராட்சி கல்வி வலய பாடசாலை அதிபர்களுடனும் கலந்துரையாடல் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ம-3)

# ஒன்றிணைந்த எதிரணியின் விசேட கூட்டம் அடுத்த வாரம்

(கொழும்பு)

ஒன்றிணைந்த எதிரணியின் பாராளுமன்ற குழுவினரின் விசேட கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அடுத்த வாரம் இடம்பெறவுள்ளது.

அதன்படி எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

சமகால அரசியல் நிலவரத்துடன் எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து இதன்போது கலந்துரையாடப்படவுள்ளதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா தெரிவித்துள்ளார். (ம-3)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்




- இறைவன் கூறுகின்றான்: எவர்கள் இறைநம்பிக்கை கொண்டு நற்பணிகள் ஆற்றி தொழுகையையும் நிலைநாட்டி, ஜகாத்தும் (தர்மமும்) கொடுத்து வருகிறார்களோ அவர்களுக்கு உரிய கூலி நிச்சயமாக அவர்களுடைய அதிபதியிடம் உண்டு. அவர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை அவர்கள் துயரப்படவும் மாட்டார்கள்.
- நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிகின்றவர்களையும் பூமியில் அராஜகம் செய்து திரிபவர்களையும் நாம் சமமாக்கி விடுவோமா என்ன? இறையச்சமுள்ளோரை ஒழுக்கக் கேடர்களைப் போன்று ஆக்குவோமா, என்ன?
- நம்பிக்கையாளராய் இருப்பவர் பாவம் செய்தவர் போல ஆகிவிடுவாரா?
- நபிகள் நாயகம் (ஸல்) நவின்றார்கள்: தனக்கு விரும்புவதையே தனது சகோதரனுக்கும் விரும்பாத வரை ஒருவன் இறைநம்பிக்கையாளனாக மாட்டான்.
- எவருடைய அண்டை வீட்டார் அவரது துன்பங்களை விட்டுப் பாதுகாப்பு பெறவில்லையோ அவர் இறைநம்பிக்கை இல்லாதவர்.
- நாணமும், பாதையில் கிடக்கும் தொல்லை தரும் பொருட்களை அப்புறப்படுத்துவதும் இறைநம்பிக்கையின் பகுதிகளாகும். (வேத வரிகளும் தூதர்மொழிகளும் நூலில் இருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## தாமோதரம்பிள்ளை தர்மலிங்கம்

**(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)**



யாழ்.பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும் இல.50, கே.கே. எஸ்.வீதி, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை தர்மலிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (19.04.2019) வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - தங்கச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான வரதரட்ணராஜா - பூலோகநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தர்மநாயகி அவர்களின் அன்புக் கணவரும் திகழ்மதி, ஜலஜா, லலிதினி, சிவகுமார், விக்கினேஸ் வரன், கிருஷ்ணகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற குலேந்திரன், பாலச்சந்திரா, கிருஷ்ணதாசன், தேவசேனை, ரோகினி, சாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான M.T.சுப்பிரமணியம், M.T.பொன்னம்பலம், தங்கம்மா, மனோன்மணி, M.T.திருநாவுக்கரசு, பராசக்தி, M.T. நடராஜா, M.T.சோமசுந்தரம் மற்றும் M.T.துரையப்பா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் ஸ்ரீகரன், குணசீலன், சோபனதேவி ஆகியோரின் அன்பு மைத்து னரும் கார்த்திகா - சஞ்ஜீவ், அபராஜிதன் - சர்மினா, பிரசோதிகா, மயூரிக்கா, தினேசியா, டர்சியா, அபிரா, வராகி, ஆர்த்திகா, அகினாஷ், அக்ஷி ஆகியோரின் அன்புப் பேரனும் மானவ், ஷ்ரவன் ஆகியோரின் ஆசைப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.04.2019) திங்கட் கிழமை காலை 8.00 மணியளவில் இல.50, கே.கே.எஸ்.வீதி, கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-6183)

இல.50, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.
தொ.பே: 021 222 8063, 077 784 9369 (அபராஜிதன் - பேரன்)

தகவல்:-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## நாகச்சந்திரன் சிவச்சந்திரன் (சிவா)

**(ஆசிரியர் - யாழ்.இந்துக் கல்லூரி)**



ஆலடி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகச்சந்திரன் சிவச்சந்திரன் (சிவா) (ஆசிரியர் - யாழ்.இந்துக் கல்லூரி) கடந்த 17.04.2019 காலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் நாகச்சந்திரன் - சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் சர்வானந்தன் - திலகவதி தம்பதிகளின் அன்பு மரு மகனும் மதிவதனியின் அன்புக் கணவரும் தாருஜன் (மாணவன் - யாழ்.இந்துக் கல்லூரி), பானுஜன் (மாணவன் - யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நந்தினி (பிரான்ஸ்), கவிச்சந்திரன், செல்வச்சந்திரன் ஆகியோரது அன்புச் சகோதரனும் ஞானலிங்கம் (பிரான்ஸ்), சபேசன் (லண்டன்), சுதர்சனா, தாரணி, பார்த்தீபன் (லண்டன்), வாகீசன் (லண்டன்), புஸ்பராணி, ரஞ்சன் (சுவிஸ்), மாலினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் யாழினி (லண்டன்), துசிதரா (லண்டன்), புஸ்பவதி (லண்டன்), பகீரதன் (அமெரிக்கா), பத்மநாதன், சுகிர்தினி (சுவிஸ்), கலாநந்தன், கலாரஜனி, கலாவதனி, கலாராகினி, பாலினி, பபியா, குமரன் (கனடா) ஆகியோரின் ஒன்றுவிட்ட அன்புச் சகோதரனும் ஜெரமி, நிக்கோலா, ஜனனி (பிரான்ஸ்), பிரவீன் (லண்டன்), கபிசன் (லண்டன்), நிதர்சனா, நிவேதனா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமாவும் மைதிலி, ஜானுயன், நிரஜா, கரீஸ், பிரவீனா (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் மகாலிங்கம் - பரமேஸ்வரி தம்பதிகளின் பெரிய மருமகனும் சர்வலோகேஸ்வரி, சர்வஇராஜேஸ்வரி ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.04.2019) திங்கட்கிழமை காலை 7.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(8538)

இலங்கை வங்கி முன் ஒழுங்கை
சுன்னாகம் தெற்கு.

தகவல்:- குடும்பத்தினர்
021 224 1137

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்பர் மலையிலேயே வாள்வெட்டு இடம் பெற்றது

நேற்றைய வலம்புரியின் முன் பக்கத்தில் வெளிவந்த இந்திர விழாவில் வாள்வெட்டுத் தாக்குதல் என்ற செய்தித் தலையங்கம் தவறுதலாக இடம்பெற்றுள்ளது.

சம்பந்தப்பட்ட வாள்வெட்டுச் சம்பவம் கம்பர்மலையில் இடம் பெற்றது என்பதே சரியானதாகும்.

## ஜெனிவா தீர்மானம்; அரசியல் தீர்வு குறி...

பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம் பெற்ற தமிழரசுக் கட்சியின் இளைஞரணி மாநாடு மற்றும் நிர்வாகத் தெரிவு என்பவற்றின் பின் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 28 ஆம் திகதி தமிழரசுக் கட்சியின் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. அதனையொட்டி தமிழரசுக் கட்சியின் வாலிபர் மாநாடும் அதன் நிர்வாகத் தெரிவும் நேற்று நடைபெற்றது.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் இருந்து இளைஞர், யுவதிகள் உள்வாங்கப்பட்டு அதன் நிர்வாக கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அவர்கள் நடைபெறவுள்ள எமது மாநாடு தொடர்பாக கவனம் செலுத்தி தமது கருத்துக்களையும் மாநாட்டில் சமர்ப்பிப்பர்.

ஜெனிவா தீர்மானத்தில் அரசாங்கம் இணை அனுசரணை வழங்கி ஏற்றுக் கொண்ட விடயங்களை ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் கூட நடைமுறைப் படுத்துவதில் சிக்கல்கள் உள்ளதாக கூறி அதனை நடைமுறைப் படுத்தவில்லை. இந்நிலையில் அதிஷ் இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தாமை குறித்து மாநாட்டில் கவனம் செலுத்தப்படும்.

அத்துடன், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு, புதிய அரசியலமைப்பு மற்றும் தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக ஆராயப்பட்டு முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும். அந்த தீர்மானத்திற்கு அமைவாக சர்வதேச இராஜ தந்திரிகளுடன் இலங்கை தமிழரசுக் கட்சி பேசுவதுடன், ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேசி அடுத்த கட்ட நகர்வுகளை முன்னெடுக்கும் எனத் தெரிவித்தார். (ம-3)

## இளைஞர் கட்டமைப்பு உருவாக்கப்...

ராஜா தெரிவித்துள்ளார்.

எங்களது விடுதலைப்போரில் இளைஞர்களும் பங்கேற்க கூடியவர்களாக ஜனநாயக நடைமுறைகளில் இந்த இளைஞர்களை பங்கு பற்றக்கூடியவர்களாக இளைஞர் கட்டமைப்பை உருவாக்கியுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை தமிழரசுக் கட்சியின் இளைஞரணிக்கான நிர்வாகத்தெரிவு இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், இன்றுவரை, இலங்கை அரசியலில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள், பாராளுமன்றத்தில் ஏற்பட்ட அரசியல் அமைப்பு நெருக்கடிகள், அவற்றுக்கப்பால் தமிழர்களுடைய இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பது மற்றும் தமிழர்களுடைய பிரதேசங்களிலே அதிலும் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் முழுமையாக மீள்குடியேற்றப்படாமல் உள்ளார்கள்.

இந்த அடிப்படையைக் கொண்டு 30/1 என்ற மனித உரிமை பேரவை தீர்மானம் 2015 ஆம் ஆண்டும் அதன் பின்னர் 2017 ஆம் ஆண்டும் தற்போது 2019 ஆம் ஆண்டு 30/1 என்ற தீர்மானமும் 34/1 என்ற தீர்மானமும் 40/1 என்ற தீர்மானமும் மனித உரிமை பேரவையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

அவற்றை இலங்கை அரசு தாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்கின்றது. தீர்மானத்திற்கு அனுசரணை வழங்கிவிட்டு, ஜனாதிபதியும் அரசாங்கமும் கூட தமக்கு அதில் வேறுபட்ட கருத்துக்கள் உள்ளமையால் நிறைவேற்ற மாட்டோம் என ஒரு புறத்திலும் எங்களால் முடிந்ததை நிறைவேற்றுவோம் என்றும் கூறி வருகின்றார்கள்.

ஆகவே எங்களுடைய மாநாட்டில் இனப்பிரச்சினைத் தீர்வு எட்டப்படாத நிலையிலும் மனித உரிமைப் பேரவையில் எட்டப்பட்ட தீர்மானங்களையும் இந்த அரசு நிறைவேற்ற வேண்டும் என்பதனை நாம் வலியுறுத்த வேண்டியிருக்கும்.

இனப் பிரச்சினைக்கும் மனித உரிமை பேரவைக்கும் இந்த அரசு செவிசாய்த்து இந்த நாட்டில் இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதற்கான அவகாசம் ஒன்று விதிக்கப்படும். இதனடிப்படையில் வேண்டிய தீர்மானங்களை நாங்கள் நிறைவேற்றுவோம்.

இந்நிலையில் ஜனநாயக ரீதியில் போராட்டங்களை நடத்த வேண்டுமானால் அத்தகைய தீர்மானங்களையும் நாங்கள் எடுக்க வேண்டும் என்பதனை கூறிக் கொள்ள விரும்புகின்றோம் என்று அவர் தெரிவித்தார். (ம-3)

## கிளிநொச்சி இளைஞனை 5 நாளாக காணவில்லை

### பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் 19 வயது இளைஞனை 5 நாட்களாகக் காணவில்லை என கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் இளைஞனின் தாயார் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

கிளிநொச்சி அறிவியல் நகரைச் சேர்ந்த சத்தியசீலன் சத்தியராஜ் என்ற இளைஞனையே இவ்வாறு காணவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உறவினர் வீடுகள் மற்றும் இளைஞன் பணியாற்றும் இடம் எங்கும் தேடியும் இன்று வரை அவரைக் காணவில்லை என்று தாயார் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு வழங்கினார். (ம-3)

## போர்க் குற்றச்சாட்டிலிருந்து மகிந்த...

கப்பட்ட மக்களை ஏமாற்றி, அரசியல் மோசடி செய்து, பாதிக்கப்பட்ட மக்களை நடுத்தெருவில் விட்டுள்ளனர்.

இவ்வாறு காரசாரமாக குற்றம் சாட்டியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

யாழில் நடந்த செய்தியாளர் சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் நியமிக்கப்பட்ட பகவதி விசாரணைக் குழு எந்த விசாரணைகளிலும் நேரடியாக தலையிடவில்லை. விசாரணைகளை கண்காணிக்கவே உருவாக்கப்பட்டிருந்தது.

ராஜபக்ஷவின் ஆட்சியில் நடந்த விசாரணைகளில் எந்தவொரு தாக்கத்தையும் செலுத்த முடியவில்லையென்பதால்தான் அவர்கள் விலகினார்கள். அந்த நிலைமையில் நடப்பது முழுமையான உள்ளக விசாரணைதான். நீதிமன்ற விசாரணைகளில் செய்தியாளர்கள் செய்தி சேகரித்து செய்தி தயாரிப்பதை போலத்தான், அந்த குழு வெறுமனே அறிக்கை தயாரித்தது.

இலங்கை விவகாரத்தை சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல முடியாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சொல்கிறார்கள். ரோஹிங்யா முஸ்லிம்கள் மீதான இனசுத்திகரிப்பு நடவடிக்கைக்கு எதிராக ஐ.நா நடவடிக்கை எடுத்துள்ளது. இம்முறை ஜெனிவா அமர்வில், மியன்மாரிற்கான ஐ.நா பிரதிநிதி, மியன்மாரை சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமென வலியுறுத்தினார். அவருக்கு சட்டம் தெரியாதா? சீனாவின் பெரிய கடற்படை தளம் அங்கிருக்கிறது. சீனா வந்து தடுக்காதென அந்த அம்மையாருக்கு தெரியாதா?

ஏனெனில் பூகோள அரசியல் வேறு வழிகளை கண்டுபிடிக்கிறது. வல்லரசுகளின் போட்டித்தன்மை அவ்வளவு தூரம் போகும். இதையறிந்துதான், வல்லரசுகள் எம்மை கறிவேப்பிலையாக பாவிக்காமல் இருக்க வேண்டுமென வலியுறுத்துகிறோம். எதுவும் நடக்காதென தெரிந்தும், மனித உரிமை பேரவையில் எமது விவகாரத்தை வைத்திருக்க கூடாது. பாதுகாப்பு சபைக்கு கொண்டு செல்லும் கோரிக்கையை நாம் தான் எழுப்ப வேண்டும்.

இன்னும் இரண்டு வருடம் நாங்கள் விரும்பிய ஆட்சி இங்கு இருக்குமெனில் பொறுப்புக்கூறல் முடக்கப்படும்.

புலம்பெயர், தாயக மக்களும் மனித உரிமைகள் பேரவையை முற்றாக மறந்து, குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பொறுப்புக்கூறல் விடயத்தில் தமிழ் மக்களிற்கு இன்று பிரதான தடையாக இருப்பது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான். எம்மை இன அழிப்பு செய்த அரசுகள் என்ன செய்யுமென்பது எமக்கு தெரியும்.

அவர்கள் பொறுப்புக்கூற தயாராக இருக்கமாட்டார்கள். பாதிக்கப்பட்ட மக்களின் பெயரில் என்ன கேட்கிறோம் என்பதே முக்கியம். கடந்த 10 வருடமாக பொறுப்புக்கூறல் விடயத்தில் மகிந்த, கோத்தபாய ராஜபக்ஷவை போன்ற போர்க்குற்ற வாளிகளை காப்பாற்றியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான். பாதிக்கப்பட்ட மக்களிற்கு எப்படியான நீதி தேவையென கோரும் உரிமையுள்ள நிலையில், தமது எஜமான்களான வல்லரசுகளின் விருப்பப்படி பாதிக்கப்பட்ட மக்களை ஏமாற்றி, அரசியல் மோசடி செய்து, பாதிக்கப்பட்ட மக்களை நடுத்தெருவில் விட்டுள்ளனர் என்றார். (ம-3)

## அனைவரையும்...

வரும் 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அணில் ஜாசிங்க குறிப்பிட்டார்.

60 வைத்தியசாலைகளில் இந்த திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

குறித்த வைத்தியசாலைகளில் பதிவு செய்யப்படும் நபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு மருத்துவ வசதிகள் மற்றும் சுகாதார சேவைகளை வழங்கவுள்ளதாகவும் டாக்டர் அணில் ஜாசிங்க குறிப்பிட்டார்.

எனினும், வழமை போல நாட்டிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் மருத்துவ சேவைகளை எவ்வித இடையூறுமின்றி அனைவரும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

பிரதேச வைத்தியசாலைகளின் சேவைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்த புதிய செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அணில் ஜாசிங்க குறிப்பிட்டார். (ம-3)

## மேல்மாகாண சபையும் இன்றுடன் ஆளுநர் வசம்

(கொழும்பு)

மேல் மாகாண சபையின் பதவிக்காலம் இன்றுடன் நிறைவடைவதாகவும், அதற்கான வர்த்தமானி அறிவித்தல் கைச் சாத்திடப்படவுள்ளதாகவும் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி தெரிவித்துள்ளார். நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங் களில் வடக்கு, கிழக்கு, வடமேல், மத்திய, வட மத்திய, தெற்கு மற்றும் சப்ரகமுவ ஆகிய ஏழு மாகாணங்களின் பதவிக்காலம் முடிவடைந்துள்ளன.

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாமை காரணமாக இம் மாகாணங்கள் தற்போது ஆளுநரின் அதிகாரத்தின் கீழ் காணப்படுகின்றன. (ம-3)

## கடந்த பத்து நாட்களில் நாட்...

ரோஹன தெரிவித்துள்ளார். இந்த பத்து தினங்களில் 700 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. விபத்துக்களில் 450 பேர் காயமடைந்துள்ளார்கள்.

அவர்களில் 186 பேர் கடும் காயங்களுக்கு உள்ளானார்கள். மது போதையில் வாகனம் செலுத்திய சுமார் ஆயிரம் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

வீதி விதிமுறைகளை மீறிய 45 சாரதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதி பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## யாழ். மாவட்ட சுகாதார...

பெற்றுச் சென்ற நிலையில் பதில் பணிப்பாளராக வைத்தியர் தேவநேசன் கடமையாற்றிவந்தார்.

இந் நிலையில் மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரினால் யாழ் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளராக சத்தியமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராகவும் கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கது. (ம-9,10)

## முடிந்தால் மீண்டும் அமெரிக்கா...

கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்காவுக்குள் நுழைந்தால் அவரை கண்காணிக்க குழுவொன்று செயற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

முடிந்தால் இன்னுமொரு முறை அமெரிக்காவுக்கு வருமாறு தான் அவரிடம் தெரிவித்து கொள்கிறேன் என யஸ்மின் சுகா குறிப்பிட்டுள்ளார்.

கோத்தபாயவின் திமிர் தனம் காரணமாகவே அமெரிக்காவில் வழக்கில் சிக்கினார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோத்தபாயவுக்கு எதிராக கலிபோர்னியா நீதிமன்றத்தில் ரோய் சமாதானத்துடன் இணைந்து யஸ்மின் சுகா வழக்கு ஒன்று தாக்கல் செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

மஹஜன சம்பத
திகதி 2019/04/20
சீட்டிழுப்பு இலக்கம் 3899
X 3 6 6 4 9 2
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.04.20
சீட்டிழுப்பு இலக்கம் 2095
N 28 53 54 80

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுப்பாட்டை...

த்தனர்.

இந்தச் சம்பவம் உரும்பிராய் சந்தி, இலங்கை வங்கிக்கு அருகாமையில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

இதில் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த யோகேந்திரன் தமிழரசன் (வயது-19) என்ற இளைஞரே குறித்த விபத்தில் உயிரிழந்தவராவார். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டியுடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றதாக சம்பவ இடத்தில் நின்றவர்கள் தெரிவித்ததாகப் பொலிஸார் கூறினர்.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றொரு இளைஞனும் முச்சக்கர வண்டிச் சாரதியும் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-9-10-60-78-87-101-104)

## புலிகளின் பாடல்...

தலைப் புலிகளின் எழுச்சிப் பாடல்களை நாதஸ்வர இசையில் மீட்டியதாக தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் வருடாந்த மகோற்சவப் பெருவிழா நடைபெற்றிருந்த நிலையில் தீர்த்தத் திருவிழா மற்றும் இந்திரவிழாவுடன் கொடியிறக்கம் நடைபெற்றது.

இதனிடையே, குறித்த ஆலயத்தில் சப்பைரதம், தேர் உள்ளிட்ட பெரும் விழாக்களின் போது தவில் நாதஸ்வரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சிப் பாடல்களை இசையாக மீட்டினார்கள் என தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையிலேயே புலனாய்வுப் பிரிவினரால் அவர்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## ஊடகவியலாளர்...

முகாம் முன்றலில் காணாமல் போனோரின் உறவுகளுடைய கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

அப்போது அங்கு வந்த நபர் ஒருவர் போராட்டத்தை படம் பிடித்ததுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் ஊடகவியலாளர்களையும் படம் பிடித்துள்ளார்.

இதை அவதானித்த ஊடகவியலாளர்கள் குறித்த நபரை பிடித்து விசாரித்துள்ளனர். அவர் தன்னைப்பற்றிய விபரங்களை தெரிவிக்க மறுத்த காரணத்தினால் அவரை பொலிஸ் நிலையம் கொண்டு செல்ல முற்பட்டுள்ளனர். அப்போது தான் கடற்படைச் சிப்பாய் என தெரிவித்துள்ளார்.

அதனை தொடர்ந்து முல்லைத்தீவு பொலிஸாரை சம்பவ இடத்திற்கு வருமாறு அழைத்தபோது அவர்கள் குறித்த இடத்திற்கு வர தாமதமான நிலையில் குறித்த நபரை வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள கோத்தபாய கடற்படை முகாமிற்கு அழைத்து சென்று அவர் கடற்படையினை சேர்ந்தவரா என அடையாளப்படுத்தியபோது கடற்படையினர் அவர் தங்களுடைய நபர் என தெரிவித்தனர். அவரை குறித்த இடத்தில் வருகை தந்த பொலிஸாரிடம் ஒப்படைத்துவிட்டு ஊடகவியலாளர் திரும்பியுள்ளார்.

இந்த நிலையில் குறித்த கடற்படை சிப்பாயை தாக்கியதாக தெரிவித்து கடற்படையால் ஊடகவியலாளர் தவசீலனுக்கு எதிராக கடந்த 18 ஆம் திகதி முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அதனடிப்படையில் தவசீலனை விசாரணை செய்த பொலிஸார் அவரை கைது செய்து நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் ஒரு இலட்சம் ரூபாய் ஆட்பிணையில் விடுவித்ததுடன் எதிர்வரும் 30 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். (ம-9)

## 113 வயது மூதா...

யாழ்ப்பாணத்தில் அதிக காலம் வாழ்ந்த வயோதிபர்களில் இவரும் ஒருவர். (ம-3)


## அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட சமாதான நீதவான்களை ஒன்றிணைத்து சங்கம் அமைப்பது சம்பந்தமான கலந்துரையாடலும் ஆலோசனைக்குமான ஒரு ஒன்றுகூடல் எதிர்வரும் 28.04.2019ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை ஒன்றுகூடல் மகாநாட்டு மண்டபத்தில் நடத்த ஏற்பாடாகியுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தை வதிவிடமாகக் கொண்டு இப்பதவியினைப் பெற்ற அனைவரையும் இக்கலந்துரையாடலில் தவறாது சமூகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

*ஏற்பாட்டுக்குழு சார்பில்:*

தேசகீர்த்தி மா.பரராஜசேகரம்
சமாதான நீதவான், கிளிநொச்சி.
தொடர்புகளுக்கு: 077 704 7266

(C-6171)

## கடை விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் கடை ஒன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

077 515 3123

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ். நகரில் இயங்கும் சேவை நிறுவனம் ஒன்றுக்கு கிளை உதவியாளர் (ஆண்) தேவை.

**தகைமைகள்**

01. யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02. A/L சித்தி
03. வயதெல்லை (18 - 30)

*தொடர்புகளுக்கு:*
076 690 8976,
077 932 2657

(C-6175)

## காணி விற்பனைக்கு

பொன்னாலை வீதி, மானிப்பாய் மேற்கில் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0772756720, 0775779071

(6516)

## வான், கார் வாடகைக்கு தேவை

வான்கள், கார்கள் மாதாந்த வாடகைக்கு, நீண்ட கால குத்தகைக்குத் தேவை. தொடர்புகளுக்கு:

071 093 8967

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-6164)

## வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் – மீசாலை – கிளிநொச்சி – கனகராயன்குளம்
முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா – திருகோணமலை

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள H.G தொடர் கொண்ட லான்சர் (50) யப்பான் (பெண்களுக்கு உகந்தது) பார்வையிடல் பிற்பகல் 3.00 மணிக்கு மேல்.

077 418 6641
077 476 7181

(6536)

## WEC COLLEGE

மொழிக்கற்கை கல்லூரி
(புதிய உயர் கல்லூரி வளாகம்)
ஆரியகுளம் யாழ்ப்பாணம்
மற்றும் சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447, 0217200989

**IELTS (ACADEMIC/GENERAL)**

தனிப்பட்ட வகுப்பு ஒழுங்கு முறைகள். 30,60,90 மணித்தியால முறையிலான வகுப்பு ஒழுங்குகள்

திருமணமாகி UK செல்பவர்களுக்கான
**IELTS LIFE SKILLS A1 / B1**

ஒரு வகுப்பில் 8 மாணவர்கள் மட்டுமே உள்வாங்கப்படுவார்கள்.
ஒவ்வொரு மாணவர்களிலும் தனிப்பட்ட கவனிப்பு
இரண்டு ஆசிரியர்களின் (ஆண்/பெண்) உதவியுடன் வழிகாட்டல்கள்.

**GERMAN / SWISS - DEUTSCH**

ஒரு வகுப்பில் 8 மாணவர்கள் மட்டுமே உள்வாங்கப்படுவார்கள்.
Unlimitted Hours Classes
ஒவ்வொரு மாணவர்களிலும் தனிப்பட்ட கவனிப்பு

**DUTCH ( NETHERLAND/HOLLEND**

ஒரு வகுப்பில் 4 மாணவர்கள் மட்டுமே உள்வாங்கப்படுவார்கள்.
ஒவ்வொரு மாணவர்களிலும் தனிப்பட்ட கவனிப்பு
Unlimitted Hours Classes

**SPOKEN ENGLISH WITH GRAMMER**

ஒரு வகுப்பில் 10 மாணவர்கள் மட்டுமே உள்வாங்கப்படுவார்கள்.
ஒவ்வொரு மாணவர்களிலும் தனிப்பட்ட கவனிப்பு.
இரண்டு ஆசிரியர்களின் (ஆண்/பெண்) உதவியுடன் வழிகாட்டல்கள்.

(C-6179)

## காணி விற்பனைக்கு

நீர்வேலி சந்திக்கு அருகாமையில் பருத்தித்துறை வீதியில் 50 மீற்றர் தொலைவில் 11 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
076 085 2725,
077 123 5671

(6535)

## Wickramarachchi HEARING CARE



ஏப்ரல் 30 ஆம் திகதி வரை மூக்குக் கண்ணாடி மற்றும் சன் கிளாஸ் வகைகளுக்கு 75% வரை விலைக் கழிவு வழங்கப்படும். (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

(C-6172)

ஜெ.எம்.விக்கிரமராச்சி அன் கம்பனி
இல.178, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 221 9282 / 021 222 8109
www.wickramarachchiopticians.com / www.hearingsrilanka.com

Batticaloa Branch
No.8, Bailey Road, Arasady, Batticaloa.
Tel: 065 222 9114

## பணியாளர் வெற்றிடம்

01. தொழிற்சாலை முகாமையாளர் ஆண் (முன் அனுபவம்)
02. தொழிற்சாலை பணியாளர் ஆண்/பெண் (18 - 30 வயது வரை)
03. வெல்டர்
04. வெல்டர் உதவியாளர்
05. தச்சுத் தொழிலாளி
06. தச்சுத் தொழிலாளி உதவியாளர்
07. MDF வேலை தெரிந்தவர்கள்
08. இரவு நேர பாதுகாவலர்



நேர்முகத் தேர்வு : 27.04.2019 சனிக்கிழமை
நேரம் : 8மணி முதல் 5மணி வரை
இடம் : EVT (PVT) LTD, புன்னாலைக்கட்டுவன் தெற்கு
தொ.பே : 077 656 6873, 021 224 0110

(C-6166)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3;2 ஆம் [illegible] வரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை : 30.00
Registered as a Newspaper in Srilanka
வாரமலர்
# வலம்புரி
சங்குநாதம்
நாதம் 213
Viber 076 636 3378
வள்ளுவர் ஆண்டு 2050 21.04.2019 தொலைபேசி : 021 222 3378



## யுத்தம் வேண்டாம்



## க(ா)ட்சி மாற்றம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## நாய்கள் காப்பக திறப்பு விழாவிற்கு செல்லாத கால்நடை வைத்தியர்கள்

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

அதனைத் தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். மன்னார் திருக்கேதீச்சர சிவராத்திரி வளைவைத் தள்ளி விழுத்தியமையைக் கண்டித்து கடந்த 6 ஆம் திகதி மருதனார்மடத்தில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. அந்தச் சாத்வீகப் போராட்டத்தில் பங்குபற்றிய நாகேந்திரம் சுபாதர்சன் அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை நிறைவு செய்துவிட்டு வீட்டிற்குத் திரும்பிய பின்னர் திடீரென காலமானார். அவரின் உண்ணாவிரதப் போராட்டம் உண்மையில் உத்தமமானது. சைவசமயத்திற்காகத் தன்னுயிரைத் தியாகம் செய்த சிவத்திருமகன் சுபாதர்சன் அவர்களுக்கு ஆலடி மாநாடு தனது மௌன அஞ்சலியைச் செலுத்துகிறது.

இவ்வாறு பண்டிதர் பரமலிங்கம் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்தும் கருத்துரைத்த பண்டிதர், நாகேந்திரம் சுபாதர்சன் அவர்களின் மறைவு வேறு மதங்களில் நடந்திருந்தால் அல்லது வெளிநாடுகளில் இடம்பெற்றிருந்தால் தன் சமயத்திற்காக உயிர்த்தியாகம் செய்த உத்தமர் என்று போற்றப்பட்டிருப்பார். மதத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் அவருக்கு அஞ்சலி செலுத்தி உரிய கௌரவம் கொடுத்திருப்பர்.

என்ன செய்வது இது தலைமையில்லாத சமயம். அரசியல் தலைவர்கள் இல்லாத சமயம். அப்ப நாங்கள் அநாதைகள் தானே. இல்லையெண்டால் சைவ சமயத்தவர்களின்ர காணிகளைப் பிடிப்பதிலும் வரலாற்றுப் பெருமை மிக்க சிவாலயங்களை சிதைப்பதிலும் விடா முயற்சி நடக்குமோ? ஏதோ அழிவு காலம் தொட்டுவிட்டது. இதன் அறிகுறியை உலகம் முழுக்க உணர முடிகிறது. பண்டிதர் இவ்வாறு கூறி அமர்ந்ததும் மூப்பர் குரல் கொடுத்தார்.

**மூப்பர்:** பண்டிதர் சொல்லுறது நூறுவீதம் உண்மை. பிரான்ஸிலுள்ள வரலாற்றுப் பெருமை மிக்க தேவாலயம் எரிந்தது தொடர்பில் என்னைப் பொறுத்தவரையில் இந்த உலகத்திற்கு ஏதோ ஆபத்து ஏற்படப் போகிறது என்பதுதான் உண்மை.

இறைவனை வழிபடாமல், இறைகொள்கைக்கு அமைவாக நடக்காமல், மதவாதமும் இனவாதமும் பேசி மனித உயிர்களைக் காவு கொள்கிறதுதானே இப்ப நடக்குது.

(உணர்வுபூர்வமாக மூப்பர் கூறியதும் ஆலடி மாநாடு சில நிமிடங்கள் நிசப்தமாகியது. அந்த நிசப்தத்தை விதானையார் விசுவலிங்கம் கலைத்தார்)

**விதானையார்:** மண்டைதீவில கடற்படைக்குக் காணி சுவீகரிக்கிறதை தடுக்கிற போராட்டம் அண்மையில நடந்ததல்லோ. அந்தப் போராட்டத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா போகவில்லையாம்.

**கங்காணி:** வழமையில அவர் தீவுப் பகுதிக்குப் போறதில்லைத்தானே.

பொதுவில் தமிழரசுக் கட்சியின்ர பாராளுமன்ற உறுப்பினர்கள் தீவுப் பகுதிகளைத் திட்டமிட்டு ஓரங்கட்டி வருகின்றனர். இதனால அந்தப் பகுதி கவனிப்பாரற்றுக் கிடக்குது. அங்க இருக்கிற மக்களுக்கும் எந்த உதவித் திட்டமும் போய்ச் சேருதில்லை.

**சாத்திரியார்:** தீவுப் பகுதிகளை வளப்படுத்திறதா இருந்தால், அங்க குழந்தைகள் வைத்திய நிலையத்தை அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர ஒரு துறையை அல்லது தொழில்நுட்பக் கல்லூரியை கொண்டு போக வேணும்.

ஆனால் எதையும் தீவுப் பகுதியில அமைக்கிறதுக்குத் தமிழ் அரசியல்வாதிகள் தயாராக இல்லை. வலி.வடக்கு எண்டால் மட்டும்தான் மாவையர் குரல் கொடுப்பார். தீவுப் பகுதி எண்டால் அழிஞ்சு போகட்டும் என்பதுபோல நடப்பார்.

**சிறாப்பர்:** பாராளுமன்ற உறுப்பினர்களை விட்டுட்டு தீவகத்தில இருக்கிற பிரதேச சபைகள் தங்களாலான சேவைகளை முன்னெடுக்கலாம் தானே.

**கங்காணி:** சிறாப்பர் கனடாவில இருந்துவிட்டு வந்ததால இங்க நடக்கிற காரியங்கள் அவருக்குத் தெரியாது. வேலணை பிரதேச சபைக்குட்பட்ட சாட்டி கடற்கரையை ஒருக்கால் போய்ப்பாருங்கள். எந்த வசதியும் கிடையாது. கடலில நீராடிப்போட்டு நன்னீரில குளிக்கவும் ஆடை மாற்றவுமென கப்பல் போல கட்டிடமிருக்கு. ஆனால் அந்த இடம் கிடக்கிற கேவலத்தைப் பார்த்தால் இந்த யுகத்தில எங்கட இடங்கள் முன்னேறாதென்று அடிச்சுக் கூறலாம்.

**விதானையார்:** சாட்டிக் கடற்கரையில இருக்கிற ஹோட்டலிலதான் குளிக்கவேணும். அதற்கு சிறுவர்கள்கூட ஐம்பது ரூபா கட்டணத்தைச் செலுத்தவேணும். அது மட்டுமல்ல அந்தக் ஹோட்டலில நிற்கிற பணியாளர்கள் சிலரின்ர சண்டித்தனம் எண்டால் சொல்லிமாளாது.

**பண்டிதர்:** இப்ப சாட்டிக் கடற்கரைக்குப் போற சனங்கள் குறைவுதானே. அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்காவிட்டால் சனங்கள் அங்க போகமாட்டினம் தானே.

**சாத்திரியார்:** எங்கட தமிழ்ப் பகுதிகளை நிமிர்த்திறது என்பது கடினமான வேலை பாருங்கோ. அண்மையில இயக்கச்சிப் பகுதியில நாய்கள் காப்பகம் திறந்து வைக்கப்பட்டதல்லோ. கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில இயங்கும் சிவபூமியின் ஏற்பாட்டில திறந்து வைக்கப்பட்ட நாய்கள் காப்பகத் திறப்பு விழாவிற்கு கால்நடை வைத்தியர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதாம். இருந்தும் கால்நடை வைத்தியர்கள் எவரும் அந்தத் திறப்பு விழாவிற்குப் போகவில்லை என்று பலரும் குறைபட்டுக் கொண்டவியள்.

**வாத்தியார்:** ஐயோ கடவுளே! கால்நடை வைத்தியசாலைகளுக்கு நேரமே இல்லை. யானைக்குச் சிகிச்சை, குதிரைக்கு ஊசி போடுதல் என்று ஏகப்பட்ட வேலை.

(வாத்தியார் இப்படிக் கூறியதும் ஆலடியில் சிரிப்பொலி எழுந்தது)


**விதானையார்:** தென் பகுதியில இருக்கிற கால்நடை வைத்தியர்கள் யானைக்கு, குதிரைக்கு, வன விலங்குகளுக்கு சிகிச்சை அளிப்பதில் எவ்வளவோ நேரத்தைச் செலவிடுகினம். அவர்களோட ஒப்பிடக்க எங்கட இடங்களில பணியாற்றுகிற கால்நடை வைத்தியர்களுக்கு எவ்வளவோ வேலைப்பளு குறைவு எண்டுதான் கூற வேணும். அப்படியிருந்தும் நாய்கள் காப்பகத் திறப்பு விழாவிற்கு கால்நடை வைத்தியர்கள் எவரும் போகவில்லை என்பது வேதனைக்குரிய விடயம் தான்.

**சாத்திரியார்:** தனி மனித மற்றும் பொது அமைப்புக்கள் முன்னெடுக்கிற நல்ல பணிகளுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்க வேணும். அப்பத்தான் அந்தப் பணியைச் செய்பவர்களும் மனச் சந்தோசமாக இருப்பினம். இவ்வாறு சாத்திரியார் கூற அதனை அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தைத் தடுக்க மன்றாடிய பாப்பரசர்



உலகம் முழுமையிலும் மனித அழிவுகள் நடந்தவண்ணமுள்ளன. யுத்தம் ஒருபுறம், இரசாயனத் தாக்கங்களின் காரணமாக ஏற்படும் புதுப்புது வியாதிகளின் மரணப் பட்டியல் இன்னொரு வகையென மனித உயிர்கள் காவு கொள்ளப் படுகின்றன.

இதில் நாடுகளுக்கு இடையே நடைபெறும் யுத்தங்களும் உள் நாட்டுப் போர்களும் அப்பாவி மனித உயிர்களை தினம் தினம் கொன்று குவிக்கின்றன.

அதிலும் குறிப்பாக வறிய நாடுகளில் வாழுகின்ற வறிய மக்களை யுத்தம் கொன்றொழிப்பது மட்டுமன்றி பசியும் நோயும் அவர்களை வாட்டி வதைக்கிறது.

எனினும் வல்லாதிக்கம் மிக்க நாடுகள் மனித அவலம் பற்றிச் சிந்திப்பதாக இல்லை.

இதுதான் என்றால் ஒரு நாட்டிற்குள் இனம், மதம், மொழி, நிறம் என்ற வேறுபாடுகளினூடு முட்டி மோதி மனிதக் குருதியைக் குடிக்கின்ற கொடூரங்கள் கொஞ்சமல்ல.

இந்தக் கொடூரச் செயலுக்கு இலங்கையும் விதிவிலக்கன்று. தமிழினம் என்பதற்காக அந்த இனம்சார் மக்களை இன்று வரை சிங்களப் பேரினவாதம் வதைக்கின்றது.

உரிமைகளை வழங்க மறுப்பது, தமிழ்மக்களின் நிலங்களை அபகரிப்பது, தமிழர்கள் என்பதற்காக அவர்களை சிறைகளில் அடைத்து வைத்திருப்பது என்ற நெட்டூரம் இன்னமும் தீர்ந்தபாடில்லை.

இதற்கு மேலாக பாதிக்கப்பட்ட இனத்தின் அரசியல் பங்காளர்களை விலைகொடுத்து வாங்கி அவர்கள் மூலம் தமிழினத்திற்கு இழைக்கப்படுகின்ற அநீதி சொல்லிமாளா.

இவ்வாறாக மனிதனை மனிதன் கொல்லுகின்ற நடவடிக்கைகள் எங்கும் நடந்தாகின்றன.

இத்தகைய வன்கொடுமையை ஜீரணிக்கமுடியாத நிலையில் புனித பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள் தென்சூடான் ஜனாதிபதி உள்ளிட்ட அரச தலைவர்களின் கால்களில் விழுந்து வணங்கி யுத்தம் வேண்டாம், மனிதக் கொலை வேண்டாம் என இறைஞ்சினார்.

உலகத்தில் சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என மனிதப் படுகொலைகள் நடப்பதை ஜீரணிக்க முடியாமலே பாப்பரசர் அவர்கள் அரச தலைவர்களின் கால்களில் விழுந்து யுத்தம் வேண்டாம் என மன்றாடினார்.

புனித பாப்பரசரின் திருவடிகளில் உலக [illegible] வீழ்ந்து வணங்குவதுதான் வழமையும் வழிபாட்டு முறைமையுமாக இருக்க, இங்கு பாப்பரசர் தென் சூடான் நாட்டின் ஜனாதிபதியின் காலில் வீழ்ந்து யுத்தம் வேண்டாம் என்று கேட்டாரெனில் புனித பாப்பரசரின் தூய எண்ணம் எத்துணை உயர்வானது என்பதை உலகம் புரிந்து கொள்ளவேண்டும்.

இதுமட்டுமல்ல, உலகம் வணங்கக்கூடிய புனித பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள் காலில் வீழ்ந்து யுத்தம் வேண்டாம் என மன்றாடினார் என்றால், யுத்தம் நடத்துகின்ற அத்தனை நாட்டுத் தலைவர்களும் மற்றும் யுத்தத்திற்கு தீமூட்டுகின்றவர்களும் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

எங்கும் போர், எங்கும் உயிரிழப்பு, எங்கும் மனித அவலம். மனிதனைக் கொல்ல மனிதனே



மிகப்பெரும் போராயுதம் தயாரிப்பதில் தன் அறிவு முழுவதையும் செலவிடுகின்ற அக்கிரமம் நடைபெறும் போது புனித பாப்பரசர் தன்னால் இயன்றளவில் யுத்தத்தைத் தடுக்க- யுத்தத்தை நிறுத்த எடுத்த அதியுச்சமான சமாதான ஆயுதம் தான் தென்சூடான் ஜனாதிபதியின் காலில் வீழ்ந்து வணங்கியமை ஆகும்.

அமைதியையும் சமாதானத்தையும் இந்த உலகில் ஏற்படுத்த; ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் கொடு என்ற இயேசுபிரானின் பாதையில் புனித பாப்பரசர் செயற்பட்டமை மதத் தலைவர்கள் எவ்வாறாக இருக்க வேண்டும் என்பதற்கான எடுத்துக்காட்டாகும்.

புனித பாப்பரசர் யுத்தத்தை நிறுத்தக் கையாண்ட கருணையை நினைத்தபோது எங்கள் நாட்டில் இருக்கக்கூடிய பெரும்பான்மை இனத்தின் பௌத்த மதத் தலைவர்கள் பற்றி நினைத்தேன். வேதனை உச்சமடைந்தது.

தமிழினத்தை அழிக்காதே என்று ஒரு பௌத்த பீடாதிபதி கூறியிருந்தால், இலங்கை மண்ணில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் உயிரோடு இருந்திருப்பர்.

இன்று அநாதைகளாக நிற்கின்ற தமிழ்க் குழந்தைகள் தங்கள் தாய், தந்தையோடு ஆனந்தமாக வாழ்ந்திருப்பர்.

என்ன செய்வது, எங்கள் நாட்டில் தமிழினக் கொலையைத் தடுக்க ஒரு பௌத்த தேரரை இறைவன் படைக்க மறந்தான் போலும்.

ஓ! உலகமே! புனித பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள் அமைதிக்கும் சமாதானத்திற்குமாக உலகத் தலைவர்களை மன்றாடினார். அந்த மன்றாட்டத்திற்கு மதிப்பளியுங்கள், யுத்தத்தை நிறுத்துங்கள், விலை மதிப்பற்ற மனித உயிர்களைப் பாதுகாத்துக் கொடுங்கள்.

ஒரு மனிதன் உனக்கு எதிராக இருக்கலாம். ஆனால் அவனின் அன்பில், அரவணைப்பில், பாசத்தில் வாழுகின்ற உயிர்களும் உண்டு என்பதை மறந்து விடாதீர்கள்.

இந்த நினைப்புகள்தான் மனிதனை மனிதன் மன்னிக்கும் பக்குவத்தைத் தரும். புனித பாப்பரசர் பிரான்சிஸின் கருணைக்கு மதிப்பளிக்கத் தவறினால், இந்த உலகம் தீயிற்கு இரையாகும் என்பதை உணர்த்தவே பிரான்ஸின் பழைமைமிகு தேவாலயம் தீப்பிழம்பாகியதோ என்று எண்ணுவதும் பொருத்துடையதே.


**திருநீலகண்டன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநீறு அணிவது எதற்காக?

சிவ சின்னங்களில் முதன்மையானது திருநீறு. முன்னோர்கள் காலை விழித்தவுடன் வீட்டு வாசலில் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும் தேங்காய்ச் சிரட்டை, சங்கு, பனை ஓலையால் செய்யப்பட்ட மல்வம் போன்றவற்றில் இருக்கும் திருநீற்றை சிவசிவ என்று நெற்றியில் இட்டு காரியங்களைத் தொடங்குவார்கள். திருநீறு அணியும் போது கிழக்கு அல்லது வடக்கு முகமாக ஆகாயத்தைப் பார்த்து நிலத்தில் சிந்தி விடாமல் கையிலெடுத்து சமய தீட்சை பெற்றவர்கள் திரிபுண்டரமாகவும் மற்றையோர் விரும்பியவாறும் அணியலாம்.

குபேரன் தான் தான் பெரிய கோடீஸ்வரன் செல்வங்களிற்கு அதிபதி என்று அகங்காரம் கொண்டிருந்தான். அவனது கர்வத்தை அடக்க நினைத்த பார்வதிதேவி குபேரா நீதான் பெரிய செல்வந்தன் ஆயிற்றே. இந்த



சிமிழுக்கு ஏற்ற தங்கத்தைக்கொடு என்று கேட்க குபேரன் அதை தராசில் வைத்து அதன் எடைக்கு ஏற்றவாறு தங்கத்தை வைத்தான். எவ்வளவு தங்கத்தை வைத்தாலும் சிமிழ் இருந்த தட்டு மேலே போகவில்லை. கீழேயே நின்றது. ஆச்சரியப்பட்ட குபேரன் சிமிழை திறந்து பார்த்தான். அதில் ஒரு சிட்டிகை விபூதி இருந்தது. அப்படியானால் நம்முடைய இவ்வளவு செல்வமும் ஒரு சிட்டிகை விபூதிக்கு ஈடில்லை என உணர்ந்தான்.

பசுவின் சாணத்தை காயவைத்து தீயிலிட்டு எடுத்து பசும்பாலில் கழுவி காயவைத்து எடுக்கும் சாம்பலே திருநீறாகும். இது கிருமிநாசினியாகச் செயற்பட்டு உடல் நோயைத் தீர்க்கின்றது. உடலுக்கு ஒரு தெய்வீக அழகைக் கொடுக்கின்றது. ஆதலால் அப்பர் சுவாமிகள் "சுந்தரமாவது நீறு" என திருநீற்று பதிகத்தில் பாடியுள்ளார்.மழை, பனி காலத்தில் குழந்தைகளுக்கு திருநீற்றை நீரில் குழைத்து நெற்றி, மார்புப் பகுதியில் பூசிவிடுவர். இது பிள்ளைகளின் நீர் கோர்ப்பு என்று கூறும் தும்மல், தடிமல் இல்லாமல் போகும்.

இறைவன் கொடுத்திருக்கின்ற இந்த மானிட உடலானது திருநீற்றை போல சாம்பலாகும். அதை மறந்து விடாமல் தூய்மையாக அறநெறியில் இறைசிந்தனையோடு வாழ வேண்டுமென்று உணர்த்தும் விதமாக திருநீறு அமைகிறது. பக்தி உணர்வை தருகிறது. நீறில்லா நெற்றிபாழ். கோவில்களில் அபிஷேகம் முடிந்தபின் இறைவன் மேல் திருநீற்றை சொரிவார்கள். அந்த விபூதி மிகவும் வலிமை வாய்ந்த நோய் தீர்க்கும் காரணியாகத் திகழும். திருநீறு இட்டு நாமும் பயனடைவோம்.

**சிவனடியான்**




## முட்டாள்களுக்கு வீண் உபதேசம்



எருமைப்பட்டியில் சலவைத் தொழிலாளி ஒருவர் இருந்தார். அவரிடம் இரண்டு கழுதைகள் இருந்தன. அவை இரண்டும் ஒரு நாள் மிகவும் வருத்தத்துடன் பேசிக் கொண்டன.

"நாம் சுமந்து வரும் அழுக்குத் துணிகள் மட்டும் சலவை செய்ததும் அழுக்கெல்லாம் போய் வெண்மையாகத் தெரிகின்றதே! ஆனால், நாம் மட்டும் ஏன் அந்த துணிகளைப் போன்று வெண்மையாக மாற முடியவில்லை?" என்று தங்களுக்குள் கேட்டுக் கொண்டன.

அந்தப் பக்கமாக வந்த ஆடு கழுதைகளின் பேச்சை ஒட்டுக் கேட்டுவிட்டது.

கழுதைகளின் முட்டாள்தனமான பேச்சை கேட்டு அந்த ஆட்டிற்கு சிரிப்பே வந்துவிட்டது.

"கழுதைகளே! நலம்தானா? நீங்கள் இருவரும் உங்களுக்குள் ஏதோ ரகசியம் பேசுவதுபோல் தெரிகின்றதே..." என்று அவர்கள் வாயைக் கிளறியது.

"ஆடே! ஆடே நலம்தானே? எங்கள் சந்தேகத்தை தீர்க்க யாரும் வரவில்லையே என்று நினைத்தோம். நல்ல வேளை நீ வந்திருக்கிறாய்!" என்றவாறு கழுதைகள் இரண்டும் ஆட்டை நோக்கின.

"கழுதைகளே! நீங்கள் பேசிக் கொண்டிருந்ததை நானும் அறிவேன். உங்கள் சந்தேகம் என்னவென்று எனக்குப் புரிந்துவிட்டது. முட்டாள்தனமான உங்கள் சந்தேகத்தை எப்படிப் போக்குவதென்று எனக்குத் தெரியவில்லை..." என்று கூறியது ஆடு.

இதைக் கேட்ட கழுதைகளுக்கு கோபம் வந்துவிட்டது. "ஆடே எங்களைப் பார்த்து முட்டாள்கள் என்று கூறுகிறாயா? எங்கள் சந்தேகத்திற்கு உன்னால் விடை கூற முடிந்தால் கூறு... இல்லையேல் இந்த இடத்தை விட்டு ஓடு... அதை விட்டு விட்டு முட்டாள்தனமான சந்தேகம் எனக் கூறி எங்களை இன்சல்ட் பண்ணாதே" என்று கோபமாகக் கூறின.

"கழுதைகளே! நீங்கள் என்மீது ஏன் இப்படிக் கோபப்படுகிறீர்கள்? துணிகளும் நீங்களும் ஒன்றா? அப்படியிருக்க முட்டாள்தனமான உங்கள் கேள்விக்கு என்னால் எப்படி பதில் கூற முடியும்? அப்படியே நான் பதில் கூறினால் நானும் உங்களோடு சேர்ந்து முட்டாளாகி விடுவேன்" என்று கூறியது.

கழுதைகள் இரண்டும் பொறுமை இழந்தன. தங்களின் ஆத்திரத்தை எல்லாம் ஒன்றுதிரட்டி தங்கள் கால்களால் ஆட்டை எட்டி உதைத்தன.

கழுதைகள் இரண்டும் உதைத்த வேகத்தில் ஆடு எங்கோ சென்று விழுந்தது.

வலி தாங்காமல் நொண்டி நொண்டி நடந்து சென்றது.

தேள் கொட்டி விட்டால் முதலில் என்ன செய்ய வேண்டும்?

ஸ்கூலுக்கு லீவு போட வேண்டும்.



8 ஐயும் 8 ஐயும் கூட்டினால் 9வரும் எப்படி?

தப்பா கூட்டினால் வரும்.



**சிவகுகன் பிருத்வி,**
**4 பி,**
**யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.**

## விடுகதைகளும் விடைகளும்

- இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல. – அது என்ன?

**சைக்கிள்**

- இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது- அது என்ன?

**பட்டாசு**

- உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம்- அது என்ன?

**தராசு**


- ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஆரவாரம் இராது- அவர்கள் யார்?

**எறும்புக் கூட்டம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தமிழ் மக்களுக்கான தீர்வை இலங்கை அரசு தருமா?

இனப்படுகொலை நடக்கவில்லை என்கின்றார்களே?

போரை எதிர்கொள்ள அரசு தயாராமே? எந்த நாட்டுடன்?

**சயன் — யாழ்ப்பாணம்**

**ஜனாதிபதியை பதவி இறக்கத் துடித்தவர்கள் ஜனாதிபதியுடன் கைகோர்த்து விட்டார்கள் போலும்?**

அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா. சும்மா இதுகளைப் பார்த்து ரென்சனாகி கடுப்பேறி ஏதும் கதைக்காமல் மூச்சுப் பயிற்சி, மன ஒருமைப்பாட்டுப் பயிற்சி ஏதும் கற்று அதைச் செய்து மனதை ஒருநிலைப்படுத்தவும் பிளீஸ்.

**சஜீ — வல்வெட்டி**

**வியாசரே வல்வை இந்திரவிழா பார்த்தீர்களா?**

இந்திரலோகம் போன்று காட்சி தந்தது. உண்மையில் கலைகளின் ஊற்று என்றால் அது வல்வெட்டித்துறைதான் என்று கூறுவதில் எந்தத் தயக்கமும் இருந்து விட முடியாது. அற்புதமான படைப்புக்கள். இந்திரலோகம் எப்படி இருக்கும் என்பதைக் காண வேண்டும் எனின் வல்வை இந்திரவிழாவிற்கு சென்றாலே போதும். அருமை அருமை.

**கோகிலன் — வரணி**

**பாலியல் இலஞ்சம் கேட்கும் அதிகாரிகளுக்கு சவுதி சட்டம் கொண்டு வந்தால்?**

சவுதியில் களவில் ஈடுபடுபவர்களுக்கு கையை வெட்டுவார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**தர்ணிகா — கவுந்தில்**

**கூட்டமைப்பு வேறு வழியில்லாமல் விழி பிதுங்கி நிற்கிறதோ?**

போர்க்குற்றம் என்ற ஒன்று நடக்கவேயில்லை என்று அரசு கூறிய போது அதற்கு ஆதரவு கொடுத்தது ஏன். வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இலங்கையில் இடமில்லை என்று ஜெனிவாவில் கூறிய பிறகும் வரவு-செலவு திட்டத்திற்கு கை தூக்கியது ஏன்? ஜனாதிபதியின் கூட்டத்தில் முரண்பட்டுக் கொண்டு ரணிலுடன் ஒட்டி உறவாடுவது ஏன்?

ஜெனிவாவில் இவர்களுக்கு இரண்டு வருட அவகாசம் கொடுத்து விட்டு சர்வதேச சமூகமே தமிழருக்கான தீர்வை வழங்க வேண்டும் என்று அறிக்கை விடுவது ஏன்? இந்தக் கேள்விகளுக்கு விடை சொல்ல முடியாவிட்டால் விழி பிதுங்குவதை விட வேறு என்ன செய்ய முடியும்.

**சித்திரா — வட்டுக்கோட்டை**

**போரை எதிர்கொள்ள அரசு தயாராமே? எந்த நாட்டுடன்?**

அது இந்தியா-பாகிஸ்தான் செய்தியாக இருக்கும். ஆதலால் இதை இத்துடன் முடித்து வைப்போமே பிளீஸ்.

**ஜீபா — கரவெட்டி**

**தமிழ் மக்களுக்கான தீர்வை இலங்கை அரசு தருமா?**

அப்படி யாராவது நினைத்தால் அவரைப் போல முட்டாள் வேறு யாரும் இல்லை என்பதே பொருள். காலம் காலமாக வந்த ஆட்சியாளர்கள் எங்களை நம்பவைத்து கழுத்தறுத்தார்களே தவிர எமக்கான தீர்வைத் தரவில்லை. ஏன் இப்போது கூட இந்த நல்லாட்சி அரசில் அதீத நம்பிக்கை கொண்டு அதைக் கட்டித் தழுவிக் கொண்டு இருக்கிறது எமது தமிழ்த் தலைமை. என்ன கொடுமையோ டிசைனோ!

**சுதன் — குப்பிளான்**

**இனப்படுகொலை நடக்கவில்லை என்கின்றார்களே?**

நடக்கவில்லை என்றால் வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதியோம் என்றும் படையினரைக் காட்டித் தரமாட்டோம் என்றும் மகிந்தவை மின்சாரக் கதிரையில் இருந்து காப்பாற்றி விட்டோம் என்றும் ஏன் கூற வேண்டும்.

என்னவோ ஒரு இனம் படும்பாட்டைப் புரிந்து கொள்ளாமல் இன்னொரு இனத்தை திருப்திப்படுத்த நினைப்பதுதான் இந்த நாட்டிற்கான சாபக்கேடு.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**தமிழன் — யாழ்ப்பாணம்**

**தமிழ் மக்களின் தற்போதைய தேவை என்ன?**

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு தீர்வு வேண்டும். காலம் காலமாக ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்ட தமிழருக்கு வழங்க வேண்டிய உரிமைகளை வழங்க வேண்டும்.

போர்க்குற்றம் இழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்க வேண்டும்.இதைவிட தமிழ் மக்கள் வேறு எதையும் விரும்பவில்லை.

**நேதாஜி — வதிரி**

**இருக்க வேண்டியவர்கள் இப்போது இருந்திருந்தால் எம் அரசியல்வாதிகள் நிலை என்னவாக இருந்திருக்கும்?**

இவர்களுக்கு உடம்பில் எங்கேயோ ஒரு மச்சம் இருக்கின்றது போல. எம்.ஜி. ஆர் இல்லாத நம்பியார்கள் போல இப்படி குளிர் விட்டுத் திரிகிறார்களே.

தமிழர்களை எப்படியும் ஏமாற்றிப் பார்க்கலாம் என்று முடிவெடுத்து விட்டார்கள். இனி தமிழர்களுக்காக குரல் கொடுக்க யாரும் இல்லை.

இவர்கள் இராச்சியம் தான். நன்றாக ஆட்டம் போடட்டும். கடவுள் ஒருவன் இருக்கின்றான். இறப்பின் பின் இவர்களுக்கு நரகம் நிச்சயம்.

**குமார் — யாழ்ப்பாணம்**

**போர்க்குற்றம் தொடர்பில் தமிழ் தலைமைகளிடையே கலப்பு முறை – சர்வதேச பொறிமுறை இரண்டிற்கும் இடையில் முரண்பாடு இருக்கிறதே?**

போர்க்குற்ற விசாரணை முடிந்து விட்டது என்றார்கள். இப்போது சர்வதேச விசாரணை தேவை என்கிறார்கள். இடையில் என்ன டிசைனோ தெரியவில்லை.

**ஏஞ்சல் — மல்லாவி**

**காதல் என்றால் என்ன? இது பலபேருக்கு புரிகிறது இல்லை. கொஞ்சம் சொல்லுங்கள் வியாசரே?**

காதல் என்பது குளிர்சாதனப் பெட்டியில் இருக்கின்ற மீன் போல. இரண்டு பேர் மனதில் இருக்கும் போது நாறாமல் நன்றாக இருக்கும். நாலுபேருக்குத் தெரிந்துவிட்டால் நாறி ஊரே மூக்கைப் பொத்தும் அளவில் வந்து நிற்கும்.

**பையன் — இணுவில்**

**படிக்க ஆசை. ஆனாலும் அலுப்பாக இருக்கு என்ன செய்ய?**

படுபாவி அப்படியே என்னப் போலவே இருக்கிறாய்... நாற்பது வருடங்களுக்கு முன் எனக்கு உதயமாகிய அதே கேள்வி உனக்கும். உன்னை ஒருமுறையாவது பார்த்து கட்டித் தழுவ வேண்டும். வலம்புரிக்கு வாவன்.

**திகழன் — யாக்கரு**

**கோத்தபாய ராஜபக்ஷ....!**

ஜனாதிபதி தேர்தலில் மொட்டுச் சின்னத்தில் களமிறங்குகின்றார் என்ற செய்திகள் குலை நடுக்கத்தை ஏற்படுத்திவிட்டது. இவருக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகள் இன்னும் நடுக்கத்தைக் கூட்டி இருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கனவிலாவது

கருவறையில் சுமந்த பிள்ளை கல்லறையிலும் இல்லை
காணாமல் போனதால் காணாமல் அழுகின்றாள்
கண்மூடி அழுகின்றாள் கனவிலாவது வருவானென்று

## வீரத்தாய்

புகைப்படத்திலிருப்பவன் புதைக்கப்பட்ட சேதியறியாது
காணாமல் போனானென விம்மி அழுகிறாள்
கல்லறையாவது காட்டுங்களே வீரவணக்கம் செலுத்தட்டும்

**இணுவில், வாகீசன்**


## எழுந்திடு தமிழா

தாய்மொழி தமிழை தமிழன் மறக்கிறான்
மரபை எல்லாம் மறந்து போனான்
மண் புழுதி அடங்கிப்போக
தூரமாய் நின்று புலம்பித் திரிகிறான்

தமிழா நீயும் எழுந்து வாடா
ஒன்றாய் கூடி தோள் கொடுடா
மரபை எல்லாம் தட்டி எடுப்போம்
எதிரிகள் வந்தால் விரட்டி அடிப்போம்

ஏழு வீரர்கள் தேர்வு செய்து
ஆடுகளத்தில் நடுவர் சொற்படி கேட்டு
நாற்பது நிமிடத்தில் வெற்றி காண்போம்
வாடா வாடா எழுந்து வாடா
சடு குடு சடு குடு என்று தாளம் போடு
மண்ணைத் தொட்டு வணக்கம் போடு
கையைத் தூக்கி துடையத் தட்டு
கபடி கபடி என்று சத்தம் போடு
நெஞ்சை நிமிர்த்தி வீரத்தை பறைசாற்று

**எஸ்.ஏ.கோகுலன்**
**கோப்பாய்**



## வீதி இருப்பு?

தேடி எடுத்த சொற்கள் சேர்த்து
வாடி கறுத்த எம்மவர் முகம் பார்த்து
நாடி வருகின்றேன் கவி வரிகள் கோர்த்து
சாடி செல்லும் எம் கேள்வி பதில் வார்த்தது
ஊர்வலங்களாய் பல தேர்வலம்– அதில் எம்
பேதைகளின் அதிக கண்ணீர் களம்–அன்னையர்
மாப்புகளங்களாய் கதறிய வீழ்வும்– செய்திக்கு
மட்டுமாய் ஆனது எம் வாழ்வும்
முப்பது ஓர் போர்.ஓய்ந்தும்– அவர்கள்
வைப்பதுவோ சட்டம் நிற்பது– அவர்களால்
கைப்பதுவோ எம் வாழ்வும்– சதிகள்
தைப்பதுவோ எம் உரிமை இழப்பது
ஐ.நா. சபை எனும் உயர்மேடை அதுவும்
அரசியல் எனும் சதியின் ஜாடை
கை எழுத்தறியா எம் மக்களின் வாழ்வை
கலந்தாலோசிப்பது மட்டுமே அவர்களின் வேலை
நீதி ஒன்று நிலையாக– நாமும்
உரிமையுடன் தரணி வாழ
வீதிப்பேரணியுடன் வீற்றிருக்கின்றோம்
வேண்டும் எமக்கொரு வழி அநீதிக்கெதிரான விதி
வேண்டினோம் பல துன்பக்கதி வேண்டும் நீதி எனும் முழு மதி...

**ஞா.கட்டைக்கவிதன்**
**கிளிநொச்சி**




## என்னவனுக்கு

தொலை தூரத்தில் நீ...
உன் நினைவுகளை தொலைக்க
முடியாதவளாய் நான் இங்கு...
உன் அழைப்பிற்காய்
காத்திருக்கிறேன்....
உன் செல்ல குரல்
தொலைபேசியில்
கேட்கையில் தொலைந்து
போகிறது என் மனது...
இறைவனே பூமிக்கு
இறங்கிவந்து என்னோடு
பேசுவது போல் ஓர் ஆனந்தம்...
என்னவனே
எப்படி உன்னால் மட்டும்
இப்படிப் பேசமுடிகிறது...
என் கனாக் காதலனே...
நீ பேசிடும் ஒவ்வொரு
வார்த்தைகளும் தித்திக்கும்
கனியாக என்னிடத்தில்...
என் செல்லிடத் தொலைபேசி
சிணுங்கிடும் நேரமெல்லாம்
கடிகாரத்தை விட அதிகமாக
துடிக்கிறது என் இதயம்...
அழைப்பில் இருப்பது நீயா என்று...

**என். சர்மியா**
**புதுக்குடியிருப்பு**

## அரசியல் நாகரிகமோ அநாகரிகமோ

இது ஒன்றும் புதிய விடயமல்ல
உங்கள் பித்தலாட்டங்களை
இன்று நேற்றல்ல
என்றோ அறிந்தவர் நாம்

என் செய்ய
வெள்ளை வேட்டி கட்டிய
நரிக்கூட்டங்களே
எம் தலைவிதியை நிர்ணயிக்கும்
சக்திகளாய் மாறிவிட்டது

அது வேண்டாம்
இது வேண்டவே வேண்டாம் என
தொண்டை கிழியக் கத்தி
என்ன பயன் கண்டோம்
துரோகி என்ற அடைமொழியை
துரோகிகளே குத்தியதுதான்
வேதனையின் உச்சம்

தந்தை வழி தனையன் என்றார்
அண்ணன் வழி தம்பி என்றார்
இறுதியில்...
தாமுண்டு தம் வங்கிக்கணக்குண்டு
என பம்மித் திரிகிறார்

வெட்டுகிறோம் புடுங்குகிறோம் என
வெட்டவெளியில் பேசியவர்கள்
பின் வரிசை ஆசனத்தில்
போஸ் கொடுக்கிறார்

ஐயகோ!
அரசியல் நாகரிகமோ
அநாகரிகமோ
கடவுளுக்கே வெளிச்சம்.

**மாவை. நா.கஜேந்திரன்**

## மௌனத்தின் தேடல்- 443



## வீர விளையாட்டு

விளையாட்டு மக்கள்
உடலுள நலம் பேணும்
உன்னத பயன்பாட்டுச்
செயற்றிறன் நிகழ்வு
சட்டவிதிகளுக்கமைய
செயற்பட்டால் வெற்றிதரும்
பார் போற்றும் விளையாட்டு
சீர்கெட்டுப் போகாமல்
பார்ப்போர் உள்ளத்தை
பரவசப்படுத்த வேண்டும்
விளையாட்டு வினையாகக்கூடாது

**துரை**
**தென்மட்டுவில்**

## மௌனத்தின் தேடல் -444



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## நம்பிக்கையோடு விளையாடுங்கள்

மைதானத்தில்
உற்சாகமாய் விளையாடும்
கபடியாட்ட வீரர்களே மனதில்
நம்பிக்கையோடு விளையாடினால்
நிச்சயம் நாம் வெற்றி பெறலாம்
அதில் தோற்றாலோ நீங்களொரு
பாடம் கற்கலாம்
வெற்றி தோல்வி விளையாட்டில்
என்றும் சகஜமடா

**சு.ஜெயரூபன்**
**பருத்தித்துறை**

## விண்ணை எட்டலாம்

சுவரிருந்தால் சித்திரத்தை
வரைந்து காட்டலாம்
உடல் வலிவு இருந்தால்தானே
உயர முயற்சி காட்டலாம்
விளையாட்டின் விவேகத்தாலே
விண்ணை எட்டலாம்
திளைத்து மண்ணில் மானுடமே
தேற வாழலாம்

**வை.க.தவமணிதாசன்**
**கொக்குவில்**

## முன்னேறு

முன்னேறு
முன்னேறு
உன்னை வீழ்த்த
ஒரு கூட்டம்
உன் பின்னால்
நிற்கிறது
தடம்மாறாமல்
தரணி போற்றும்
நாயகனாய்
ஏறு ஏறு முன்னேறு
தடைகளை
உடைத்தே
முன்னேறு

**சிவாசா,**
**யாழ்ப்பாணம்**

## கபடியும் பகிடியும்

தக்க சமயத்தில்
பக்கபலத்துடன்
வெற்றிக்கோட்டை
எட்டித் தொடவிடாது
காலைவாரும் செயல்
அரசியலிலும் அடிக்கடி
நடப்பதுண்டு
கபடி விளையாட்டும்
விவேகத்துடன் இணைந்த
வீரத்தை நினைவூட்டும்
தோழமையை வளர்க்கவே
தோன்றியதென்று கூறும்
பகிடிவதையுமின்று
சிலரின் வக்கிரபுத்தியால்
திசைமாறிச் செல்வது
கல்விச் சமூகத்தையும்
கவலையில் ஆழ்த்தும்

**க.நாகராசா**
**நுணாவில்**

## எதிர் நீச்சல்

விளையாட்டின் வேகத்தில்
விழுந்த வாலிபனே
விரைந்தே வெற்றிதேடும்
வீரனே நீ கேள்
வீரம் விலைபோகாது
விவேகம் துணையில்லையானால்
போராடினால் தானிங்கே
பொற்காலம் உருவாகும்
தலைவிதியென்று
சம்பிரதாயங்கள் காட்டும்
கட்டுக்கதைகள்
வெற்றிக்கு தடைபோடும்
வெறும் கூச்சல்கள்
போராடிப் போராடி
எதிர்நீச்சல் போட்டால்
வெற்றி என்றும் உனதேயாகும்

**சி.திவ்வியா**
**யா/ப.மெ.ம.வி.**

## கலங்காதே

வெற்றியைத் தொட
முயலும் தோழா
உன் காலைத்
தட்டிவிட்டது.
யார் தெரியுமா?
உன்னுடனே இருந்து
உன்னுடனே உறங்கி
உன்னுடனே திரிந்து
உன்னுடனே உண்டு
மகிழ்ந்த உன் நண்பன்!
கலங்காதே! மயங்காதே!
காலம் பதில் சொல்லும்
வெற்றியை உன்
கையில் தரும்

**கௌரி, மிருசுவில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநியாய அரசியல்

சிறுகதை



"வாழ்க்கை என்றால் அது ஒரு துணிச்சல் நிறைந்த விடாமுயற்சி" என்றுதான் அர்த்தம். அது ஒருநாள் பொழுதில் வெறுத்துப் போனது போல இருந்தது மாதவனுக்கு. காலையில் தாய் ஆசையாய்ச் செய்த உப்புமாவும் பச்சையாய் கசந்தது. இரவில் புத்தகத்தைத் தூக்கினாலே போட்டி, பொறாமையுடன் வரும் தூக்கம் கடந்த இரவு அடம்பிடித்து அவனையண்டாதிருந்தது. புரண்டு புரண்டு படுத்து படுக்கை விரிப்பு மட்டுமே சுருண்டு போனது. விழித்திருக்கும் பொழுதெல்லாம் தந்தையின் மேடைப் பேச்சே அவனுக்கு நினைவில் வந்ததில் கோபமும் வெறுப்பும் படுக்கையறையைச் சூழ்ந்து கொண்டது. வாடைக்காற்றிலும் உடல்உஷ்ண மேறியது. தந்தையின் சுயநல அரசியலும் போலி வாக்குறுதிகளும் சேர்ந்து வெறுப்பை மென்மேலும் அதிகரித்த தருணங்கள் அதிகமாயின. அதைவிட இப்போதேற்பட்டிருக்கும் உள்ளக் கொதிப்பு வேறானது.

அந்த மனுசன்ர அரசியலுக்கும் அவனுக்கும் எந்தச் சம்பந்தமும் இருந்ததில்லை. நன்றாகப் படித்து நல்லதொரு வேலையிலிருக்கும் முப்பத்திரெண்டு வயதான பொறுப்புள்ள மகனை அவனுக்குக் கொஞ்சமும் பிடிக்காத சாக்கடை அரசியலை வைத்துக்கொண்டு அந்நியப்படுத்திவிட்டார் தந்தை தாமோதரம். அவனை மட்டுமல்ல அவன் நேசிக்கும் பெண் பிள்ளையையும் தனது போலியான தில்லு முல்லு அரசியல் அரியண்டத்துக்காக உதறித் தள்ளியிருக்கிறார்.

இதனை மாதவனால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. "உங்கன்ர பிடிவாதத்திற்கு உடன்படுகின்ற ஆள் நானில்லை... என்று மறுதலித்தால் வீட்டுக்கும் எனக்கும் விரிசல் அகலப்பட்டு அவர்களை நிரந்தரமாகப் பிரியவேண்டி வரலாம். அப்படியானதொரு நிர்ப்பந்தத்திற்கு அவரே என்னை ஆளாக்கி விட்டாரே..." அதை நினைக்க நினைக்க அவனுக்கு ஆத்திரமாக வருகிறது.

பதினெட்டு வயதுவரை அவன் தந்தையை ஆராதித்தான். காலம் செல்லச் செல்லத்தான் அகடவிகடம் புரியத் தொடங்கியது. முழக்கங்கள் எல்லாம் வெறும் வார்த்தை'ஜாலங்கள் என்று. பல்குழல் றொக்கெட்டுக்கள் போல அவர் வாயிலிருந்து வீசிய சொற்கள் அத்தனையும் சரளைக் கற்களே. அவரின் வாய்மொழிச் சித்தாத்தங்கள் மேடைப்பேச்சுடன் முடிந்து போனது. அரசியல் என்பது மக்களின் கொள்கைக்காகவல்ல வெறும் பதவிக் கதிரைக்காகவே பாதுகாக்கப்படுகிறது. இத்தகைய அநியாய அரசியலால் வாழ்வே நேர்மையற்று பாசாங்காகிக் போனதால்தான் அவரால் தனது ஒரு மகனது வாழ்க்கை விடயத்திலும் பிடிவாதம் கலைந்து பெருந்தன்மை காட்ட இயலவில்லை போலும்.

"என்ர கட்சிக்கெதிரா நிண்டு அரசியல் செய்யிறவன்ர மகளா...? இல்லை... இல்லவேயில்லை. கட்சிப் பிரச்சினை இருக்கிற வரைக்கும் அவளைக் கட்டுறதுக்கு கனவு கூடக் காணாதே...!" எனச் சிங்கமாகக் கர்ச்சித்தார் விடாக்கண்டன் தாமோதரம். தனக்குயிர் தந்த தந்தை என்பதையும் மறந்து "இந்த மொக்கு மனுசன்ர மண்டைக்க என்னதான கிடக்குதோ எனக்கெண்டா தெரியேல்லை..." என மனதுக்குள் சினந்து " அப்பா....! உங்கன்ரை அரசியலுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை..." என விளக்கமளிக்க முற்பட்ட மாதவனை இடைமறித்து "அப்படியெண்டா உனக்கும் எனக்கும் அப்பன் பிள்ளையெண்ட எதுவித சம்பந்தமும் இதற்கு மேல் இல்லை. விஜயா...! கொண்டு வாடி ஒரு குடம் தண்ணியை..." என்று கூக்குரலிட்டார் தந்தை. பெற்றவள் பதறிப்போய், "என்ன சொல்றீங்கள்..." என்னதான் நடந்திட்டெண்டு இப்படி மேலயும் கீழயும் குதிக்கிறியள்...? என இடைநியாயம் கேட்ட மனைவியைப் பார்த்து " எருமை மாடு...! என்னட்டையே எதிர்க்கேள்வி கேட்பியா...?" என்றவாறு கோபாவேசம் கொண்டு கையை ஓங்கினார் தாமோதரம். தானே சமையலறைக்குள் நுழைந்து தண்ணீர் குடத்தை எடுத்து வந்து நடுவீட்டில் நின்றவாறு தனது தலையில் ஊற்றிக்கொண்டார். " சரி... இண்டையோட அவனைத் தலை முழுகியாச் செண்டு உன்ரை மோனட்டைச் சொல்லு..." என்றபோது. இடியோசை கேட்ட நாகம் போல மனைவி விஜயா கற்சிலையாகி உதிரம் சொட்ட உறைந்து நின்றார். தவமிருந்து ஈன்றெடுத்த ஒரே பிள்ளையை தந்தையே தலை முழுகுவதை எந்தத் தாயால் பார்த்துச் சகிக்க முடியும்?

ஒரு காலத்தில் தாமோதரம் தற்போது தன் எதிர்க்கட்சியாய்ப் பார்க்கின்ற அதே கட்சியின் மத்திய குழுப் பிரதானியாகச் செயற்பட்டவர். அக்கட்சிக்காக இரவு பகல் பாராதுழைத்தவர். அன்றுகளில் இப்போதுள்ளதைப் போன்று டிஜிற்றலில் கலர் கலராகத் துண்டுப்பிரசுரங்கள் அச்சிட்டுக் காடுமேடெல்லாம் ஓடித்திரிந்தவரல்ல தாமோதரம். தமக்குப் பிடிக்காத அரசாங்கத்திற்கு எதிராக ஊரிலுள்ள மதிற்சுவர்களில் கரிக்கட்டையாலும் பூவரசிலை கயறினாலும் வீரவசனமெழுதி எதிர்த்தரப்புக்களைக் கொதிப்படையச் செய்திருந்தார். தார்ப் பாதைகளில் தாறுமாறாக நையாண்டிச் சித்திரங்கள் கீறி கண்டபடி கிழித்திருந்தார். ஒரு தடவை அரச திணைக்களச் சுவரில் அரசாங்கத்திற்கெதிராக எழுதிக் கொண்டிருந்தபோது எதிர் அரசியல் கட்சியைச்சேர்ந்த தொண்டனொருவன் பொலிஸாரிடம் போட்டுக்கொடுத்ததால் பதினான்கு நாள் சிறை வாசமும் அனுபவித்தவர். ஆனாலும் வேட்டி சட்டை கொடுத்து வாக்காளர்களை விலைக்கு வாங்கும் வேலைத்திட்டத்தில் கட்சியின் மகளிர் அணிச் செயலாளருடன் ஏற்பட்ட முரண்பாட்டைக் காரணம் காட்டி பின்வரிசை உறுப்பினர்கள் ஆர்ப்பரித்ததில் அவரின் மத்திய குழுப் பிரதானிப் பதவி பறிக்கப்பட்டது. அதனால் ஏற்பட்ட அரைமனித மனக்கசப்பு தாமோதரத்தை மாற்றுக் கட்சிக்கு தாவச் செய்தது.

இந்த மாற்றுக்கட்சிதான் அன்று தாமோதரத்தை பொலிஸாரிடம் காட்டிக் கொடுத்த மகோன்னதக் கட்சி. அதிலிருந்து கொண்டுதான் இப்போது கண்டறியாத கொள்கைக் கரகமாடுகிறார் மனுசன். மாதவன் உடலும் உள்ளமும் பற்றியெரிந்தது. "நீங்களெல்லாம் ஒரு தந்தையா...? எனத் திட்டித் தீர்க்கத் தோன்றினாலும் உண்மையிலேயே தந்தை தன்னைக் கொலை செய்ததாகக் கருதினான்.

நாளாந்தம் நடுராத்திரிக்கப்பால் தந்தை வீடு வந்ததற்கான காரணம் கட்சிப் பணியல்ல என்பது தெரிந்து போனது. பரீட்சை எழுதி முடித்த நிம்மதியில் கண்விழித்து கதைப் புத்தகம் பார்த்துக்கொண்டிருந்தபோது தந்தையின் பேச்சு மாதவன் காதுக்கு எட்டியதில் கண்ட உண்மை அது.

"நான் அவளட்டப் போகாம இருக்க மாட்டன். நீ என்னைக் கேள்வி கேட்காதை. யாரும் செய்யாத ஒண்டையா நான் செய்து போட்டனெண்டு இப்பக் கத்துறாய்? வீட்டுக்குள்ளை அடைபட்டுக் கிடக்கிற உனக்கென்னடி தெரியும்? நீ இப்ப அனுபவிக்கிற இந்த வசதி வாய்ப்பெல்லாம் யாராலை என்னெண்டு கிடைச்சுது? வீட்டைப் பராமரிக்கிறது. பிள்ளைகளை வளர்க்கிறதிலை நீ சுதந்திரமாகச் செயற்படுகிறாய் தானே...! அந்தளவோடை உன்ரை அதிகாரப்பரவலாக்கத்தை நிறுத்திக்கொள். என்ரை சுதந்திரத்திலை இதற்கு மேலும் தலையிடாதை சொல்லிப்போட்டன்" தொடர்ந்து " நானென்ன உன்னைக் கைவிட்டுப்போட்டு அவளோடை நிரந்தரமா போய்ட்டேனா...?" எனத் தனது துன்மார்க்க அத்தங்களை அதிகாரத் தொனியில் நியாயப்படுத்திக் கொண்டிருந்தவர் தான் எனது தந்தை. இப்படிப்பட்டவருக்கு தனது மானசீகமான உறவு பற்றியெல்லாம் ஒருகாலமும் புரியப்போவதில்லை என எண்ணிய மாதவன் அதற்கு மேல் அங்கிருக்கப் பிடிக்காமல் தனது அலுவலக விடுதிக்குச் சென்றுவிட்டான்.

அன்றிரவு உண்ணவோ உறங்கவோ பிடிக்காமல் விடுதி விறாந்தை சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தான் மாதவன். தன்னிலை கண்டு தாயாரின் விழியில் பெருக்கெடுத்த கண்ணீர் நினைவில் பசையாக ஒட்டிக் கொண்டது. பத்திரிகை நிறுவன வாகனம் வாயிலை வந்தடைந்தபோது நினைவு மீள்கிறான். மாதவனுடன் விடுதியில் தங்கியிருக்கும் ராம் தான் அது. நாளாந்தப் பத்திரிகையின் பக்க வடிவமைப்பைச் சரிபார்த்துக் கொடுத்துவிட்டு வழமையாக ராம் நள்ளிரவில் தான் விடுதி திரும்புவான். அவன் வரும் போது மாதவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பான். ஆனாலும் அன்றைய வழமை மாற்றத்தை கண்ணுற்ற ராம், "ஹாய் பொஸ்! என்ன இண்டைக்கு இன்னும் நித்திராதேவியட்டைப் போகேல்லைப் போல..." என நகைத்தான். பதிலுக்கு வில்லங்கப்புன்னகையை வரவழைத்துக் கொண்ட மாதவன், ". இல்லை மச்சான் சும்மா யோசிச்சுக்கொண்டிருக்கிறனடா..." நண்பன் " இல்லையா நீ இண்டைக்கு ஒரு மாதிரியாய் இருக்கிறாய் போலப் படுகுது. முகம் வேற வாடிக் கிடக்குது. உடம்புக்கு ஏதேனும் சரியில்லையோ...?" என நட்புரிமையுடன் தூண்டித் துலாவினான். அப்படியெல்லாம் ஒண்டுமில்லையடா..." என மழுப்ப முயன்ற மாதவனைக் குறுக்கிட்டு, " ஓ ஒண்டுமில்லையெண்டா அங்கு நூறு விசயமிருக்கும்" என்ற ராம். "என்ன உன்ரை காதல் விவகாரத்தை வீட்டிலை மறுத்திட்டினம் போல. மாதவன் கண்புருவம் மேலெழ ராமை ஒரு கணம் நோக்கி மறுபக்கம் திரும்பினான்.

கூட்டுக்கொரு பதில் வினாவைத் தொடுத்தான் மாதவன். "எல்லாம் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுலாக்கிறதிலை இனவாத அரசியல்வாதிகள் கக்கிய நாற்றவாந்திகள் தான்" என்றவனை, " ராம்...! அரசியல் அரியண்டங்களை விடு மச்சான். எனக்கும் இண்டைக்கு ஒரு தீவிரவாதியின்ர மனநிலைதான் இருக்குது. அந்தாளை என்னசெய்யிறதெண்டே தெரியேல்லை..." என்று அவனாக வாய்விட்டான் மாதவன். "ஏன் யாரையடதா..? என்பதைப்போல விழியுயர்த்தி வினாக்குறியிட்ட நண்பனிடம் நடந்தவற்றை விலாவாரியாக எடுத்துச் சொன்னான்.

" சொறி மச்சான் உன்ரை பிரச்சினை விநோதமா இருக்கடா. கொள்கை கோட்பாடுகளை குழிதோண்டிப் புதைச்சுப்போட்டு அற்ப சொற்ப பணத்துக்கும் பதவிகளுக்கும் கட்சி தாவுறதிலை பேர் போன எங்கட நாட்டு அரசியல்வாதிகள் காலையில் ஒரு கட்சி, மாலையில் இன்னொரு கட்சியெண்டு அரசியல் செய்யிறாங்கள். அப்பிடியான இந்தக் காலத்திலை போயும் போயும் ஒருபிள்ளையான உன்ர விஷயத்தில இப்பிடிச் செய்யிறாரே உன்ரை அப்பா...! இந்த நவீன உலகத்தில்ல நாங்கள் உயரமான கட்டங்கள் கட்டிக்கொண்டிருக்கிறம். ஆனால் குறுகிய மனங்களை வைத்திருக்கிறம். அகலமான சாலைகள் உள்ளன. ஆனால் குறுகிய நோக்கங்கள்காணப்படுகின்றன. இனம், மதம், மொழி, சாதி எண்டு காதலைப் பிரிக்க ஏராளமான காரணங்களைக் கேள்விப்பட்டிருக்கிறன். ஆனால் கட்சிப் பிரச்சினை ஒரு காதலுக்கு வில்லத்தனம் புரிவது இப்பதான் பார்க்கிறன்..." எனப் பெருமூச்செறிந்த ராம், மாதவனின் தோளை அன்புடன் தட்டி, வாழ்க்கையில் நிறையச் சவால்கள் இருக்கின்றன. அவற்றுக்கு முகம் கொடுக்கவே நீ பிறந்திருக்கிறாய்.

சிறு இடைவெளிக்குப் பிறகு மீண்டும் அவனே, " மாதவன்... நீ ஒரே பிள்ளையெண்ட சென்டிமென்டிலை வீட்டுக்காரர் முறியடிக்கப் பாப்பினம் எண்டு நினைக்கிறன்" என ஆலோசனை சொல்ல முற்பட்ட நண்பனை இடையிட்டு, "அதுக்கெல்லாம் அந்தப் பனங்காட்டு நரி மசியாதுடா. இவ்வளவு காலமா ஒரு பொம்பிளைப் பிள்ளையின்ர மனசிலை கனவுகளை வளத்துப் போட்டு சும்மா கைவிடுகிறவன் மனுசனோ...!" என உறுக்கமான பதிலுரைத்தான் மாதவன். " ஆயிரந்தானெண்டாலும் பெற்றவர்கள் மனங்கோண பிள்ளைகள் வாழ்வு செழிக்காதெண்டு பெரியவர்கள் சொல்வார்கள் மாதவன். ஆனபடியால நாம முடிந்தளவுக்கு முயற்சி செய்து அப்பா அம்மாவின்ரை ஆசீர்வாதத்தோட நீ விரும்பிற பிள்ளையை கைபிடிக்கிறதுக்கான வழிகளைத் தேடுவம். " இல்லையடா ராம், எங்கட அப்பரைப் பற்றி உனக்குத் தெரியாதடா. அதாலை அவர் எங்கடை வழிக்கு வரமாட்டார். " நீ நல்ல தெளிவா இருக்கிறாய். அரசியல்கட்சிப் பிரச்சினையால நீங்களும் இரண்டு மூன்று கட்சியாய்ப் பிரிஞ்சு நிக்கிறியள். அதனாலை கவலைகளையெல்லாம் மூட்டைகட்டி ஒரு பக்கமாக வை மாதவன். ஆண்கட்சி, பெண் கட்சி என்ற எங்கட நட்புக்கட்சிகள் சேர்ந்து உங்களிருவரையும் சேர்த்து வைக்கிறம். இதைவிட வேறெந்த முடிவும் உன்ரை நண்பனிட்டை இல்லையடா. இதோடை உன்ரை அப்பா போன்றவர்கள் சிந்திக்க வேண்டுமென்று நம்புவம். சரி குட்நைட் மச்சான்... திருமணக் கனவுடன் நித்திரைக்குச் செல்கிறான் மாதவன்.

விவேகானந்தனூர் சதீஸ்
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுச் சாதனை படைத்த அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்டம்

உலக அரங்கில் தமிழருக்கும் தமிழுக்குமென்று தனிச்சிறப்பு உண்டு. அதனை சான்றுபகர்க்கும் முகமாக தமிழர் தம் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களையும் பாரம்பரியங்களையும் வளர்த்து தனக்கென தனியொரு இடம் பதித்தது சாதனைப் பெருவிழாவாக அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் நூற்றாண்டு விழா களை கட்டியது. நன்கு திட்டமிடப்பட்டு அனைத்துப் போட்டிகளும் கலைநிகழ்வுகளும் சிறப்புற நடைபெற்றன. அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் 98ஆவது விழா நிறைவு பெற்று சிறிது காலத்தில் நூற்றாண்டு விழாவிற்கான நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. அதன் பெருந்தலைவராக **வைத்திய கலாநிதி மயிலு கணேசரட்னம்** தெரிவு செய்யப்பட்டார்.

காலத்தின் கோலத்தால் அவர் அமரத்துவமடைய குழுவின் கலைத்தலைவராக இருந்த முன்னாள் யாழ்.மாவட்ட அராங்க அதிபர் செல்லையா பத்மநாதன் பெருந்தலைவராகவும் முன்னாள் துணைவேந்தர் கலாநிதி மோகனதாஸ் பொது நிர்வாக நிதிக் குழுத்தலைவராகவும் செயற்பட்டு இவ்விழாவிற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. ப.மோகன்ஜித் தலைமையிலான 99 ஆவது விழா 14.04.2018 நிறைவு பெற்றதும். 15.07.2018 ஞாயிற்றுக்கிழமை அரியாலை மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் **"பட்டம் விடும் போட்டியுடன்"** மிகவும் கோலாகல மாக நூற்றாண்டு விழா ஆரம்பமானது. தொடர்ந்து உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியான பல கலைப் போட்டிகளும், தேசிய, வடமாகாண, யாழ்.மாவட்ட மற்றும் உள்ளூர் ரீதியிலான சகல விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டு கடந்த நான்கு மாதமும் ஊரே ஒன்றுபட்டு பெருவிழா நடைபெற்றது.

குறிப்பாக சித்திரை 1-14 வரை அரியாலை மீது அதீத பற்றுக் கொண்ட உள்ளூர், வெளிநாட்டு புலம்பெயர் உறவுகளின் சங்கமத்துடன் இவ் விழா உலக அரங்கில் தனியிடம் பிடித்திருந்தது.

**சித்திரை 01 நூற்றாண்டுத் தூபி திறப்பு மற்றும் நூற்றாண்டு கீதம் வெளியீடு** விழாத் தலைவர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அரியாலை நீர்நொச்சித் தாழ்வு சித்திவிநாயகர் ஆலய முன்றலில் யாழ். மாநகரசபை ஆணையாளரும் அரியாலையில் வாழ்பவருமான இ.த.ஜெயசீலனால் எழுதப்பட்டு யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் த.றொபேட்டால் இசையமைக்கப்பட்ட நூற்றாண்டு கீதம் வெளியீடு செய்யப்பட்டது. **கலைத் தலைவர் ப.ஸ்ரீஸ்கந்தனால்** நெறிப்படுத்தப்பட்டு **அரியாலை சமூக அபிவிருத்திச் சங்கம் ஐக்கிய இராச்சியத்தின் நிதியுதவியுடன் காசிப்பிள்ளை கணேசனால் அன்பளிப்பாக** வழங்கப்பட்ட காணியில் (மாம்பழம் சந்திக்கு அண்மையில்) சிற்பி மா.முருகேசனால் வடிவமைக்கப்பட்ட நூற்றாண்டுத் தூபி குதிரை பவனியுடன் உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகளின் பங்குபற்றுதலுடன் தலைவர் செ. பத்மநாதனால் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் யாழ்.மாநகர சபை நகரபிதா இ.ஆனல்ட் மற்றும் ஆணையாளர் இ.த.ஜெயசீலன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

**சித்திரை 02 இரவுக்கலை நிகழ்வுகள் அரியாலை அருணோதயா சனசமூக நிலைய அரங்கில்** நூற்றாண்டு விழாத் கலைச் செயலாளர் கு.பிரதீபன் தலைமையில் அரியாலை சமூக அபிவிருத்திச் சங்கம் ஐக்கிய இராச்சியத்தின் செயற்குழு உறுப்பினர் M.P.நாதன் பிரதம விருந்தினராகவும் அரியாலை அருணோதயா சனசமூக நிலைய தலைவரும் ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளருமான பூ.குகதாசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க அரியாலையூர் கலைஞரும் நூற்றாண்டு விழாக் குழு நாடகப் பொறுப்பாளருமான. **த.ஹரிசாந்த்** குழுவின் "யதார்த்தம்" வில்லுப்பாட்டும் "இசையே உயிராம்" வாத்திய இசை நிகழ்வும், யாழ்.முன்னணி இசைக் கலைஞர்களின் "அமுதும் தேனும்" பொப்பிசையும் சிறப்பாக நடைபெற்றது.

**சித்திரை 03 அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக அரங்கில் குறுந் திரைப்பட விழாவும் ஒளிப் படக் கண்காட்சியும்** நூற்றாண்டு விழாத் கலைத் தலைவர் ப.ஸ்ரீஸ்கந்தன் தலைமையில் அரியாலையூரவரும் திரைப்பட இயக்குநரும் பனைமரக் காடுகளை எமக்காகத் தந்த N.கேசவராஜா பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்க போட்டிக்காக கிடைக்கப் பெற்ற 54 குறுந்திரைப்படங்களில் தெரிவு செய்யப்பட்ட 10 படங்களும் கிடைக்கப் பெற்ற நூறுக்கு மேற்பட்ட ஒளிப்படங்களில் தெரிவு செய்யப்பட்ட ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. குறுந்திரைப்படத்திற்கு முதலாம் இடத்திற்கு ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.



**சித்திரை 04 அரியாலை சன சமூக நிலைய மைதானத்தில் வெளிநாட்டு உறவுகளுடனான சிநேகபூர்வமான உதைபந்தாட்ட நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.**

**சித்திரை 05 அரியாலை சனசமூக நிலைய அமரர் காசிப்பிள்ளை அரங்கில் வடமாகாணத்தின் சிறந்த பாடகர் யார் என்பதனைத் தெரிவு செய்யும் அரையிறுதி நிகழ்வு** நூற்றாண்டு விழா செயலாளர் வி.சுதாகரன் தலைமையில் அரியாலையை வதிவிடமாகக் கொண்ட உதவி பதிவாளர் நாயகம் ப.பிரபாகர் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்க **அரியாலை மக்கள் மன்றம் நோர்வேயின்** அனுசரணையுடன் தொடர்ந்து ஏழு வருடங்களாக நடைபெறும் இப் போட்டி இவ் வருடம் நூற்றாண்டு விழா குழுவின் ஊடகப் பொறுப்பாளரான ஜெ.யசிந்தனின் முயற்சியால் நூறுக்கும் அதிகமான போட்டியாளர்களுடன் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக அரங்கில் தெரிவுப் போட்டியுடன் ஆரம்பித்து தெரிவுச் சுற்றுக்கள் அரியாலை சனசமூக நிலையம், நாவடி உதய ஒளி சனசமூக நிலையம், அரியாலை பிரப்பங்குளம் மஹாமாரி அம்மன் திருமண மண்டபம், அரியாலை அருணோதயா சனசமூக நிலையம், அரியாலை திருமகள் சனசமூக நிலையம் என நடைபெற்று 5ஆம் திகதி அரையிறுதிச் சுற்று அரியாலை சனசமூக நிலைய அமரர் காசிப்பிள்ளை அரங்கில் ஈழ நல்லூர் அருணா இசைக்குழுவின் பின்னணி இசையில் நடைபெற்றது. அத்துடன் அரங்க செயற்பாட்டுக் குழுவின் **"நினைவுகளின் ஆற்றுகை"** நாடக அரங்க நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றது.



**சித்திரை 06 காலை கராத்தே போட்டியும் நண்பகல் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில்** நூற்றாண்டு விழா விளையாட்டுத்தலைவர் ந.சுதேஸ்குமார் தலைமையில் ஊர்மீது அதீத பற்றுக் கொண்ட அனுசரணையாளர் ச.பவான் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்க Twenty/20 கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டியும் **இரவு அரியாலை பிரப்பங்குளம் மஹாமாரி அம்மன் திருமண மண்டபத்தில்** நூற்றாண்டு விழா மலர் குழுத் தலைவர் ஓய்வுநிலை அதிபர் அ.உபய சேகரம் தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர். இ.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்க **அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா மலர் வெளியீடும் அரியாலை மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர்கள் வரிசையில் கல்விக்கு கலாநிதி சு.மோகனதாஸ், சமூக சேவைக்கு செ.பத்மநாதன், கலைக்கு ப.ஸ்ரீஸ்கந்தன், விளையாட்டுத் துறைக்கு V.K. சண்முக லிங்கம்** ஆகியோருக்கு கௌரவிப்பும், துறைரீதியாகப் பலருக்கு கௌரவிப்பும் கலைப் போட்டிகளில் பரிசில் பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் கீதவாஹினி இசைக் கல்லூரி செல்வி.ம. கிருஸ்ணவேணியின் மாணவர்களது "வாத்திய விருந்தும்" அரியாலையூர் ம.பிறேமினியின் மாணவர்களின் "கவியராங்கும்" நடைபெற்றது.

**சித்திரை 07 பி.ப 2மணிக்கு நிர்வாக உறுப்பினர் S.C. செல்வராசா தலைமையில் தமிழர்தம் பாரம்பரிய வீர விளையாட்டுக்களில் ஒன்றான மாபெரும் மாட்டு வண்டிச் சவாரி A,B,C,D பிரிவுகளாக** அதிகளவு மக்கள் கூட்டம் அலைமோத பெருமளவு போட்டியாளர்களுடன் அரியாலை வாழ் இளைஞர்களினதும், வெளிநாட்டு அரியாலை உறவுகளின் பூரண ஒத்துழைப்புடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. **இரவு அரியாலை திருமகள் சனசமூக நிலைய கலையரங்கில் நாடக விழா** நூற்றாண்டு விழா குழு உறுப்பினர் க.கனகசபாபதி தலைமையில் அரியாலையூர் நாடகக் கலைஞரும் சைவப்புலவருமான ச.உருத்திரேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், திருமகள் சனசமூக நிலையத் தலைவர் வீ.ஜெகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்க நாடகப் போட்டியில் முதலிடம் பெற்ற ஆரோ ஹணா அரங்கக் கல்லூரியின் "முப்பது நிமிடத்தில் மூச்சு", இரண்டாம் இடம்பெற்ற நீர் வேலி செம்முகம் நாடக மன்றத்தின் "எண்ணித் துணிவோம்" அரியாலை திருமகள் நாடகமன்றத்தின் "சகுந்தலை" யாழ்.நாடக அரங்கக் கல்லூரியின் "தான் விரும்பாத் தியாகி" ஆகிய நாடகங்கள் அரங்கேற நாடக விழா பெருந்திரளான மக்கள் கலந்து கொள்ள மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

**சித்திரை 08 பி.ப 2 மணிக்கு அரியாலை நீர் நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய முன்றலில் ஆரம்பித்த அரியாலை வரலாற்றையும் கலாசாரத்தையும் உலகிற்கு எடுத்தியம்பும் ஊர்தி பவனி** அந்நியர் ஆட்சிக்காலத்தில் சைவமும் தமிழும் நிலைக்கவென தூரநோக்குடன் 1919இல் சுதேசியத்தை உருவாக்கிய ஆறுமுகம் கதிரவேலு ஐயாவின் உருவச்சிலை, அரியால்லை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டுத் தூபியின் மாதிரி, யாழ். மாநகர சபையில் நகர பிதாக்களாக இருந்து யாழ்.நகரைக் கட்டியெழுப்பிய அமரர் ஆறுமுகம் கதிரவேலு. **அமரர் சு.செ. மகாதேவா, அமரர் பொ. காசிப்பிள்ளை** ஆகியோரின் சிற்பங்கள், இந்தியாவிலிருந்து எடுத்து வரப்பட்டு சைவத்தை நிலைநாட்ட பல நூற்றாண்டுக்கு முன் உருவாக்கப்பட்ட அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய முகப்புத் தோற்றம், சங்கிலிய மன்னன் காலத்தில் மன்னனுக்கு நம்பிக்கைக்குரியவர்களாக மதிப்பார்ந்த பல அரச பதவிகளை அலங்கரித்த அரியாலை மக்களை கௌரவித்து மன்னனால் குதிரைகள் நீர் அருந்துவதற்காக அரியாலையில் வெட்டப்பட்ட மதிப்பான்குளம், அரியாலையின் புங்கன்குளம் புகையிரதநிலையம் தேசிய அணிகளை அலங்கரித்த, தேசிய ரீதியில் சாதனை படைத்த அரியாலை விளையாட்டு வீர வீராங்கனைகளை ஞாபகப்படுத்தும் பாவைகள் அரியாலை மக்களின் பிரதான வாழ்வாதார தொழில் வேளாண்மையைப் புலப்படுத்தும்வயல்நிலம், கலப்பை உழுகின்ற மாடு என கலை வண்ணம் மிக்க பல பாவைகள் வெளிநாட்டு உறவுகளின் நிதிப்பங்களிப்புடன் யாழ். நகர வீதிகளின் ஊடாக அரியாலையின் புகழைப் பரப்பியது.

இரவு தமிழர் கலை, கலாசாரங்கள் அழியாது பாதுகாக்கவென **அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில்** மலர் குழுத் தலைவர் **அ.உபயசேகரம்** தலைமையில் அரியாலையூரைச் சேர்ந்த வைத்திய கலாநிதி S.சிவநேசன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்க வட்டுக்கோட்டை நாகப்புக் குழுவினரின் கிராமியக் கலைகளின் சங்கமம்,கரகாட்டம் ,ஒயிலாட்டம், தீப்பந்த சாகசங்கள், சிலம்பாட்டம், பொய்க் கால்குதிரை, பொம்மலாட்டம் என்பன இடம்பெற்றன.

**சித்திரை 09 அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய விஸ்வநாதன் அரங்கில் வடமாகாணத்தின் சிறந்த பாடகர் யார் என்பதனைத் தெரிவு செய்யும் இறுதி நிகழ்வும் கலை நிகழ்வும்** நூற்றாண்டு விழா உறுப்பினர் விரிவுரையாளர் ஸ்ரீ.ஆனந்தக் குமாரசாமி தலைமையில் பிரதம விருந்தினராக அரியாலை மீது பற்றுக் கொண்ட வரும் நோர்வேயயில் வசிப்பவருமான N.நேதாஜி பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க வடமாகாணத்தின் சிறந்த பாடகர் யார் என்பதனைத் தெரிவு செய்யும் இறுதி நிகழ்வும் அரியாலை நாடக மன்றம் வழங்கிய **"அம்மானச் சத்தியமா"**, கனடா வாழ் அரியாலை கலைஞர்களால் வழங்கப்பட்ட **"ஊரில கல்யாணம்"** நாடகமும் மிகச்சிறப் பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கேறியது.

**சித்திரை 10 ரிலே கார்னிவேல்:** வடமாகாணத்தின் பல பாடசாலைகள் கழகங்கள் கலந்து கொள்ள நூற்றாண்டு விழா பொருளாளர் ஓய்வு பெற்ற பிரதம கணக்காளர் **சு.சண்முகரட்னம்** தலைமையில் உடற்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் **இ.ராஜசீலன்** பிரதம விருந்தினராக வும் முன்னாள் விளையாட்டு வீரர் அரியாலையூர் S.K.சண்முகலிங்கம் மற்றும் ஓய்வு பெற்ற யாழ்.வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் **சண்.தயாளன்** ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் யாழ் . பல்கலைக்கழக உடற்கல்வி போதனாசிரியர் அரியாலையூர் செல்வி ராதை அருளம்பலம் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்க துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

சித்திரை 11 அரியாலைச் சுதேசியம் ஆரம்பித்த **அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய முன்றலில்** நூற்றாண்டு விழா கலைத் தலைவர் ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர் ப.ஸ்ரீஸ்கந்தன் தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்க .அரியாலையூர் R.Y.நவரூபன்,R.Y.காண்டீபன் சகோதரர்க ளின் Saxophone நிகழ்வும் **இந்தியாவில் இருந்து வருகை தந்த சிறப்புப் பேச்சாளர் பேராசிரியர் பார்வீன் சுல்தானாவின்** "மனிதமும் இலக்கியமும்" என்னும் சிறப்புப் பேச்சும் அரியாலையில் வசித்து தற்போது புலம்பெயர்ந்து வாழும் கலைமாமணி மாணிக்கம் யோகேஸ்வரனின் தமிழிசையும் நடைபெற்றது.

**சித்திரை 12 அரியாலை சனசமூக நிலைய காசிப்பிள்ளை** அரங்கில் நூற்றாண்டு விழா நிதி நிர்வாக பொதுத் **பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் அரியாலை மக்கள் மன்றம் நோர்வேயின் தலைவர் கா.குலசிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்ள முன்பள்ளி சிறார்களின் "சங்கே முழங்கு நிகழ்வும்"தென்னிந்திய இசைக் கலைஞர்களின்"ஸ்ப்தஸ்வரங்கள்" இசை நிகழ்வும் நடை பெற்றன.**

**சித்திரை 14 விஹாரி புதுவருடப்பிறப்பன்று** பிற்பகல் நூற்றாண்டு விழா விளையாட்டுத்தலைவர் சுதேஸ்குமார் தலைமையில் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் அரியாலையூர் மைந்தன் வைத்திய கலாநிதி மு.தெய்வேந்திரா பிரதம விருந்திராகக் கலந்து சிறப்பிக்க உள்ளூர் வீரர்களை ஊக்குவிக்கும் பல விளையாட்டு நிகழ்வுகளும் தமிழர் வீர விளையாட்டு, தலையணைச் சண்டை, வழுக்குமரம் ஏறுதல் போன்றவையும் விநோத ஆடைப் போட்டியும் சிறப்பாக நிகழ்ந்தேற இரவுக் கலை நிகழ்வுகள் பெருந்தலைவர் செ.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற பிரதம விருந்தினராக வாழ்நாள் பேராசிரியர். பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்து சிறப்பிக்க **அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில்** வாண வேடிக்கைகளுடன் 1996 இடம்பெயர்வின் பின் யாழ்ப்பாணத்தில் இவ்வளவு மக்கள் கலையுணர்வுடன் உள்ளார்களா? என வியப்பைத்தரக் கூடிய வகையில் மாபெரும் மக்கள் கூட்டம் அலைமோத கனடா வாழ் அரியாலை மக்களின் நிதிப்பங்களிப்புடன் பிரமாண்டமான முறையில் வடிவமைக் கப்பட்ட மேடையில் ப.ஸ்ரீஸ்கந்தனின் நெறியாள்கையில் இளங்கலைஞர்கள் பங்கேற்க நூற்றாண்டு விழா நாடகப்பொறுப்பாளர் **த.ஹரிசாந்த் பண்டார வன்னியனாக தோன்றி சிறப் பாக நடித்து வீரவசனங்கள் பேச வான தீர்ந்த கரகோசத்துடன் "பண்டார வன்னியன்" அரங்கேறிரசிகர்க ளின் பெரும்** வரவேற்பைப் பெற்றது.

இதில் காக்கை வன்னியன் பாத்திரம் ஏற்ற சசிகாந்தின் நடிப்பு பலராலும் பேசப்பட்டது. அத்தனை நடிகர்களும் தமது ஆற்றுகையை சிறப்புற வெளிப்படுத்த நீண்ட காலத்திற்குப்பின் நல்லதொரு நாடகத்தைப் பார்க்க கிடைத் தது.

தொடர்ந்து இந்தியக் கலைஞர்களின் "இசைக்கோலங்கள்" நிகழ்வும். மீண்டும் அதே நாடகக் கலைஞர் கள் கலக்கிய **"இன்று போய் நாளைவா" நாட்டுக் கூத்தும் மக்கள் வெள்ளம் குறையா வண்ணம் அரங்கேறியது.**

அதனைத் தொடர்ந்து இந்தியக் கலைஞர்களின் "இசைக்கோலங்கள்" அதிகாலை 2மணிவரை இடம்பெற்றது. அனைத்து விடயமும் பாராட்டத்தக்க சிறப்பு மிகு அம்சங்களாகக் காணப்பட்டன.

நல்லதொரு சமூக உறவை,பண்புமிகு சமூகத்தை கட்டியெழுப்பியது மட்டுமல்லாது வைத்திய கலாநிதிகள் ,சிறந்த வைத்தி யர்கள்,பொறியியலாளர்கள், அரசாங்க அதிபர், பல்கலைக்கழக துணை வேந்தர், தேசிய ரீதியிலான விளையாட்டு வீரர்கள், கணக்காளர்கள், கல்வியலாளர்கள், அதிபர்கள், நல்லாசிரியர்கள், எழுத்தாளர்கள், நாடக கலைஞர்கள், திரைப்பட இயக்குநர் , வங்கியியலாளர்கள், அரச உயர்பதியாளர்கள், நகரபிதாக்கள், பாராளுமன்ற உறுப்பினர் எனப் பலரையும் உருவாக்கியது மட்டுமல்லாது சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் பெருமைமிகு ஒரு வரலாற்றுச் சாதனைப் பெருவிழாவாக அரியாலை மக்கள் கொண்டாடிய சிறப்புடன் அரியாலை மக்களின் உணர்வுடன் கலந்த ஒருவிழாவாக அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா காணப்படுகின்றது. பெருநிதியைச் செலவிட்டு கலை, கலாசார,பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதுடன் விளை யாட்டுக்களையும் வளர்க்கும் இவ்விழா நூற்றாண்டை மிக மிகச் சிறப்பாகக் கொண்டாடியிருப்பது எந்த ஒரு சுதேசிய குழுவாலும் முன்னெடுக்கப் படாத மகத்தான விடயம். இதற்கு ஒத்துழைத்த உள்நாட்டு, வெளிநாட்டு விசுவாசிகள் மற்றும் இளைய சமூகத்தினர் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இவ் விழாவின் வெற்றி அடுத்த தலைமுறையினர் தொடர்ந்தும் நடத்துவதில் தங்கியுள்ளது.

**-நித்தாசன்-**

# இது நம்ம கதைகள்... 46

## உயிர் கெ(ா)டுப்பான் தோழன்



தமிழ்-சிங்களப் புத்தாண்டு மலர்ந்து விட்டது. புதிய நம்பிக்கைகளுடன் மலர்ந்த விகாரி புத்தாண்டு உங்களுக்கு அருளையும், ஆரோக்கியத்தையும், அனைத்து சுபீட்சங்களையும் அள்ளித்தர வாழ்த்துகின்றேன்.

முன்பு புதுவருடக் கொண்டாட்டம் என்றால் அது உறவுகளின் சங்கமமும், குதூகலமுமே. ஆனால் இன்று உறவுகள் தூரமாகிப் போனதால் உறவுகளைவிட நட்புக்களின் ஒன்றுகூடலும், கொண்டாட்டமுமே வலுப்பெற்றுள்ளது.

பொதுவாக புதுவருடம் வீடுகளிலேயே விழாக்கோலம் காண்பது மரபு. ஆனால் இன்றைய இளசுகளுக்கு வீடுகளைவிட "ஹோட்டல்கள் (hotel)"தான் கொண்டாட்டங்களின் மையமாகிவிட்டது. புதுவருடம் உறவுகளை வலுப்படுத்தும் நோக்கம் கொண்டது. ஆனால் இன்றைய கொண்டாட்டங்களில் உசார் கூடி இறுதியில் நிதானமிழக்கும் நிலையேற்பட்டு பிணக்குகளாலும், விபத்துக்களாலும் வைத்தியசாலைகளே நிறைகின்றன. உறவுகள் வலுவுறுவதற்குப் பதிலாக பிரிவுகளும், பகையுணர்வுமே நிலை கொள்கின்றன.

இவ்வருட புதுவருட காலத்தில் நாடு முழுவதிலும் விபத்துக்களிலும், கைகலப்புக்களிலும் சிக்கி சுமார் 800 பேர் வரையிலானோர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர். வடக்கில் அதிகபட்சமாக வவுனியாவில் 110 பேர் புதுவருட அனர்த்தங்களில் சிக்கி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இலங்கை முழுவதிலும் 120 பேரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன.

புதுவருடத்தை அண்டிய காலத்தில் நண்பர்களுக்கிடையிலான பிணக்குகளினால் திருமலையில் ஒரு உயிர் இழக்கப்பட்டுள்ளது. தென்மராட்சியில் பெரும் பகை மூண்டுள்ளது.



மகிழ்ச்சியாக நண்பர்களுடன் விழாவைக் கொண்டாடுவதில் தவறில்லை. ஆனால் அந்தக் கொண்டாட்டம் பிறருக்குத் திண்டாட்டமாக மாறாமல், எல்லை மீறாமல் இருப்பதே யாவருக்கும் நலம்.

சுயகட்டுப்பாடு, பொறுப்புணர்வு, சமூக பிரக்ஞை என்பவற்றுடன் நிகழ்வுகளைக் கொண்டாடும் போது யாவும் இனிதாகும்.

நட்புக்காகத் தம்மையே அர்ப்பணித்தவர்கள் பலருண்டு. தம்மை விடவும் நண்பரில் கரிசனைமிக்கோரும் பலருண்டு. ஆயினும் சில சமயம் அபரிமிதமான கரிசனைகள் இடறல்களாகவும் மாறுவதுண்டு. எவ்வாறாயினும் தீயவருடன் கொள்ளும் நட்பு தீமைக்கே எம்மை இட்டுச் செல்லும். இவ்வாரக் கதையும் ஒரு வகையான நட்புக் கதையே.

அதுவொரு மனநல வைத்தியசாலை. அங்குள்ள விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றவர்களில் நம்ம கதை மாந்தர்கள் இருவரும் உள்ளடக்கம்.

அவர்களிடையே நல்ல புரிந்துணர்வு இருந்தது. அவர்களுக்கான சிகிச்சையால் கணிசமான முன்னேற்றம் செயற்பாடுகளில் பிரதிபலித்தது. இருப்பினும் சில சமயம் அவர்களுக்கு வெறுமையுணர்வு ஏற்பட்டு விரக்தியடைவார்கள். இவ்விதமாக நண்பர்களில் ஒருவருக்கு விரக்தி உச்சம் பெற்றது. தன்னுயிரை மாய்த்துக் கொள்ள அருகிலிருந்த ஆழமான கிணற்றில் அவர் குதித்தார்.

இதைக் கண்ணுற்ற அவரின் நண்பர் தன்னுயிரைத் துச்சமென நினைந்து, தானும் அக்கிணற்றில் குதித்து தன் நண்பரை உயிராபத்திலிருந்து மீட்டுக் கரைசேர்த்தார். இதனைக் கண்ணுற்ற மருத்துவ தாதி இம் மனிதரை மெச்சியதுடன், தலைமை வைத்தியருக்கும் தகவல் தெரிவித்தார். இம் மனிதர் உணர்வுபூர்வமாக செயற்பட ஆரம்பித்துவிட்டார். அவரின் நோய் முற்றாகக் குணமாகிவிட்டது என்று அனுமானித்த தலைமை மருத்துவர் நம்மாளை அழைத்து "உமக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியும், ஒரு கவலையான செய்தியும் சொல்லப் போகின்றேன். நீர் உணர்வுபூர்வமாகச் செயற்பட்டு உம் நண்பரைக் காப்பாற்றியுள்ளீர். எனவே நீர் குணமடைந்து விட்டதாகக் கருதுகின்றேன். உம்முடைய சிகிச்சை நிறைவு பெறுகிறது. நீர் வீட்டிற்குச் செல்லலாம். இதுவே மகிழ்ச்சியான செய்தி" என்றார்.

"நன்றி மருத்துவரே. அப்படியானால் கவலையான செய்தி எது?" என்று ஆர்வத்துடன் கேட்டார் நம்மாள்.

"நீர் கஷ்டப்பட்டு கிணற்றிலிருந்து காப்பாற்றிய உம் நண்பன் பின்னர் தூக்கு மாட்டி இறந்து விட்டார்" இதுவே கவலையான செய்தியென்றார் மருத்துவர்". நீங்கள் சொல்வது தவறு. அவன் தானாக தூக்கு மாட்டவில்லை. கிணற்று நீரில் அமிழ்ந்து நனைந்திருந்தபடியால் நான் தான் அவனைக் கயிற்றில் காயப் போட்டேன்" என்றான் நம்மாள் பெருமிதத்துடன்.

**சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை**
**நேரா நிரந்தவர் நட்பு. (குறள்- 821)**

**எப்.எக்ஸ்.அன்ரன்**

# நீருக்கான யுத்தம் நீண்ட தூரத்தில் இல்லை

நீரின்றி அமையாது இவ்வுலகு (When Water Fails, Function of Nature Cease) நீர் என்ற ஒன்று பொய்த்துப் போகுமானால் இந்த இயற்கையின் அத்தனை அசைவுகளும் நின்றுவிடும், உறைந்து விடும் என்பதை 3000 ஆண்டுகளுக்கு முன்னே எங்கள் ஐயன் வள்ளுவன் எடுத்தியம்பி விட்டு சென்றிருக்கிறான். நீர் என்பது மிகவும் முக்கியம் வாய்ந்தது என்பதையும் அது பற்றிய விழிப்புணர்வு எம்மிடம் என்றும் இருக்க வேண்டுமென்று என்றோ எமக்கெல்லாம் விதைக்கப்பட்டிருக்கிறது.

நீர் என்பது இன்றைய உலகின் பேசுபொருளாக மாற்றம் அடைந்திருக்கிறது. பல அவைகளில் விவாதப் பொருளாக எழுந்து நிற்கிறது. பல இடங்களில் சர்ச்சைப் பொருளாக சூழ்ந்திருக்கிறது. ஏன் நாளை இந்த உலகின் சண்டைக்குரிய பொருளாக கூட வடிவம் எடுக்கும்.

"தங்கம் கொடுத்து தண்ணீர் வாங்குவாய்" நாளை தண்ணீரின் பெறுமதி தங்கத்தை விட வலும் பெறுமென்று ஆருடங்களும் ஆராய்ச்சிகளும் ஆங்காங்கே எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றன.

2001 ஆம் ஆண்டு கொழும்பு சென்றபோது அங்கே தண்ணீர் போத்தலையும் அதில் விலை பொறிக்கப்பட்டிருப்பதையும் பார்த்து மிகவும் வியப்படைந்தேன். தண்ணீருக்கு காசா என்று ஆனால் இன்று எல்லா வீடுகளும் தண்ணீர் போத்தல்கள் படையெடுத்து முகாம் அமைத்து நிற்கின்றது.

"நீருக்காகவே நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை வரும்"

நாம் நிவாரணத்திற்காக நீண்ட வரிசை யில் காத்திருந்த வரலாறு, பாணுக்காக நீண்ட வரிசையில் காத்திருந்த வரலாறு இப்படி பல விடயங்களுக்கு காத்திருந்த வாழ்வியலை கடந்து வந்திருக்கிறோம். ஏன் இன்றும் இந்த உலகில் புதிதாக ஐ ீழநெ ஏ ஆணுவியி ீழநெ வெளிவரும் போது நீண்ட வரிசையில் மக்கள் காத்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால் நாளை நீருக்காக இந்த உலகமே நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

ஆளில்லாத வீட்டுக்குள் அரைக்குவளை நீர் திருடினான் என்பதற்காக ஆயுள் தண்டனை கூட விதிக்கப்படும் சட்டங்கள் உருவாக்கப்படலாம். மூன்றாம் உலகப் போர் மூளுமாகயிருந்தால் அதற்காக முக்கியமான முதன்மை காரணம் நீராகத்தான் இருக்குமென்று இன்றைய அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் உலக அரசியல் ஆய்வாளர்களும் கூறுகின்றார்கள். மழை பெய்யும் தானே எமக்கு நீர் கிடைக்கும் தானே என்று எதிர்பார்த்து காத்திருந்தால் வல்லரசுகள் உங்கள் மழை மேகங்களை எல்லாம் கைப்பற்றி சென்றுவிடும்.

இன்றைய காலத்திலேயே குடிப்பதற்கு சற்றும் உகந்ததல்லாத நீரை பருகும் பல சமூகங்கள் உண்டு. இந்த நிலை நாளை நமக்கும் வரலாம் என்பதே எம் முன்னே எழுந்து நிற்கும் மிகப்பெரிய அச்சமாகும்.

**ச.சர்வராஜா,**
நீர்ப்பாசனப் பொறியியலாளர், யாழ்.மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னல் தாக்கத்திலிருந்து எம்மைப் பாதுகாப்போம்

**தரம் 9 விஞ்ஞான பாடப்புத்தகத்தில் உள்ள மின்னல் தாக்கம் தொடர்பான இக்கட்டுரை தற்போதைய சூழ்நிலையில் மின்னல் தொடர்பில் அறிந்து கொண்டு விழிப்புணர்வு பெறும் பொருட்டு இங்கு பிரசுரிக்கப்படுகின்றது. (ஆ-ர்)**

மின்னனினால் மனிதர்கள், விலங்குகள், உடைமைகள் போன்றவற்றிற்கு பெருமளவில் பாதிப்புகள் ஏற்படுகின்றன. மின்னல் தாக்கத்தினால் நிகழும் விபத்துக்களில் ஒரு சில தகவல்களையே பொதுசன ஊடகங்கள் வெளியிடுகின்றன.

இலங்கையில் மட்டுமல்ல உலகின் பல்வேறு நாடுகளிலும் மின்னலால் உயிர் மற்றும் உடைமைகளுக்குச் சேதங்கள் ஏற்படுகின்றன. அறிக்கைகளின் படி அமெரிக்க, ஐக்கிய நாடுகளில் வருடாந்தம் ஏறத்தாழ 100 பேர் மின்னலால் உயிரிழக்கின்றனர். 500 இற்கு மேற்பட்டோர் காயமடைகின்றனர்.

மின்னலால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளாத காரணத்தினாலேயே மின்னல் தாக்கு அதிகளவில் ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

இப்பருவக்காற்று மழை தோன்றும் காலப்பகுதியில் புவிக்கு அண்மையில் உள்ள வளிமண்டலத்தின் வெப்பநிலை உயர்வாகக் காணப்படும். காற்று வீசுவது குறைவாகும். இதனால் வளிமண்டலத்தில் நீராவியின் அளவு உயர்வாகும். இந்நீராவி மேலெழுவதுடன் குளிர்ச்சியடையும். இதனால் முகில்கள் தோன்றும். மின்னல் தோன்றுவதற்கு பிரதான காரணமாக அமைவது திரள் மழை முகில்கள் ஆகும். இவை பொதுவாகப் புவி மேற்பரப்பில் இருந்து 15 ஆயிரம் உயரத்தில் காணப்படுகின்றன.



மின்னல் தோன்றும் போது திறந்த வெளியில் நிற்கக்கூடாது



மின்னல் மின்னும் போது தொலைபேசி பயன்படுத்தக்கூடாது

**மின்னல் தோன்றும் முறை**

மேகத்தினுள் பனிப்பளிங்குகள் மற்றும் மிகச்சிறிய நீர்த்துணிக்கைகள் என்பன காணப்படுகின்றன. மேகத்தினுள் கீழிருந்து மேலாக வேகமாகக் காற்று வீசும். இதனால் பனிப்பளிங்குகளும் நீர்த்துணிக்கைகளும் ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன. இவ்வாறு இரண்டும் ஒன்றுடன் ஒன்று மோதுவதனால் பனிப்பளிங்குகள் மற்றும் நீர்த்துணிக்கைகள் என்பன நிலை மின்னேற்றம் பெறும்.

நிலை மின்னேற்றங்கள் நேர், மறை என இரு வகைப்படும். மழை மேகங்களின் மேற்பகுதியில் நேர் ஏற்றங்களும் கீழ்ப்பகுதியில் மறை ஏற்றங்களும் ஒன்று சேர்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

மேகத்தினுள் காணப்படும் வளி மின்காவலியாகும். இதனால் வளியினூடாக மிகச் சுலபமாக மின் ஏற்றங்கள் கடத்தப்படாது. எனவே மேகத்தின் மேல், கீழ்ப்பகுதிகளில் காணப்படும் அதிகளவு ஏற்றங்கள் ஒன்று சேரும். இவ்வாறு அதிகளவு ஏற்றங்கள் ஒன்று திரளும் போது வளியினூடாக மின் கடத்தப்படும் நிலை உருவாகும். இதன் போது ஏற்றங்கள் கடத்தப்படுவதனால் மின் இறக்கம் ஏற்படும். இது மின்னல் எனப்படும்.

**மின்னல்களின் வகைகள்**

எவ்விடயங்களுக்கு இடையில் ஏற்றங்கள் கடத்தப்படும்? இதற்கமைய மின்னல் மூன்று வகைப்படும்.

- முகில் மின்னல்
- மின்னிறக்க மின்னல்
- புவி மின்னல்

ஏற்றம் பெற்ற முகில் ஒன்றில் இரு இடங்களுக்கு இடையே ஏற்றப் பாய்ச்சல் நிகழும் போது அல்லது வேறுபட்ட ஏற்றங்களையுடைய முகில்களுக்கு இடையே ஏற்றங்களின் பாய்ச்சல் நிகழும் போது முகில் மின்னல் தோன்றும்.

மூன்று வகையான மின்னல்களையும் காட்டும் படங்கள்



முகில் மின்னல்



மின்னிறக்க மின்னல்



புவி மின்னல்

சில சந்தர்ப்பங்களில் முகிலில் சேர்ந்த மின்னேற்றம் சூழவுள்ள வளிக்குக் கடத்தப்படும். இதன்போது மின்னிறக்க மின்னல் தோன்றும். மிகவும் ஆபத்தானது புவி மின்னல் ஆகும். அது எவ்வாறு தோன்றுகின்றது எனப் பார்ப்போம்.

ஏற்றம் பெற்ற முகில்கள் புவியின் குறித்த மட்டத்திற்கு மேலே காணப்படும் போது அதன் கீழ்ப்பகுதியில் காணப்படும் மறை ஏற்றங்கள் காரணமாக அதற்கு அண்மையிலுள்ள நில மட்டத்தில் நேர் ஏற்றம் தூண்டப்படும்.

முகிலிலும் புவியிலும் ஏற்றங்களின் அளவு அதிகரிக்கும் போது ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் முகிலில் இருந்து புவிக்கு மறை ஏற்றப் பாய்ச்சல் நிகழும் இது புவி மின்னல் எனப்படும்.

**மின்னலும் இடியோசையும்**

புவி மின்னலின் அழுத்த வேறுபாடு ஏறத்தாழ 10 மில்லியன் வோல்ட் ஆகும். இதன்போது 25 ஆயிரம் அம்பியர் மின்னோட்டம் பாயும். வீட்டில் பயன்படுத்தப்படும் LED விளக்கு ஒன்றின் அழுத்த வேறுபாடு 230 வோல்ட் ஆகும். அதனூடாகப் பாயும் மின்னோட்டம் 0.1 அம்பியரிலும் குறைவாகும். இதன்மூலம் மின்னல் ஒன்றின் அழுத்த வேறுபாடும் மின்னோட்டமும் எவ்வளவு அதிகம் என்பது தெளிவாகின்றது.

இவ்வளவு அதிக பெறுமானத்தை யுடைய மின்னோட்டம் மிகக் குறுகிய காலத்தினுள் (10 மில்லி செக்கன்கள் அளவு) வளியினூடாகப் பாயும் பொது வளியின் வெப்பநிலை பாரியளவில் அதிகரிக்கும். அவ்வெப்பநிலை அதிகரிப்பு ஏறத்தாழ 30000°c அளவுடையதாகும். அதாவது சூரியனின் மேற்பரப்பு வெப்ப நிலையை விட ஐந்து மடங்கு அதிகமாகும்.

மின்னின் உயர் மின்னோட்டம் காரணமாக வளி மிகத் துரிதமாக விரிவடையும். (வாணவெடி ஒன்று வெடிக்கும் போது இவ்வாறான நிகழ்வொன்றே நிகழுகின்றது)

இவ்வாறு வளி துரிதமாக விரிவடைவதனால் முதலில் அதிர்வு அலையும் பின்னர் ஒலி அலையும் தோன்றும். ஒலி அலை தோன்றுவது இடியோசை எனப்படும்.

மின்னல் தோன்றும் போது ஒலியும் ஒளியும் ஒரே சந்தர்ப்பத்தில் தோன்றும். எனினும் முதலில் ஒளி தோன்றும். பின்னர் ஒலி கேட்கும். இதற்கான காரணம் ஒளியின் கதி, ஒலியின் கதியிலும் மிகவும் உயர்வாகக் காணப்படுவதாகும்.

ஒளியின் கதி மிக உயர்வாகையால் மின்னல் ஏற்பட்டவுடன் அது எமது கண்களுக்குப் புலப்படுவதற்கு எடுக்கும் காலம் புறக்கணிக்கத்தக்க அளவு சிறிதாகும். ஒலி நம்மை வந்தடைய எடுக்கும் காலம் உயர்வாகும். இதனால் ஒலி பின்னர் கேட்கின்றது.

இடியோசை கேட்கும் போது ஒளி தோன்றிய சந்தர்ப்பத்தில் இருந்து ஒலி கேட்பதற்கு எடுத்த நேரத்தை அளப்பதன்மூலம் மின்னல் தோன்றிய இடத்தின் தூரத்தைப் பருமட்டாகக் கணித்துக் கொள்ளலாம்.

மேற்படி செயற்பாட்டின் போது நீங்கள் மின் தீப்பொறி ஒன்றை அவதானித்திருப்பீர்கள். இதன்போது ஒளி, ஒலி என்பன தோன்றியதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். இம்மின் தீப்பொறியின் நீளம் சில மில்லி மீற்றர்கள் அல்லது சென்ரி மீற்றர்கள் ஆகும். எனினும் மின்னல் தாக்கும் போது தோன்றும் மின் பொறியின் நீளம் பல கிலோ மீற்றர்கள் ஆகும். இதற்கமையக் கேட்கும் இடியோசையும் உயர்வானது என்பது உங்களுக்குத் தெளிவாகியிருக்கும்.

**மின்னல் புவியை வந்தடையும் முறை**

மனிதர்களுக்கு, விலங்குகளுக்கு அல்லது கட்டடங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் மின்னல் தாக்கும் முறைகள் நான்கு உண்டு.

- நேரடி மின்னல்
- பக்கப்பாய்ச்சல் மின்னல்
- தொடுகை மின்னல்
- படிமுறை மின்னல்

**நேரடி மின்னல்**



வெட்டவெளியில் உள்ள மனிதன், மரம் அல்லது கட் டடங்களுக்கு நேரே தாக்கும் மின்னல் நேரடி மின்னல் எனப்ப டும்.

ஒருமனிதனை நேரடி மின்னல் தாக்கும் போது அதன் காரணமாக உருவா கும் மின் மனிதனினூடாக புவியினுள் கடத்தப்படுவதனால் பாரிய பாதிப்பு ஏற்படும்.

**பக்கப்பாய்ச்சல் மின்னல்**

உயர்ந்த கட்ட டம் அல்லது மரம் ஒன்றில் மின்னல் தாக்கினால் அது நேரடியாகப் புவியை நோக்கிச் செல்லும் அல்லது அதற்கு அண்மையில் உள்ள மனிதன் ஒருவனின் உடலினூடா கப் புவியை நோக்கிப் பாயலாம். இதற்கான காரணம் மரம் அல்லது கட்டடம் ஒன்றினூடாக மின்னோட்டம் பாய்வதை விட மனித உடலினூடாக மின்னலினால் உருவாகும் மின்னோட்டம் எளிதாகப் பாயும்.



தொடுகை மின்னல்



மின்னல் தாக்கும் போது வீட்டிலுள்ள மின் உபகரணாங் களை தொடுதல் அல்லது கம் பித் தொடுப்பையு டைய தொலைபேசியைப் பயன்படுத்தும் போது தொடுகை மின்னல் தோன்றும்.

அவ்வாறே மின் னல் தாக்கும் போது மரம் ஒன்றில் சாய்ந் திருந்தால் மரத்தைத் தாக்கும். மின்னல் மனிதனைத் தாக்கும். இதுவே தொடுகை மின்னலாகும்.

**படிமுறை மின்னல்**

கட்டடம், மரம் அல் லது நிலத்தை மின்னல் தாக்கும் போது மின்ன லினால் தோன்றும் மின் அவ்விடத்தில் இருந்து நிலத்தை நோக்கி எல் லாத் திசையிலும் பரவும். அவ்வாறு பரவிச் செல்லும் எல்லைப் பரப்பினுள் மனிதன் அல்லது மிருகம் ஒன்று இருப்பதாகக் கருதுங்கள். அந்த மனிதன் அல்லது மிருகத்தின் ஒரு காலினூடாக உட்புகுந்த மின் மறுபாதத்தினூடாக வெளியேறும். இது படிமுறை மின்னல் எனப்படும்.

இரு பாதங்களுக்கு இடையிலான தூரம் அதிகரிக்கும் போது மின்னழுத்த வேறுபாடு அதிகரிக்கும். இதனால் கடத்தப்படும் மின்னோட்டமும் அதிகரிக்கும். இதனால் மின்னல் தோன்றும் போது இரு பாதங்களையும் நெருக்கமாக வைத்திருத்தல் பொருத்தமானதாகும். (11 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளை நிலங்களை அபகரிக்கும் அவலம்





உள்நாட்டு யுத்தம் இடம் பெற்ற கிராமங்களின் மீளெழுச்சி என்பது இலங்கையின் ஜனநாயத்தில் புரட்டப்படாத அத்தியாயம் என்று கூறலாம். தீவகத்தைப் பொறுத்தவரை யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் இருந்து சொல்லொணா இடர்களுக்குள்ளான கிராமங்கள் அதிகம். அக்கிராமங்களுள் இன்று வரை மீள்குடியேற்றப்படாத பூர்வீக நிலங்களும் உண்டு. காலங்காலமாக சந்ததி சந்ததியாக வாழ்ந்த நிலங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு எட்டாத கனியாக இருந்த காலம் போய் இன்று முப்படைகளின் முகாம்கள் அமைக்கும் பணிக்காக அளந்து கொடுக்கின்ற காலம் உருவாகியுள்ளது தான் காலக் கொடுமை.

பூர்வீக நிலங்களை குடியிருப்புக் காணிகளாகவும் விளை நிலங்களாகவும் பாவித்த மக்கள் படைமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதைப் பார்த்துப் பார்த்து இருதயம் பொருமுகின்ற நிலை என்பது இலங்கைத் திருநாட்டில் மட்டுமே நிகழ்ந்தேறவல்லது. அந்தளவிற்கு அரசியல்வாதிகளோ அல்லது அரச அதிகார வர்க்கத்தினரோ சுதேச மக்களது நலனைப் புறந்தள்ளி மேற்போந்த நடவடிக்கைகளுக்காக தலைசாய்க்கின்ற ஜனநாயகம் தான் எமது நாட்டின் ஜனநாயகம்.

முடிக்குரிய காணிகளை செல்வந்தர்களுக்கு குத்தகைக்கும், உல்லாச விடுதிகளுக்கு விலைபேசியும் அந்நியர்களுக்கு தாரை வார்த்துக் கொடுத்தும் அரசும் அரச அதிகாரிகளும் அப்பாவி மக்களின் பூர்வீகக் காணிகளை வலிந்து கைப்பற்றி பெரும்பான்மைப் பிரதிநிதிகளை குளிர்விப்பதாக எண்ணி படையினருக்கும் கடற்படையினருக்கும் விமானப் படையினருக்கும் முகாம் அமைக்கக் கொடுக்கின்ற கைங்கரியத்தில் தம்மை ஈடுபடுத்துகின்ற நியாயம் வடமாகாணத்தில் மட்டுமே நடக்கக்கூடிய ஒன்று.

அவ்வாறுதான் யாழ்ப்பாண நகரிலிருந்து மிக அண்மையில் இருக்கிறதும் இலகுவாக அபிவிருத்தியடையச் செய்யக்கூடியதுமான மண்டைதீவு எனும் கிராமத்திலும் நிகழ்கிறது. யுத்தத்தின் பின் வடக்கு நோக்கிப் படையெடுத்த பொருளாதாரப் புரட்சியாளரின் செயற்றிட்டங்களுக்கு உல்லாச விடுதிகளுக்கு ஏனைய வியா.பார நோக்கங்களுக்கு முடிக்குரிய காணிகளை விலைபேசி விற்றுவிட்டு வாழ்வாதாரச் சவால்களுக்கு முகம் கொடுத்து வரும் அப்பாவி மக்களின் காணிகளைச் சுவீகரித்து கடற்படையினருக்குக் கொடுப்பதற்கான ஆயத்தங்கள் மண்டைதீவில் நிகழ்கிறது என்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் வேதனை.

யுத்த முடிவின் பின்னர் தான் குறித்த பூர்வீக விளைநில மற்றும் குடியிருப்புக் காணிகளில் கடற்படை முகாமமைத்தது. அப்போதும் மண்டைதீவு கிராம மக்கள் எதிர்த்தனர். அவ் எதிர்ப்பால் குறித்த இடங்களை மட்டும் ஆக்கிரமித்துக் கொண்டு ஒரு சில விளைச்சல் நிலங்களை விட நேர்ந்தது. கடற்படைக்கு அன்றைக்கு அரசியல்வாதிகளிடமும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளிடமும் விடுத்த கோரிக்கைகள் நீர்மேல் எழுத்தாயின. இன்று அக்காணிகளை நில அளவை செய்து கடற்படைக்கு உரியதாக்கும் முயற்சி வரை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சுமார் 18 ஏக்கர் 01 றூட் 10 பேர்ச் மேட்டுநிலக் காணிகளே இவ்வாறு அளவை செய்யப்பட்டு சுவீகரிக்க முனையப்பட்டுள்ளது.

மண்டைதீவு முதலாம் வட்டாரத்தில் ஜே/07 கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட மேற்படி மேட்டுக் காணிகள் மிளகாய், வெங்காயம், தக்காளி, வெண்டி, கத்தரி , பயிற்றை போன்ற காய்கறித் தோட்டங்களாலும் வர்த்தகப் பயிரான புகையிலைச் செய்கையாலும் ஏனைய உப பயிரினச் செய்கையாலும் நிறைந்து அந்நிய உரிமையாளர்களின் வாழ்வாதாரத்தினை ஏற்றியிருந்தன.

1990 ஆம் ஆண்டு மண்டைதீவு மக்கள் வலிந்து இடம்பெயர்க்கப்பட்டதிலிருந்து இன்று வரை அக்காணிகளைப் பார்வையிடுவதற்கோ விவசாயம் செய்வதற்கோ உரிமையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை ஆனால் இன்று அங்கு அமைந்துள்ள கடற்படை முகாமினை நிலையாகவும் விரிவாகவும் அமைக்கும் நோக்குடன் 11.04.2019 அன்று நில அளவைத் திணைக்களம் மூலம் அளவை செய்யப் படுவதாக உரிமையாளர்களுக்கு அறிவி க்கப்பட்டது.

குடியிருப்பில்லை வாழ்வாதார நிலங்கள் இல்லை, நாட்டின் முதன்மை உற்பத்திச் செய்கைக்குரிய பயிரிடு நிலங்கள் இல்லை. ஆனால் கடற்படைக்கு மட்டும் இந்நிலங்கள் சுவீகரிக்கப்படுகின்றமை என்பது சுதேச கிராமத்தவர்களுக்கு அதிலும் சிறுபான்மைத் தமிழினத்திற்கு அரசாங்கமும் துணைபோகும் அரசியல்வாதிகளும் செய்கின்ற உச்சக்கட்ட அநீதி என்றன்றி வேறேதுவுமில்லை.

11.04.2019 ஆம் திகதியில் மக்களின் போராட்டத்தால் நிலஅளவை மாத்திரம் நிறுத்தப்பட்டு கலைக்கப்பட்டாலும் மேலும் வரும் காலங்களில் சத்தமின்றி என்னென்ன காரியங்கள் நிகழவுள்ளதோ என்ற ஆர்வத்தில் அக் கிராமமக்கள் உள்ளமை தான் உண்மை.


"தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்" என்றார் மகாகவி பாரதியார். இங்கோ உணவினை உற்பத்தி செய்யும் நிலங்களே பாதுகாப்புப் பிரிவின் வாசஸ்தலங்களாக்கப்படுகின்ற அநீதி அரங்கேறுகிறது.

விடுதலை, தன்னாட்சி சுதந்திரம் என்று கோசமிடுகின்ற அரசியல்வாதிகள் அரசமரக் காணிகளை ஆக்கிரமிக்கும் பௌத்தருக்கும் விளைநிலங்களில் கட்டடங்களை விரிவுபடுத்தும் முப்படைக்கும் காணிகள் சுவீகரிப்பதைக் கண்டுகொள்ளாது பறிக்கப் படும் நிலத்திற்கு சுயாட்சியுரிமை கேட்கும் பகுத்தறிவற்ற அவலநிலை ஆசியாவின் ஆச்சரியத்தில் மட்டுமே நிகழத்தக்கது. அரச காணிகள் ஏலத்தில் வழங்கி விட்டு கிராமத்தவர்களின் நிலங்களை அரசுடைமையாக்கி வாழ்வாதார சவால் மிகுந்தவர்களாக்கி மகிழ்கின்ற நிலை உள்ள வரை எம் தாகம் தணியாது. வாழ்வியலுக்கான போராட்டமும் நிறைவுறாது. உரிய தரப்பினர்களே இது உங்கள் கவனத்திற்குரிய உங்கள் ஓய்வுக் காலங்களை எம் மக்களின் சாபங்களினால் இருள் மயமாக்கி விடாதீர்கள்.

**சிறி. திவ்யன்**

---

# மின்னல் தாக்கத்திலிருந்து...



**(10ஆம் பக்கத் தொடர்ச்சி)**

மேலும் படிமுறை மின்னல் மூலம் மனிதனுக்கு ஏற்படும் தாக்கத்தை விட மாட்டுக்கு ஏற்படும் தாக்கம் அதிகமாகும். இதற்கான காரணம் மாட்டின் முன் பாதத்திற்கும் பின் பாதத்திற்கும் இடையிலான தூரம் மனிதனின் பாதங்களுக்கு இடையிலான தூரத்தைிட அதிகமாகும். எனவே மின்னழுத்த வேறுபாடு அதிகரித்து மாட்டினூடாகப் பாய்ந்து செல்லும் மின்னோட்டம் அதிகரிக்கும். இதனால் பாதிப்பு உயர்வாகும்.

**மின்னலினால் ஏற்படும் பாதிப்புக்களை இழிவளவாக்குதல்**

மின்னலினால் மனிதர்கள், மிருகங்கள் மற்றும் சொத்துக்கள் என்பனவற்றிற்கு அதிக பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்பது உங்களுக்குத் தெளிவாகியிருக்கும். திருத்தமாக கணக்கிடப்படாவிடினும் இலங்கையில் மின்னலினால் ஒரு ஆண்டினுள் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதம் பல பில்லியன்கள் அளவினதாகும். எனவே மின்னலினால் ஏற்படும் பாதிப்புக்களை இழிவளவாக்குவதற்கு நாம் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்.

**மின்னலினால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்த்தல்**

மின்னலினால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்காக ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

உயர்ந்த கட்டடத்தில் மின்னல் கடத்திகளைப் பொருத்துதலும் அவற்றை முறையாகப் பராமரித்தலும்

**மின்னலினால் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து பாதுகாப்பு பெறல்**

மின்னல் ஏற்படக்கூடிய சில சந்தர்ப்பங்களில்

● விளையாட்டு மைதானம், தேயிலைத் தோட்டம், வயல் போன்ற திறந்த வெளிகளில் நடமாடுவதைத் தவிர்த்தல்

● மண்வெட்டி, அலவாங்கு போன்ற உபகரணங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்

❖ திறந்த வெளியில் இருந்தால்

● இரு கால்களையும் நெருக்கமாக வைத்து குனிந்திருத்தல்

● உலர்ந்த பாதணிகளை அணிதல் அல்லது காவலிகள் மீது இருத்தல்

● மரம் அல்லது உயர்ந்த இடங்களில் இருப்பதைத் தவிர்த்தல்

மரத்திற்குக் கீழே இருக்க நேர்ந்தால் கிளை படர்ந்துள்ள இடத்தில் இருப்பதைத் தவிர்த்தல்

● கொடிக்கம்பம், உலோக வலை, கம்பி, மதில் போன்றவற்றில் இருந்து விலகியிருத்தல்

● உடலின் உயரம் குறையக்கூடியவாறு அமர்ந்து அல்லது கட்டில் ஒன்றில் சாய்ந்தவாறு இருத்தல்

● திறந்த படகு ஒன்றில் இருப்பின் அமர்ந்திருத்தல்

● கம்பித் தொடுப்புடன் கூடிய தொலைபேசிப் பாவனையை இயன்றளவில் தவிர்த்தல்

● மின்னழுத்தி, குளிர்சாதனப்பெட்டி, மின்னடுப்பு போன்றவற்றை பாவிப்பதைத் தவிர்த்தல்

**மின்னல் தாக்கத்திற்கு உட்பட்ட ஒருவருக்கு முதலுதவி வழங்குதல்**

● மின்னல் தாக்கி கை, கால்கள் விறைத்திருந்தால் அவற்றை அழுத்தி (Massage) பழைய நிலைக்குக் கொண்டு வருதல்

● சுவாசம் நின்றிருப்பின் செயற்கைச் சுவாசத்தை வழங்குதல்

● இதயத் துடிப்பு நின்றிருப்பின் இதயத்தை அழுத்துதல். செயற்கைச் சுவாசம் மற்றும் இதயத்தை அழுத்துவதற்குப் பயிற்சி பெற்றிருத்தல் மிக முக்கியமாகும். இது உங்கள் நடைமுறை வாழ்க்கைக்கு பயனுடையதாக அமையும்.

● நோயாளியை மிக விரைவாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லல் வேண்டும். வைத்தியசாலைக்கு செல்லும் போது முதலுதவியை வழங்கியபடியே எடுத்துச் செல்லவேண்டும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அகம் காப்போம்

அன்பார்ந்த சங்குநாத வாசகர்கர்களுக்கு கௌரவ ஜிம்மிக்குட்டியின் சிரம் தாழ்ந்த வணக்கம் உரித்தாகட்டும். வெயிலைப் பார்த்து ஒதுங்காமல் கடந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இயக்கச்சியில் சரணாலயத் திறப்பு விழாவில கலந்து எங்களைக் கௌரவித்த அன்பு நெஞ்சங்களைப் போற்றத்தான் வேணும். ஒரு குழிநிலத்துக்கே வெட்டும் குத்தும் நடக்கிற மனித சமுதாயத்திலை பத்து ஏக்கர் நிலப்பரப்பை இனம் பாராமல் எங்களுக்கு அன்பளிப்புச் செய்த அந்த ரோகினி அம்மையாரையும் இந்தக் காப்பகத்தை அமைக்க மூலகாரணமாக இருந்த கலாநிதி ஆறு.திருமுருகனையும் இந்த வானும் நிலவும் கதிரும் சுடரும் நீரும் நிலமும் மறவாத ஆத்மார்த்த அன்பை, நன்றியை இந்தக் காற்று வெளியிடை இரண்டறக் கலந்து வெளிப்படுத்தும் பாக்கியம் எங்கடை நாய்கள் பரம்பரைக்கே மட்டும்தான் கொடுத்து வைச்சிருக்கு...இப்ப விளையாடல்தான் போல கிடக்கு. பலநாள் திட்டமிட்டிருந்தாலும் நான் கவலைப்பட்டு அழுதது போன மாதம் தான். ம்...நல்ல மழையும் பெய்து கிடக்குது. கவனம். ம்...காவல் தெய்வங்களாகிய எங்களுக்கே காப்பகமோ எண்டு குழப்பமடையாதையுங்கோ...காப்பு-அகம், அகம்-காப்பு-விளங்குதே விசயம். மனித குலமே உங்கள் அகங்களைப் புனித பீடமாக காத்து வைச்சிருக்கட்டாம். தரும சிந்தனைகளும் அறக்கோட்பாடுகளும் மனித நேயமும் ஜீவகாருண்யமும் நிறைந்து பொங்கி வழிய வேணும் எண்டுதான் காப்பகங்கள் சொல்லுது. பெரியவர் அடிக்கடி சொல்லுவார் பெற்றவர்களோடு தான் பிள்ளைகள் வாழ வேணும் எண்டு. ஆனால் பெற்றவர்கள் தமது இயலாமை காரணமாகவும் கல்வி, பாதுகாப்பு போன்ற காரணங்களுக்காகவும் பிள்ளைகளை காப்பகங்களிலை சேர்க்கிறார்கள் எண்டு-ஆனால் எங்கடை சரணாலயத்திலை, வீடில்லாத தெருவிலை கைவிடப்பட்டவையளைத் எண்டு ஒலிபெருக்கியிலை சொல்லுறதோ, துண்டுப் பிரசுரம் குடுக்கிறதோ... அதுமட்டுமே கூடு இடைவெளி பற்றியும் குட்டை நாயும் நல்ல நாயும் பற்றியும் கதைக்கினம்.

இவ்வளவு செலவு செய்து செய்யிற இந்தப் பெரிய கைங்கரியம் செய்யிறவை இதையெல்லாம் ஆழமா யோசித்துத் திட்டமிட்டு ஆய்வு செய்துதானே நடத்துவினம். அதுக்குள்ளை பிழை பிடிக்கிறது ஒரு பொழுது போக்குத்தான். யாரோ ஒரு நல்ல காரியம் செய்தால் எங்கள் அகம் திறந்து அதனை வரவேற்கவும் மகிழ்சியடையவும் உதவிகள் ஏதாவது செய்யவும் ஆரோக்கியமான ஆலோசனைகள் செய்யவும் பெருந்தன்மை வேணும் ஜிம்மி.

உண்மையிலை மனித குலத்துக்கே இது ஒரு "கர்மாகழிப்பு"த்தான். அதுவும் சிவபூமி எண்டு திருமூலர் கௌரவித்த ஈழத்துக்கே இது ஒரு. தெய்வீக ஒளி வீச்சுத்தான். சரிசரி...உனக்கு ஏன் இதெல்லாம் சொல்லு



ங்குதே- என்னை கௌரவ ஜிம்மிக்குட்டி என்று ஏன் சொன்னனான் என்று. நாய்ச் சாதி தான்-ஆனாலும் நன்றி மறவாத சாதி...சின்னச் சின்னக் குட்டிகள் எல்லாம் உருண்டு கொண்டு புழுகத் தோடை அச்சமற்று, கவலையற்று, மனிசரைப் பார்த்துக் குட்டி வாலை ஆட்டிக் கொண்டு இருந்த கண்கொள்ளாக் காட்சிக்கு நிகரே இல்லை. கண்விடாக் குட்டியளைத் தெருவிலை போட்டிட்டுப்போற- ஓமோம் குட்டி போடுற மனிச சாதியைப் பற்றி ஒரு மாதத்துக்கு முன்னம்தான் உங்களோடை கவலைப் பட்டுப் புலம்பினனான். பாத்தியளே... பூமியிலை தெய்வங்கள் உலாவிற தெண்டு சும்மா சொல்லக் கூடாது. என்ரை இந்தக் கொச்சைத் தமிழ் விளங்கிக் கடவுள் செய்த திருவிளைதான் வளர்க்கினம். பெரியவர் வாறார். என்னோடை கதைக்கத்தான் பக்கத்திலை இருக்கிறார்...

"என்ன ஜிம்மி... யோசிக்கிறாய். சட்ட திட்டம் தெரியாமல் சிக்குப்பட்டிடாதை. நாய்களைப் பிடிக்கக் கூடாதாம். இப்பிடிக் கொண்டு போய் அடைக்கக் கூடாதாம். ஆனால் தெருவிலை அடிப்பட்டுச் சாகலாமாம். பட்டினி கிடந்து எலும்பும் தோலுமா விசர் வந்து போற வாறவையைக் கடிச்சு மனிசரையும் நாயாக்கலாமாம். எப்பிடியிருக்குது கதை. உணவும் பாதுகாப்பும் மருத்துவ வசதிகளும் செய்யிற சேவைக்குக்கூட எத்தினை விமர்சனம். படிப்பறிவில்லாத ஐந்தறிவுச் சீவனுக்கு இந்தச் செய்திகளை எப்பிடிச் சொல்லுறது. வாழ் விருப்பமோ வாருங்கோ சரணாலயத்துக்கு றன் எண்டால் நீ இப்ப இப்ப நல்ல அறிவாளியா மாறிக் கொண்டு வாறாய்.

இந்தக் கருத்துக்களை நீயாவது உன்ரை ஆக்களுக்குச் சொல்லி நடை பவனியிலை எண்டாலும் இயக்கச்சிக்குப் போகச் சொல்லு.

நாங்களும் போகேக்கை வடையும் சுட்டுக் கொண்டு போவம். முக்கியமான விசயம் மறந்திடாதை அவையெல்லாம்..."சைவ நாய்கள்" மாறிச்சாறி அசைவம் கொண்டு போயிடுவினம். அது அங்கை கிடைக்காது மறந்திடாதை. வா பால் கஞ்சி ஆறப் போகுது குடிப் பம்...பார்த்தியளே தெரிஞ்சவைக்குச் சொல்லுங்கோ... நானும் என்ரை ஆக்களுக்குச்சொல்லுறன். போட்டு வாறன்.

திருமதி.பாரதி [illegible]
[illegible]

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : சக்கரம்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : கே.வி.மகாதேவன்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



காசே தான் கடவுளப்பா அந்த
கடவுளுக்கும் இது தெரியுமப்பா - அந்த
கடவுளுக்கும் இது தெரியுமப்பா
காசே தான் கடவுளப்பா அந்த
கடவுளுக்கும் இது தெரியுமப்பா

கைக்குக் கைமாறும் பணமே - உன்னைக்
கைப்பற்ற நினைக்குது மனமே
கைக்குக் கைமாறும் பணமே - உன்னைக்
கைப்பற்ற நினைக்குது மனமே - நீ
தேடும் போது வருவதுண்டோ - விட்டுப்
போகும் போது சொல்வதுண்டோ? - நீ
தேடும் போது வருவதுண்டோ - விட்டுப்
போகும் போது சொல்வதுண்டோ?

காசே தான் கடவுளப்பா அந்த
கடவுளுக்கும் இது தெரியுமப்பா

அளவுக்கு மேலே பணம் வைத்திருந்தால்
அவனும் திருடனும் ஒன்றாகும்
அளவுக்கு மேலே பணம் வைத்திருந்தால்
அவனும் திருடனும் ஒன்றாகும்
வரவுக்கு மேலே செலவுகள் செய்தால்
அவனும் குருடனும் ஒன்றாகும்
களவுக்குப் போகும் பொருளை எடுத்து
வறுமைக்குத் தந்தால் தருமமடா
களவுக்குப் போகும் பொருளை எடுத்து
வறுமைக்குத் தந்தால் தருமமடா
பூட்டுக்கு மேலே பூட்டைப் போட்டு
பூட்டி வைத்தால் அது கருமமடா

காசே தான் கடவுளப்பா அந்த
கடவுளுக்கும் இது தெரியுமப்பா

கொடுத்தவன் விழிப்பான் எடுத்தவன் முழிப்பான்
அடுத்தவன் பார்த்தால் சிரிப்பானே
கொடுத்தவன் விழிப்பான் எடுத்தவன் முழிப்பான்
அடுத்தவன் பார்த்தால் சிரிப்பானே
சிரித்தவன் அழுவதும் அழுதவன் சிரிப்பதும்
பணத்தால் வந்த நிலை தானே
சிரித்தவன் அழுவதும் அழுதவன் சிரிப்பதும்
பணத்தால் வந்த நிலை தானே
கையிலும் பையிலும் ஓட்டமிருந்தால்
கூட்டமிருக்கும் பின்னோடு
தலைகளை ஆட்டும் பொம்மைகளெல்லாம்
தாளங்கள் போடும் பின்னோடு

காசே தான் கடவுளப்பா அந்த
கடவுளுக்கும் இது தெரியுமப்பா
கைக்குக் கைமாறும் பணமே - உன்னைக்
கைப்பற்ற நினைக்குது மனமே - நீ
தேடும் போது வருவதுண்டோ - விட்டுப்
போகும் போது சொல்வதுண்டோ? - நீ
தேடும் போது வருவதுண்டோ - விட்டுப்
போகும் போது சொல்வதுண்டோ?
காசே தான் கடவுளப்பா அந்த
கடவுளுக்கும் இது தெரியுமப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விவேக் தமிழ் சினிமாவின் ஈடு இணையில்லா காமெடி நடிகர்களில் ஒருவர். ஆனால், இவர் மிகச் சிறந்த குணச்சித்திர நடிகரும் கூட. ஒரு காமெடியனாக சிரிக்கவும் வைப்பார். நான் தான் பாலா மூலம் அழவும் வைப்பார். அந்த வகையில் ஒரு நாயகனாக விவேக் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள சில வருடங்களாக போராட, இந்த வெள்ளைப்பூக்கள் வழி செய்ததா? பார்ப்போம்.

விவேக் ஓய்வு பெற்ற காவல் அதிகாரி. அமெரிக்காவில் இருக்கும் தன் மகன் வீட்டிற்கு செல்கின்றார். மகன் வெளிநாட்டு பெண்ணை திருமணம் செய்ததால், தன் மகனிடம் விவேக் பேச மறுக்கின்றார்.

பிறகு அவரிடம் பேசினாலும், மருமகளிடம் பேசுவதே இல்லை. அந்த சமயத்தில் விவேக் வீட்டிற்கு அருகே இருக்கும் பெண் திடீரென்று காணாமல் போகின்றார்.

அதை தொடர்ந்து ஒரு வாலிபரும் கடத்தப்பட, ஒரு கட்டத்தில் விவேக்கின் மகனும் கடத்தப்பட, அதன் பிறகு என்ன ஆனது என்பதை விவேக் கண்டு பிடிக்கும் விறுவிறுப்பான திரைக்கதை தான் இந்த வெள்ளைப்பூக்கள்.

அமெரிக்காவில் இருந்து யாரோ எடுத்திருக்கிறார்கள். படம் நல்லா இருக்குமா? நம்ம் ஊர் மக்களுக்கு பிடிக்குமா என்ற மனநிலையில் தான் பலரும் படத்திற்கு வந்தார்கள்.

ஆனால், படம் செம்ம விறுவிறுப்புடன் தான் செல்கின்றது. ஒரு கட்டத்திற்கு மேல் அடுத்த என்ன, அடுத்த என்ன என்று நம்மை கதையை விட்டு நகரவிடாமல் கொண்டு செல்கின்றது.

விவேக் ஒரு ஓய்வு பெற்ற பொலிஸாகவும், கோபமான அப்பாவாகவும் மிரட்டியுள்ளார். விவேக்கின் பெஸ்ட் திரைப் படங்களில் இதுவும் ஒன்று. அதிலும் தன் மகன் கடத்தப்பட்ட பிறகு அவர் கண் கலங்கும் காட்சி நமக்கே அட இது விவேக் தானா என்று ஒரு நொடி யோசிக்க வைக்கின்றது. சுப்பர்விவேக் சேர்.

சார்லீ தன் யதார்த்தமான நடிப்பில் ஸ்கோர் செய்கின்றார். படத்தின் டெக்னிக்கல் விடயங்களான ஒளிப்பதிவு, எடிட்டிங், இசை என அனைத்தும் தரம், கண்டிப்பாக ஒரு நல்ல படத்தை பார்த்த அனுபவத்தை தான் தரும்.

விவேக்கின் வித்தியாசமான நடிப்பு படத்தின் திரைக்கதை பெரிதாக சொல்ல ஏதுமில்லை. மொத்தத்தில் வெள்ளைப்பூக்கள் ஒரு சர்ப்ரேஸ் பரிசு தான்.




லாரன்ஸ் எப்போதெல்லாம் தன் மார்க்கெட்டில் சறுக்குகிறாரோ, அப்போதெல்லாம் ஒரு காஞ்சனா படத்துடன் வந்துவிடுகின்றார். ரஜினி, கமல், விஜய், அஜித் தாண்டி ரூபாய் 100 கோடி கிளப்பில் இணைந்த நடிகர் என்றால் லாரன்ஸ், அதுவும் இவர் நடித்த படங்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அந்த அளவிற்கு இந்த காஞ்சனா சீரியஸிற்கு ரசிகர்கள் அதிகம். அந்த வகையில் இந்த முறையும் லாரன்ஸ் வெற்றி பெற்றாரா? பார்ப்போம்.

காஞ்சனா சீரியஸில் என்ன கதை என்று நாங்கள் சொல்லி தெரிய வேண்டியது இல்லை. இதை தொடர் கதையாக இல்லாமல், ஒரு கான்செப்ட் வைத்து லாரன்ஸ் புது புது கதையாக எடுத்து வருகின்றார்.

அந்த வகையில் இந்த முறை தாத்தாவின் 60வது கல்யாணத்திற்கு செல்லும் லாரன்ஸ் குடும்பம், ஒரு இடத்தில்வண்டியை நிறுத்தி சாப்பிட முடிவு செய்கின்றனர்.

அந்த இடத்தில் தான் மிக கொடூரமான பேய் ஒன்றை ஆணியில் அடித்து வைக்க, அதை லாரன்ஸ் யதார்த்தமாக பிடுங்க, பிறகு என்ன அந்த பேய் லாரன்ஸுடன் வீட்டிற்கு வந்து, அவர் மேல் ஏறி, தன்னுடைய ஆசையை நிறைவேற்றுகின்றது.

காஞ்சனா சீரியஸின் மிகப்பெரிய ஹிட்டிற்கு காரணமே ஹாரர் என்பதை விட காமெடி தான், அதிலும் கோவை சரளா என்ன தான் ஓவர் ஆக்டிங் என்றாலும், அது தான் அவரின் ப்ளஸ்ஸாக அமைந்து விடும், அதை கடைசி பாகத்தில் விட்ட லாரன்ஸ் இதில் பிடித்துவிட்டார், அப்படியே காஞ்சனா-2 வின் [illegible] களை மட்டும் [illegible] எப்படியிருக்கும். அது தான்காஞ்சனா-3.

அதிலாவது லட்சுமி ராய் ஒருவர் இருந்தார், இதில் வேதிகா, ஓவியா, ஒரு புதுமுக நடிகை என மூன்று ஹீரோயின்கள், லாரன்ஸை சுற்றி சுற்றி காதலிக்கின்றனர், அவர்களுடன் ஜாலி, கலாட்டா என செல்ல, இரவு ஆனதும் பேய் வேலையை காட்ட ஆரம்பிக்கின்றது. அந்த காட்சிகள் எல்லாம் உண்மையாகவே நல்ல த்ரில்லங்காக எடுத்துள்ளனர்.

அதே நேரத்தில் காமெடிக்கும் பஞ்சமில்லை, காஞ்சனா-2வில் வந்தது போலவே பேய் இருக்கிறதா? என டெஸ்ட் செய்யும் காட்சிகள் எல்லாம் அதிரிபுதிரி சிரிப்பு, தியேட்டரே வெடித்து சிரிக்கின்றது, அதை தொடர்ந்து லாரன்ஸ் மேல் பேய் வந்ததும் அவர் செய்யும் வேலைகள் என கவர்கின்றது.

ஆனால், எப்போதும் ப்ளாஷ்பேக் காட்சிகள் நல்ல எமோஷனலாக வைக்கும் லாரன்ஸ், இதில் கொஞ்சம் ஓவர் எமோஷனலாக வைத்துவிட்டார், அதை விட நிறையவே சுயதம்பட்டம் தெரிகின்றது, இடையிடையே முக்கியமான கட்சி தலைவர் ஒருவரையும் அண்ணா, அண்ணா என்று சீண்டியுள்ளார்.

இரண்டாம் பாதி ப்ளாஷ்பேக் காட்சிகள் இன்னும் கொஞ்சம் எமோஷனல் நன்றாக இருந்திருந்தால் முழுமையாக ரசித்து இருக்கலாம்.

ஒளிப்பதிவு அந்த பங்களாவில் எங்கு பேய் வரும் என கமராவை கொண்டு போகும் போதே நமக்கு பயம் ஒட்டிக் கொள்கிறது, இதற்கு தமனின் பின்னணி இசையும் பலம்.

படத்தின் முதல் பாதி செம்ம கலகலப்பாக செல்கின்றது.

கோவை சரளா, தேவதர்ஷினி, ஶ்ரீமன் என அனைவரும் காமெடியில் கலக்கியுள்ளனர்.

படத்தின் பின்னணி இசை, படத்தின் ப்ளாஷ்பேக் காட்சியின் நீளத்தை கொஞ்சம் குறைத்திருக்கலாம்.

லொஜிக் மீறல், அதை விட சொந்த முறை பெண்ணையே பிகர் என்று சொல்வது போன்ற காட்சிகள், லாரன்ஸ் அதை அடுத்த பாகத்திலாவது தவிர்த்து விடுங்கள்.

மொத்தத்தில் காமெடி, ஹாரர் என நாம் எதிர்ப் பார்த்தது அனைத்தும் படத்தில் அருமையாக வர, ப்ளாஷ்பேக் மட்டும் கொஞ்சம் பொறுமை இருந்தால், நீங்கள் காஞ்சனா-4க்கும் காத்திருக்கலாம்.




# சேது பொறியியல் கல்லூரி

தன்னாட்சி பெற்ற கல்லூரி | NAAC 'A' தரச்சான்றிதழ் பெற்றது
அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது



4800க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலும் கல்லூரி

| கல்லூரிக்கு வருகை தந்த நிறுவனங்கள் | வேலை நியமன ஆணை பெற்றவர்கள் | வேலை நியமன ஆணை பெற்றவர்கள் சதவீதம் |
| --- | --- | --- |
| 110 | 878 | 95% |

ஶ்ரீலங்கா மாணவர்களுக்கு 40%
சிறப்பு கல்வி ஊக்கத்தொகை

SETHU INSTITUTE OF TECHNOLOGY
25 YEARS OF SERVICE

Website : www.sethu.ac.in • Email : sit@sethu.ac.in

JOIN SIT FOR GLORIOUS FUTURE!
A Gateway to Knowledge and Success

Admissions OPEN

- தென் தமிழகத்தில் மிக அதிகமான பன்னாட்டு நிறுவனங்களின் வேலை வாய்ப்பினை பெற்று தரும் ஒரே கல்லூரி
- சர்வதேச மாணவர் (NRI / FN / PIO / OCI / CIWGC) சேர்க்கைக்கான அனுமதி
- பல்வேறு துறைகளுக்கு NBA தரச்சான்றிதழ் தொடர்ச்சியாக பெறப்படுகிறது.
- பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலம் ஆய்வுப்பணிகளுக்காக ரூ.5.6 கோடி பெறப்பட்டுள்ளது
- இந்தியாவில் தலைசிறந்த 75 தனியார் பொறியியல் கல்லூரிகளில் ஒன்றாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது – டைம்ஸ் ஆய்வு
- வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)
- மாணவர்களின் புதுமையான கண்டுபிடிப்புகள் மற்றும் ஆய்வுகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை
- நூற்றுக்கும் அதிகமான முனைவர் (Ph.D) பட்டம் பெற்ற பேராசிரியர்கள்
- சர்வதேச TOASTMASTERS நிறுவனம் மூலம் சிறப்பு ஆங்கில மொழி பயிற்சி
- பிரஞ்சு, ஜப்பான் மற்றும் ஜெர்மன் போன்ற பன்னாட்டு மொழிகளில் பயிற்சி
- 12 கண்டுபிடிப்புகளுக்கான காப்புரிமைகள் (Patent Rights)
- சுத்திகரிக்கப்பட்ட சுகாதாரமான குடிநீர் மற்றும் பசுமையான சுற்றுச்சூழல்
- 75க்கும் மேற்பட்ட பேருந்துகள் மூலமாக எல்லாப் பகுதிகளுக்கும் போக்குவரத்து வசதி
- ஆண், பெண் இருபாலருக்கும் தனித் தனி விடுதி வசதி
- நவீன வசதிகளுடன் கூடிய நூலகம் மற்றும் ஆய்வகங்கள். Wi-fi வசதியுடன் கூடிய வளாகம்
- மருத்துவ வசதி மற்றும் 24 மணி நேர ஆம்புலன்ஸ் சேவை
- சர்வதேச உணவகம் மற்றும் Lift வசதி
- மதுரை பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து 15 நிமிட பயணத்தில் கல்லூரி கொழும்பு, துபாய் மற்றும் சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்கு நேரடி விமான சேவை

## COURSES OFFERED

4 Years B.E. / B.Tech. Degree courses

- B.E. Mechanical Engineering
- B.E. Computer Science and Engineering
- B.E. Electronics and Communication Engineering
- B.E. Electrical and Electronics Engineering
- B.Tech. Information Technology
- B.E. Civil Engineering
- B.Tech. Chemical Engineering
- B.E. Agriculture Engineering
- B.E. Biomedical Engineering

## Post Graduate Courses

- M.E. CAD/CAM
- M.E. Computer Science and Engineering
- M.E. Communication Systems
- M.E. Power Electronics and Drives
- M.E. Structural Engineering

Pulloor-626 115, Kariapatti, Virudhunagar Dt. Tamilnadu,India. Ph:+914566-308001-04 | 82200 07050,73970 02277
Admn Off: Plot No.392, Anna Nagar, Madurai - 625 020,Tamilnadu,India. Ph:+91452-2532215,2538294
Local Contact : Ruwani Perera, SR Global Services Pvt Ltd., 75/3,Barnes Place, Colombo 07, Sri Lanka
Mobile: +94 77 227 0213 | Off: +94 112 677 185 | Mail id : ruwanip.srglobalservices@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பர் போமில் டோனி



சென்னையில் ஏப்ரல் 9-ம் திகதி நள்ளிரவு வரை கொல்கத்தாவுடன் விளையாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அடுத்த 6வது மணி நேரத்தில் அதாவது காலை 5 மணிக்கெல்லாம் ஜெய்ப்பூருக்கு ப்ளைட் பிடிக்க சென்னை விமான நிலையத்தில் இருந்தது. ஒரு நாள் இடைவெளியில் ராஜஸ்தான் ராயல்ஸுடன் மட்ச். சென்னை அணி சோர்வாக இருக்கும் என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தனர்.

2019 ஐபிஎல் சீசனின் முதல் சுற்றை வெற்றிகரமாக முடித்துவிட்டது சென்னை சுப்பர் கிங்ஸ். 7 போட்டிகளில் 6-ல் வெற்றி. இதில் கடைசியாக ராஜஸ்தானிடம் பெற்ற த்ரில்லிங் வெற்றிதான் நெயில் பைட்டர். பவர் ப்ளே ஓவர்களிலேயே 4 விக்கெட்டுகள் போய்விட டோனியும், ராயுடுவும் பார்ட்னர்ஷிப்போட்டு கரைசேர முயற்சி செய்ய கடைசி ஓவரில் பல களேபரங்கள்... சென்னை வென்றது எப்படி?!


சென்னையில் ஏப்ரல் 9ஆம் திகதி நள்ளிரவு வரை கொல்கத்தாவுடன் விளையாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அடுத்த 6 மணி நேரத்தில் அதாவது காலை 5 மணிக்கெல்லாம் ஜெய்ப்பூருக்கு ப்ளைட் பிடிக்க சென்னை விமான நிலையத்தில் இருந்தது. ஒரு நாள் இடைவெளியில் ராஜஸ்தான் ராயல்ஸுடன் மட்ச். சென்னை அணி சோர்வாக இருக்கும் என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால், நடந்தது வேறு!

### நாணயச் சுழற்சி

நாணயச் சுழற்சியில் வென்ற டோனி களத்தடுப்பைத் தேர்ந்தெடுத்திருந்தார். ராஜஸ்தான் ராயல்ஸ் அணியில் வலது கை பட்ஸ்மேன்கள் அதிகம் என்பதால் இரண்டு இடது கை ஸ்பின்னர்களுடன் களமிறங்குவது என முடிவெடுத்து ஹர்பஜனுக்கு பதிலாக மிட்ச்செல் சான்ட்னரை களமிறக்கினார் டோனி. சான்ட்னர் உள்ளே வந்ததால் வாட்ஸன், டுப்ளெஸ்ஸி, தாஹீர் என வெளிநாட்டு வீரர்களின் ஸ்லாட் முழுமையானதால் ஸ்காட் குகலினுக்கு பதிலாக ஷ்ரதுல் தாக்கூர் அணிக்குள் வந்திருந்தார். ராஜஸ்தானும் அஸாமைச் சேர்ந்த 17 வயது ஓல்ரவுண்டர் ரியான் பராக்கை அணிக்குள் கொண்டுவந்திருந்தது.

### விக்கெட் மேல் விக்கெட்!

பவர்ப்ளே ஓவர்களில் சாஹர், சான்ட்னர், தாக்கூர் என மூன்று பௌலர்களைப் பயன்படுத்தினார் டோனி. சாஹரின் ஓவரில் ரஹானே 14 ரன்களிலும், தாக்கூர் ஓவரில் பட்லர் 23 ரன்களிலும் அவுட் ஆக, சான்ட்னரின் ஓவரில் 6 ரன்களுக்கு சஞ்சு சாம்சன் அவுட் பவர்ப்ளே முடிவில் 54 ரன்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்திருந்தது ராஜஸ்தான். அதன்பிறகும் விக்கெட்டுகள் விழுவது தொடர்ந்து கொண்டேயிருந்தது. த்ரிபாதி, ஸ்மித் என அடுத்தடுத்த ஓவர்களில் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார் ரவீந்திர ஜடேஜா. இதனால் 11 ஓவர்களில் 79 ரன்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்துவிட்டது ராஜஸ்தான்.




இளம் வீரர் பராக், ஸ்டோக்ஸுடன் கூட்டணி சேர்ந்தார். இவர்களின் பார்ட்னர்ஷிப் 4 ஓவர்கள் வரை தாக்குப்பிடித்தது. 16 ரன்களில் தாக்கூர் பராக்கை அவுட் ஆக்கினார். டெத் ஓவர்களில் சிக்ஸர்களாகப் பறக்கவிடுவார் என ஸ்டோக்ஸை எதிர்பார்த்து ராஜஸ்தான் ரசிகர்கள் காத்திருக்க, 19ஆவது ஓவரில் ஸ்டோக்ஸ் அவுட் 26 பந்துகளில் 28 ரன்கள் எடுத்திருந்தார் ஸ்டோக்ஸ். கடைசி ஓவர் தாக்கூர். ஒரு சிக்ஸர், இரண்டு பவுண்டரிகள் எனக் கடைசி ஓவரில் 18 ரன்கள் எடுக்க மொத்தமாக 151 ரன்களை தொட்டது ராஜஸ்தான்.

### அதிர்ச்சியில் ஆரம்பித்த சென்னை!

சென்னை சுப்பர் கிங்ஸின் டாப் ஆர்டரும் மடமடவென விழுந்தது. முதல் ஓவரின் நான்காவது பந்திலேயே வாட்ஸன் அவுட் 2019 ஐ.பி.எல்லில் வாட்சனின் மோசமான பார்ம் தொடர்கிறது. இரண்டாவது ஓவரில் 4 ரன்களுக்கு ரெய்னா ரன் அவுட். நான்காவது ஓவரில் டுப்ளெஸ்ஸி அவுட். 6வது ஓவரில் கேதர் ஜாதவ் அவுட் என பவர் ப்ளேவுக்குள் 4 விக்கெட்டுகளை அடுத்தடுத்து இழந்தது சென்னை. பவர் ப்ளேவின் முடிவில் சென்னையின் ஸ்கோர் 24/4.

ராயுடுவும் - டோனியும் எந்த அவசரமும் காட்டாமல் மோசமான பந்துகளை மட்டும் பவுண்டரிக்கு விரட்டி நிதானமாக ஆடினார்கள். 10 ஓவர்களின் முடிவில்தான் சென்னையின் ஸ்கோர் 50 ரன்களைத் தொட்டது. இதனால் அடுத்த 60 பந்துகளில் 102 ரன்கள் சேர்க்கவேண்டும் என ரன்ரேட் எகிறியது. அதுவரை ஓவருக்கு 5-8 ரன்கள் அடித்துக்கொண்டிருந்த டோனி- ராயுடு கொஞ்சம் கொஞ்சமாக கியரை டாப் கியருக்கு மாற்றினார்கள். இதனால் ஒவ்வொரு ஓவரும் 10 ரன்களுக்கு மேல் தாண்டியது. இதனால் 15 ஓவர்களில் முடிவில் 101 ரன்களை அதாவது 30 பந்துகளில் 51 ரன்களைத் தொட்டது சென்னை சுப்பர் கிங்ஸ்.

கடைசி 3 ஓவர்களில், 18 பந்துகளில் 39 ரன்கள் அடிக்க வேண்டும் என மேட்ச், த்ரில்லிங் மோடுக்குத் தாவியது. ஆனால் ஸ்டோக்ஸின் 18வது ஓவரில் ராயுடு அவுட். இந்த ஓவரில் 9 ரன்கள் மட்டுமே கிடைக்க, கடைசி 12 பந்துகளில் 30 ரன்கள் என சேஸிங்டார்கெட் எகிறியது. 19ஆவது ஓவரை ஆர்ச்சர் மிகச்சிறப்பாக வீசினார். பௌண்டரிகள் அடிக்க முயன்ற டோனியால் அது முடியவில்லை. அதனால் இரண்டு இரண்டு ரன்களாக சேர்த்து, ஒரு கட்டத்தில் மூச்சு வாங்கி கீழே விழுந்தார் டோனி. சில நிமிட ஓய்வுக்குப் பிறகு மீண்டவர் கடைசி பந்தில் பவுண்டரி அடிக்க இந்த ஓவரில் 12 ரன்கள் கிடைத்தது.

கடைசி 6 பந்துகளில் 18 ரன்கள். பென் ஸ்டோக்ஸ் பந்துவீச வந்தார். முதல் பந்தில் ஜடேஜா கீழே விழுந்தாலும் பந்தை ஸ்ட்ரெய்ட் சிக்ஸருக்குப் பறக்கவிட்டார். அடுத்த பால் நோ பால். ஒரு ரன் அடித்துவிட்டு ஓடினார் ஜடேஜா. ஸ்ட்ரைக்கிற்கு வந்தார் டோனி. ப்ரீ ஹிட்டில் இரண்டு ரன்கள் அடித்தார் டோனி. 4 பந்துகளில் 8 ரன்கள் அடிக்க வேண்டும்.


டோனி க்ளீன் போல்டு. 43 பந்துகளில் 58 ரன்கள் அடித்திருந்தார் டோனி. இதில் 32 ரன்கள் ஓடி ஓடி எடுத்தது. சான்ட்னர் க்ரீஸுக்கு வந்தார். ஸ்டோக்ஸ் வீசிய நான்காவது பந்து இடுப்புக்கு மேல் புல் டாஸாக வரை அதை 2 ரன்களுக்கு அடித்துவிட்டு ஓடினார் சான்ட்னர்.

இடுப்புக்கு மேல் ஃபுல் டாஸாக வந்த பந்தை முதலில் நோபோல் காட்டிய அம்பயர், லெக் அம்பயரை பார்த்ததும் முடிவை மாற்றிக் கொண்டு நோபோல் இல்லை என்று மறுத்துவிட்டார். இதனால் Dugout இல் இருந்த டோனி கடுப்பானார். கைகளை உயர்த்தி நோபோல் எனச் சத்தம் போட்டவர் ஒரு கட்டத்தில் மைதானத்துக்குள் வந்தார்.

இரண்டு அம்பயர்களுடனும் வாக்குவாதம் செய்தார். நோபோல் காட்டிய அம்பயரை கைகளை நீட்டி பேசிக்கொண்டிருந்தார் டோனி. ஆனால், நோபோலாக அது அறிவிக்கப்படவில்லை. இதனால் 2 பந்துகளில் 6 ரன்கள் தேவை என ஆட்டம் மாறியது. அடுத்த பந்தில் 2 ரன்கள் அடித்தார் சான்ட்னர். கடைசி பந்தில் 4 ரன்கள் தேவை. ஆனால், அடுத்த பந்தை வைடாக வீசினார் ஸ்டோக்ஸ். இதனால் கடைசி பந்தில் 3 ரன்கள் தேவை என ஆட்டம் பரபரப்பின் உச்சத்தைத் தொட்டது. இரண்டு ரன்கள் அடித்தால் ஆட்டம் டையாகும், சுப்பர் ஓவருக்குப் போகும் என விறுவிறுப்பு கூடியது. ஆனால், கடைசி பந்தை ஸ்ட்ரெய்ட் சிக்ஸருக்குப் பறக்கவிட்டார் சான்ட்னர். சென்னை சுப்பர் கிங்ஸ் வெற்றி பெற்றது. டோனி மான் ஒப் த மட்ச் விருது வென்றார்.

7 போட்டிகளை விளையாடி முடித்திருக்கும் சென்னை 12 புள்ளிகளுடன் பாயின்ட்ஸ் டேபிளில் முதலிடத்தில் இருக்கிறது. கொல்கத்தா நைட் ரைடர்ஸ், மும்பை இந்தியன்ஸ் ஆகிய அணிகள் 6 போட்டிகளில் விளையாடி 8 புள்ளிகளுடன் அடுத்தடுத்த இடங்களில் இருக்கின்றன.


கிங்ஸ் லெவன் பஞ்சாப் நான்காவது இடத்தில் இருக்கிறது. இரண்டாம் கட்டத்தை நோக்கி வேகவேகமாக நகர்கிறது ஐபிஎல் 2019.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

facebook

# எல்லா உயிர்களுக்கும் உதவி செய்




ஒரு நாட்டு ராஜாவிடம் முத்தன் வேலை செய்து வந்தான். அந்த ராஜாவுக்கு மிருகங்கள் பறவைகள் பேசும் பாஷை தெரியும். முத்தனுக்கு ஒரே ஆச்சரியம், எப்படி ராஜா விலங்குகள் பேசுவதை அறிந்து கொள்கிறார் என்பது அவனுக்கு வியப்பாக இருந்தது. முத்தன் தான் அந்த ராஜாவுக்கு தினமும் உணவு கொண்டு கொடுப்பான். ராஜாவின் உணவில் ஒரு பகுதி மட்டும் தனியாக தனிப் பெட்டியில் ராணியே சமைத்துத் தருவாள். ஒரு நாள் முத்தன் அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தான். அந்த பெட்டிக்குள் ஏதோ துண்டு துண்களாக சமைத்து வைக்கப் பட்டிருந்தன. இது என்னவாக இருக்கும் என்று ஒரு துண்டை எடுத்து சாப்பிட்டுப் பார்க்கிறான். அதைச் சாப்பிட்டதும் முத்தனுக்கு பறவை,மிருகங்களின் பேசும் பாஷை புரிய ஆரம்பிக்கிறது. புதிய சக்தி கிடைத்ததும் அவன் அரண்மனையில் இருந்து அப்படியே புறப்பட்டு கிளம்பி விடுகிறான்.

அவன் குதிரையில் கிளம்பிச் செல்லும் வழியில் எறும்புகள் சாரை சாரையாக போவதை பார்த்தான், எறும்பின் தலைவன் இவனிடம் குதிரையை எறும்புகளை மிதிக்காத வண்ணம் செலுத்தும் படி வேண்டிக் கொண்டது. அவனும் அப்படியே செய்தான். எறும்புகள் நன்றி தெரிவித்து, என்றேனும் உங்களுக்கு உதவுவேன் என்று கூறியது.

அடுத்து, அவன் செல்லும் வழியில் குளம் இருந்தது. அங்கு மூன்று மீன்கள் அழும் குரல் கேட்டது. அவை புதருக்குள் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தன. குளத்தில் தாவிக் குதிக்கும் போது அவை தவறிப் புதரில் விழுந்திருந்தன. அத்தனையும் காப்பாற்றி தண்ணீருக்குள் மீண்டும் எடுத்துவிட்டு கிளம்பினான். மீன்களும் நன்றி தெரிவித்தன.

அவன் கொஞ்ச தூரம் ஒரு காட்டைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தான். சின்னஞ்சிறு காகங்களின் குரல் கேட்டது. தாய் காக்கை அவைகளிடம் "நீங்களே உங்கள் உணவைத் தேடிக் கொள்ளுங்கள்" என்று கூறி மரத்தில் இருந்து கீழே தள்ளி விட்டிருந்தது. அவைகளுக்கு தானியங்களை உணவாக கொடுத்துவிட்டு கிளம்பினான். அவை மிகுந்த மகிழ்ச்சியுடன் நன்றி கூறின. அதன் பின் காட்டைக் கடந்து அவன் வேறு ஒரு நாட்டுக்குள் நுழைந்தான். ஊரே கோலாகலமாக இருந்தது.

அந்த நாட்டு இளவரசி தன் கணவனைத் தேர்ந்தெடுக்கும் சுயம்வரம் நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தாள். வேலைக்காரனுக்கு ஆசை, எப்படியும் இந்தப்போட்டியில் கலந்து கொண்டு நாம் இந்த நாட்டின் அரசனாக வேண்டும் என ஆசைப்பட்டான். போட்டியில் கலந்து கொண்டான். போட்டியில் வெற்றி பெறவில்லை என்றால் சிறையில் தள்ளி விடுவார்கள். போட்டி ஆரம்பம் ஆனது. அவனை ஒரு குளத்திற்குக் கூட்டிப் போனார்கள். குளத்திற்குள் ஒரு மோதி ரத்தை போட்டு அதனை எடுக்க வேண்டும் என கட்டளையிட்டார்கள். அவன் பயந்து மலைத்து நின்றான். குளத்திற்குள் நீந்த ஆரம்பித்த அவனுக்கு ஆச்சரியம்....! "இதோ உங்கள் மோர்திரம்" என்று ஒரு குரல் கேட்டது. ஒரு மீன் தன் வாயில் மோதிரத்தைக் கவ்விக் கொண்டு வந்திருந்தது. அது அவன் புதரிலிருந்து காப்பாற்றிய மீன். இளவரசி அடுத்த போட்டி வைத்தாள். ஒரு மூட்டை அரிசி முழுவதும் தோட்டத்தில் கொட்டப்பட்டு விடி வதற்குள் ஒரு அரிசி விடாமல் சேகரிக்க வேண்டும். ஆகா இது நடக்கவே நடக்காது நமக்கு சிறை தான் என்று முடிவு செய்து அவன் தூங்கி விட்டான். அவன் உதவி இருந்த எறும்புகள் ஒவ்வொன்றாக பொறுக்கி ஒரு மூட்டையில் வைத்திருந்தது. அதனால் அதிலும் ஜெயித்து விட்டான். இறுதியான போட்டி ஒரு தங்க அப்பிள் காய்க்கும் மரம் காட்டில் இருக்கிறது- அதைக் கண்டுபிடித்து அப்பிளை எடுத்து வர வேண்டும். அவன் இருட்டும் வரை தேடினான் பசுமை மரங்கள் மட்டுமே இருந்தன. தங்க மரத்தைக் காணவே இல்லை. கவலையுடன் இருட்டியபிறகு தூங்கி விட்டான். காலையில் எழுந்து பார்க்கிறான். அவன் அருகில் தங்க அப்பிள் இருந்தது. அவனிடம் உதவி பெற்ற காகங்கள் அந்த அப்பிளைத் தேடிக் கொண்டு வந்து அவனிடம் போட்டிருந்தன. அவன் அவைகளுக்கு நன்றி தெரிவித்தான். எல்லா போட்டியிலும் ஜெயித்ததால் அவனை இளவரசி மணந்து கொண்டாள். அவன் ராஜாவாக அவளுடன் அந்த நாட்டை மகிழ்ச்சியுடன் வெகு நாள் ஆட்சி செய்தான். நாம் செய்த உதவி வீணாகாது. அது நமக்கு ஏதாவதொரு வகையில் எப்போதாவது பயன்தரும்.

நாம் யாரேனும் ஒருவருக்கு உதவி செய்துவிட்டு மறந்து விட்டாலும்கூட அது பின்னொரு நாளில் நமக்கு யார் வாயிலாகவாவது கிடைக்கும்.

செய்த உதவியும் இட்டு வைத்த விதையும் வீணாகப் போகாது மிக மிக அவசியமான நேரத்தில் செய்யப்படும் உதவி இந்த உலகை விட மிகப் பெரியது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1699

Search for people, places and things

### சரவணன்

காலையில் 9 மணிக்கு புறப்பட்டு மாலை 6 மணிக்கு வீடு திரும்பி சொந்த ஊரில் வேலை செய்யும் அனைவரும் பாக்கியசாலிகள்



### குகதாசன் சுரேன்

வானத்தில் பறந்த வானூர்திகளை அதிசயமாய் பார்த்த காலம் போய் இப்போது சிட்டுக்குருவிகளை அதிசயமாகப் பார்க்கிறோம்



### குணசீலன்

நம்மை ஏளனமாகப் பார்ப்பவரை அடிக்கடி சந்திக்க வேண்டும். அப்போதுதான் வாழ்ந்து காட்டவேண்டும் என்ற எண்ணம் அதிகமாகும்



### ஜெயரூபன்

யாரால் வாழ்க்கையை நேசிக்கக் கற்றுக் கொள்கிறோமோ அவர்களால் தான் வாழ்க்கையை வெறுக்கவும் கற்றுக் கொள்கிறோம்



### ஜனார்த்தனன்

எதுவுமே இல்லாத ஏழைகளிடம்தான் ஏகப்பட்ட நல்ல குணங்கள் கொட்டிக் கிடக்குது



### விஜிதரன்

நம் தவறுகளிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடமே உயர்வாக வாழ்க்கைக்கு நம்மை இட்டுச் செல்லும்- அப்துல் கலாம்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 178

# சிறுவரும் மைதான விளையாட்டும்
## (CHILD AND PLAY GROUND)



"ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்து இருத்தலாகாது பாப்பா" என்பது எம் பாரதியாரின் அருமையான பாப்பாபாட்டு. இங்கு சிறுவர்க்கு ஓடி விளையாடுவது எவ்வளவு முக்கியம் என்று அன்றே எமக்கு பாட்டின் மூலம் செய்தி சொல்லி உள்ளார்.

விளையாட்டு மைதானம் (Playground) என்பது 1850 ஆம் ஆண்டில் முதன் முதலாக இங்கிலாந்திலேயே அறிமுகமானது. படிப்படியான கால ஓட்டத்தில் இதன் தேவை, தோற்றம், கொள்ளளவு என்பன இன்று வரை மாற்றம் கொண்டேதான் இருக்கின்றது. இன்று சிறுவர்களிடையே மைதானவிளையாட்டை விடவும் குறித்த இடத்தினுள் விளையாடும் பழக்கமே அதிகமாகக் காணப்படுகின்றது. எனினும் இந்த மைதானத்திலேதான் சிறுவர்கள் ஓடி விளையாடலாம். இப்படி ஓடி விளையாடுவதால் ஏற்படும் நன்மைகள் பற்பல.

அவையாவன.

- சந்தோசம் (Fun). நிகழ்காலத்தில் விளையாட்டு ஊடாக கல்வி என்பதே பொருள். இங்கு இவர்கள் மைதானத்தில், வெட்ட வெளியில், ஓடி விளையாடுகையில், மண்ணில் கால் துள்ளி துள்ளி ஆடுகையில், கையை விரித்து பறவைபோல் பறக்கும் போது, வளைந்து ஓடும் போது ஏற்படும் ஆனந்தத்தை யார் கொடுக்கமுடியும். சிறுவர்கள் தம் உடலை தாமே தூக்கி ஓடும் போதுதான் இந்த ஆனந்தம் அவர்களுக்குகிடைக்கும். இதனூடாக அவர்கள் கற்கின்றார்கள் (Learn).
- சமூகத்திடையே முதன் முதல் விளையாட்டு ஊடாகவே பிரவே சிக்கின்றனர். (Community) விளையாடிக்கொண்டே தன் சமூகத்தைப் பார்க்கின்றனர். பழகுகின்றனர். அவதானிக்கின்றனர்.
- மைதான விளையாட்டுகளால் வாழ்க்கையில் ஒருபயிற்சியை இயற்கையாகப் பெறுகின்றனர். விளையாட்டின் பலபகுதிகளினூடாகவும், பயிற்சி, கற்றல் இரண்டும் இவர்களை எதிர்காலத்திற்கு வழிகாட்டுகின்றது.
- மைதானச் சூழல் ஆனந்தமானது. மகிழ்ச்சியானது. காற்றோட்டமானது. இங்கு இவர்களுக்கு கவனிப்புக்குறைவு / இல்லை (Care Free) என்றே கூறலாம். தாம் நினைத்த வாறே சிட்டுக்கள் போலப் பறந்து ஓடலாம். துள்ளிஓடலாம். விழலாம். எழும்பலாம். ஆடிப்பாடலாம். குதூகலிக்கலாம். யார் இந்த உணர்வை சிறுவர்க்கு கொடுப்பார்கள்? எம் சிறுவர்களின் இந்த பூரிப்பை எங்கு நாம் பெற்றுக் கொடுக்கலாம்? விளையாட்டு மைதானத்திலேதான் இவை கிடைக்கும்.



- பல பெரியார்கள், உளவியலாளர்கள், மருத்துவர்களின் கருத்துப்படி விளையாட்டு. மூளை விருத்திக்கு உதவுகின்றது என்பது உறுதியானது. பெரிய பரந்த நிலத்தில், மண்வெளியில், மர நிழலில், வெயிலில் , ஓடி ஆடி, காற்றைகையால் வீசியபடி ஓடித்திரிவது எவ்வளவு அழகு. இதனைச் செய்யும் எம் பட்டாம் பூச்சிகள் போன்ற சிறுவர்க்கும் மகிழ்ச்சி. இதனைப் பார்த்திருப்போர்க்கும் மகிழ்ச்சி.
- வாழ்க்கைத் திறன்களை அறிகின்றனர். அவற்றை மென் மேலும் விருத்தியாக்க மைதான விளையாட்டு உதவுகின்றது.
- சமூக, உளம்சார்ந்த ஆற்றல்கள் அவற்றைகையாளும் திறமைகள், அணுகும் வகைகள் என்பன மைதான விளையாட்டின் மூலம் வளர்கின்றது.
- உடலியக்கதிறன்கள்(Motor Skill) விருத்தி செய்யப்படும். தமது ஆற்றல்களை வெளிக் கொண்டுவர (explore) முடியும். தம்மால்தமது அடைவு மட்டத்தை (Limits) எதிர்வு கொண்டு விளையாட முயற்சிப்பார்கள்.

பயிற்சிகளினூடாக போட்டி போடும் மனப்பான்மை (Challenge) முன்னோக்கிய மனத் துணிவு என்பன உண்டாகின்றது.

- சமூகத்திறன்களை மேலும்வளர்க்க உதவும். அணுகுமுறை (Approach) சட்டவிதிகளை மதித்தல், மற்றவர்களை மரியாதை செய்தல், அனுபவம் மூலம் கற்றல் (Trical and error). அர்த்தமுள்ளநேரப் பயன்பாடு (Meaningfull), விட்டுகொடுத்தல் போன்ற பல திறன்கள் உருவாகின்றன. உறவுகளைப் பேணல், மதிப்பளித்தல்,நண்பர்களை உருவாக்குதல், தமது வயதுடையோரிடையேயான குழுக் களை (Peers) உறவு முறையுடன் அனுசரித்துப் பழகுதல், பகிருதல் போன்ற சமூக வாழ்க்கை திறன்கள் வளர மைதான விளையாட்டுக்கள் உதவி செய்கின்றன.
- தொடர்பாடல்முறைகளிற்கு ஒரு நல்ல பயிற்சி அளிக்கும் நிகழ்வாக மைதான விளையாட்டுக்கள் அமைகின்றன. ஒலி மூலம், சைகை மூலமான (Verbal / Non Verbal) வெளிப்பாடுகளை இலகுவில் அவதானிக்கும் திறன்கள், இதனை விளங்கிக் கொண்டு உடனடி செயற்றிறன்களை உண்டாக்கும் ஆற்றல்கள் வளர்கின்றன.
- எண்ணங்கள், சிந்தனைகள் விருத்தியடைய (Cognitive Skills) கின்றன. குழுஒன்றில் எப்படி விளையாடலாம் எனும் திறன் உருவாகும். குழு ஒன்றினுள் எப்படிஉள்வாங்கப்படலாம். சேர்ந்துவிளையாடலாம் எனும் ஆற்றல் அடைவார்கள். எப்படி வெற்றி பெறலாம் எனக் கற்பார்கள்.





என்ன சந்தர்ப்பங்களில்தோல்வியடையலாம் என்பதை அறிவார்கள். தோல்வி அடைந்தால் அவற்றிலிருந்து எப்படி மீளவும் மனதை பழையபடி (Coping Skills) மாற்றக் கற்றுக்கொள்வார்கள். தவறுகளை ஏற்றுக் கொள்வார்கள். (Mistake) அதிலிருந்துகற்பார்கள். மீண்டும் முயற்சி செய்வார்கள். முரண்பாடுகளை தீர்ப்பார்கள். (Resolve Conflict). விளையாட்டுக்களினூடாக ஒவ்வொரு சிறுவரினதும் மனதிடையே ஒரு துணிவு மனப்பான்மை (Confidence) ஏற்படும். புதிய பலவழிகளை, தொழில்நுட்பங்களை கண்டறிவார்கள் (Creativity). பிரச்சினைகளை தீர்க்கும் ஆற்றல் வளரும் (Problem Solving). சிலவேளை விளையாட்டில் தோல்வி எனில் அதற்குரிய காரணத்தை தாமே (reasoning) ஊகித்து அறிவார்கள். மீண்டும் ஒரு தடவை அதனை எப்படி வெற்றி கொள்ளலாம் என சிந்திப்பார்கள். புதியனவற்றை கண்டறிந்து செயற்படுத்துவார்கள்.

மைதான விளையாட்டு மூலம் உடல், உள, சமூக ஆற்றல்கள் வளர்கின்றன. விருத்தியடைகின்றன. எம் இனிய சிறுவர்களை மைதான விளையாட்டுக்களில் பங்குபற்ற ஊக்குவிக்கவேண்டும். விளையாட்டுப் பயிற்சிகளிற்கு உதவி செய்ய வேண்டும். விளையாட்டு உடனான ஆரோக்கியமான சிறுவர்களே நாளைய எம் தலைமுறை. இவர்களின் ஆனந்தமான ஆரோக்கியமான வாழ்விற்காக விளையாட்டுக்களில் பங்குபெறபெற்றோர்களும் ஆசிரியர்களும் உதவுவோம்.

திருமதி. சதானந்தி நந்தகுமாரன்
சிரேஷ்ட போதனாசிரியர்
தாதியக் கல்லூரி

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org